# இவள் ஒரு புதுக்கவிதை

## ரமணிசந்திரன்



# இவளொரு புதுக்கவிதை

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

உரக்கச் சத்தமிட்டு அழுது அவளுக்குப் பழக்கமில்லை, அவளுடைய பெற்றோரின் வளர்ப்பு அப்படி,

சின்ன வயதில் இருந்தே அப்படித்தான், காச் மூச்சென்று கத்தி அழுது ஆர்ப்பாட்டம் செய்தால் பலன் எப்போதுமே எதிரிடையாகத்தான் இருக்கும், சகோதரிகள் மூவருக்குமே அதே விதிமுறைதான், ரொம்ப அவுட்டுச் சிரிப்பு சிரித்தாலும் அப்பாவுக்குப் பிடிக்காது,

“பொம்பளை சிரித்தால் போச்சு” என்று கட்டுப்பாடு விதிக்க எனக்குப் பிடிக்காதும்மா, ஆனால். தெருவே அதிருகிற மாதிரி வேண்டாமே என்று இதமாகவே சொல்லுவார், விழுந்து விழுந்து சிரித்தாலும். வெறுப்பாய் நோக்கும் விதமாக இராமல் பிள்ளைகள் பழகிக் கொண்டார்கள்,

ஆனால் அங்கே சிரிப்பு நிறையவே இருந்தது, கேலியும் கிண்டலும் கலகலவென்ற சிரிப்புமான தாய்வீட்டு நினைப்பில் முகத்தை மூடிக்கொண்டு மாதங்கி குலுங்கினாள்,

முகத்தை மூடியபோது கை பட்டுக் கன்னங்கள் எரிந்தன,

தடவிப் பார்த்தபோது. கன்னத்தில் விரல்களின் வடுக்கள் லேசாகத் தடித்து எழும்பியிருந்ததை உணர முடிந்தது,

அவளையா ஒருவன் அடித்தான்? அதுவும். அவளைத் தொட்டுத் தாலிகட்டிய கணவன்! அன்றளவும் அவளைத் தொட்டறியாத கணவனும் கூட!

“அப்படியாவது உங்கள் கை என் மீது பட்டதே” என்று சினிமாவிலோ சின்னத்திரையிலோ பார்த்துக் கேட்ட ஒரு வசனம் நினைவு வர அருவருப்பில் உடல் குலுங்கியது!

கட்டாயமாக அந்த வசனம் ஓர் ஆண்தான் எழுதியிருப்பான்! ஒரு பெண்ணால் அந்த அளவு தன்னை இழிவு படுத்திக் கொள்ள முடியாது!

அடி விழுந்தது கன்னங்களில் மட்டுமா? வலி தாங்காமல் திரும்பியபோது முதுகில் விழுந்த குத்தில் மூச்சே சில வினாடிகள் நின்றது போலிருந்ததே! தோளில். இடுப்பில் .................எங்கென்று

பார்த்தான்?

கடவுளே! இப்படியா மாட்டை அடிப்பது போல ஒரு பெண்ணை ஒருவன் அடிப்பான்!

வலியில் உடம்பு நொந்தது ஒரு பக்கம் என்றால். நாத்தனார். மாமியார் மைத்துனன் முன்னிலையில் அடிபட்டது என்ன கேவலம்! வலியை விட அவமானத்தில் அல்லவா உயிர் போய்விடாதா என்று அவளது மனம் துடித்தது!

தெருவில் செக்யூரிடியின் விசில் சத்தம் கேட்டது, மணி பன்னிரண்டு, நள்ளிரவு! இந்த நேரத்தில்.வீட்டை விட்டு வெளியே வந்து. இப்படித் தன்னந் தனியே உட்கார்ந்திருக்கிறாளே! இன்றைய கால கட்டத்தில் அவளுக்கு என்ன வேண்டுமானாலும் நடக்கலாமே! ஆனால் எழுந்து அந்தவீட்டுக்குள் செல்வதை நினைக்கவே மனம் கூசியது,

அதுவும் அவளது...இல்லையில்லை. அவளுக்கும் கணவனுக்குமான அறைக்குள் செல்வதை விட திருடனோ. சைக்கோவோ யாரோ வந்து அவளைக் கொன்றுபோட்டு விட்டால் கூட எவ்வளவு நன்றாயிருக்கும்!

அப்படி அவளுக்கு எந்த விதமான ஆபத்து வேண்டுமானாலும் நேரலாம் என்று அந்த வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியும்தானே? அது பற்றிய அக்கறையே இல்லாமல். எட்டிக் கூடப் பாராமல் இருக்கிறார்களே!

அது போல ஏதாவது நேர்ந்து அவள் செத்துத் தொலையட்டும் என்று எண்ணினார்கள் போல!

இன்னும் மிச்சம் இருந்தது போல கண்ணீர் மறுபடியும் மாலை தொடுத்தது,

இதற்காகவா பயங்கரமாகச் செலவு செய்து. அவளது திருமணத்தை அவளுடைய பெற்றோர் மிகவும் சிறப்பாகச் செய்தார்கள்? சின்னச் சின்ன விஷயங்களையும் பார்த்துப் பார்த்து எப்படிச் செய்தார்கள்!

இந்த அருமையான சம்பந்திவீட்டார் எந்த விஷயத்தில் குறைவாக எண்ணி விடுவார்களோ என்று பணச்செலவோ. உடல் உழைப்போ கணக்கே பார்க்கவில்லையே! கடைசியில் ....

வீட்டுக்கு வெளியே தனியே உட்கார்ந்து அழுது கொண்டு இருந்தவளுக்குப்

பழைய நினைவுகள் அலையலையாய் எழுந்து வந்தன,

அன்றாட நிகழ்வுகளால் ரொம்பப் பழைசாகிவிட்ட நினைவுகள்தான்,

வெறும் காற்றழுத்த மண்டலமாகத் தொடங்கி. கொஞ்சம் கொஞ்சமாகத் தீவிரமடைந்து புயலாக மாறிக் கடைசியில்சூறாவளியாய் உருவெடுத்து ஊரையே உருட்டிப் புரட்டுவது போல வாழ்க்கை அவளை என்ன மாதிரி அடித்துத் துவைத்துப் போட்டுவிட்டது!

சும்மாவே விடிவற்ற இரவாய் மாறியிருந்த வாழ்வு! இப்போது ...சே. என்ன கேவலம்!

அன்றாட வாழ்வைப் பிடித்துத் தள்ளுவதில் ஓரளவு மழுங்கித் தழும்பாகிக் கொண்டிருந்த சம்பவங்கள், இப்போது பட்ட அடியில் காயம் வாய் பிளந்து ரத்தம் கொட்டத் தொடங்கிவிட்டது போல! மிகுந்த வலியுடன்!

திருமணத்துக்கு முன்னதாகத் தனியே சந்திக்க வேண்டும் என்று யுகேந்திரன் தகவல் அனுப்பியபோது மாதங்கி இப்படி எதையும் எதிர்பார்க்கவே இல்லை!

எப்படி எங்கே எப்போது சந்திப்பது என்று அவன் தெளிவாக அனுப்பியிருந்த தகவலில் அவள் மனம் எப்படிப் பூரித்தது! எதையும் முழுதாகத் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செய்கிறவன் என்று பெருமை வேறு!

”ரொமான்டிக் சிந்தனைகளுடன் வரவேண்டாம், இது விஷயமே வேறு ”என்று. அனுப்பியிருந்த தகவலின் கடைசியில் பின் குறிப்பாக அவன் சேர்த்திருந்ததைக்கூட அவள் பெரிதாகக் கொள்ளவில்லை!

மாதங்கி வேலை பார்க்கும் இடத்தில் பின்னாலேயே ஒரு பாம்பு அலைந்து கொண்டிருந்தது, அவளுக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்று அறிந்ததும். கெஞ்சிக் கதறிக் கண்ணீரே வடித்தது,

அவள் சட்டையே பண்ணவில்லை என்று தெரிந்ததும். வஞ்சினத்துடன் சாபமிட்டது,

அதன் வேலையாக இருக்கும், ஆனாலும். எவனோ ஏதோ

சொல்லுகிறான் என்று நம்பி விடாமல் அவளிடம் விளக்கம் கேட்க அழைக்கிறானே என்று எண்ணியவளுக்கு அதிலும் பெருமைதான்!

நல்ல அறிவாளியாக யோசித்து. நேரில் சந்தித்து விளக்கம் சொல்ல வாய்ப்பும் தருகிறான், கிள்ளி எறிய வேண்டிய சந்தேகங்களை அசட்டுத்தனமாக வளர்த்துப் பெரிய விஷ மரமாக்கி வாழ்க்கையை நாசப்படுத்தவில்லை,

எவ்வளவு நல்ல குணம்! இப்படிப்பட்ட ஒருவன் கிடைத்தது. அவளுடைய நல் அதிருஷ்டம்தான்,. தப்பான சந்தேகங்களால் அவளது வாழ்வில் பிரச்சினையே இராது! வராது!

இப்படியெல்லாம் நினைத்து மகிழ்ந்தது எவ்வளவு பெரிய முட்டாள்த்தனம்!

அவள் எதிர் பார்த்திருந்த அவனது கேள்விகளுக்கு என்ன விதமாகப் பதில் சொல்வது என்று அவள் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டிருந்தால். அவன் அவளை ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை, எந்த விதமாகவும்,

வேறு சிந்தனையே இல்லாதவன் போல சர்வ சாதாரணமாக. "உன்னைக் கூப்பிட்டது இதற்காகத்தான், எப்படியாவது இந்தத் திருமணத்தை நிறுத்திவிடு, என்னால் உன்னோடு ஒருபோதும் வாழ இயலாது "என்றான், அவ்வளவுதான்!

அன்றைக்கும் இப்போது போல நள்ளிரவுதான், திருமண மண்டபத்தின் மொட்டை மாடி! குளிர் காற்று சிலுசிலுவென்று அடிக்கக் காற்றில் பறந்துவிடாமல் துப்பட்டா தாவணியை இறுகப் பற்றியது கூட அவளுக்குத் துல்லியமான நினைவு வந்தது,

அவள் நம்ப முடியாமல் விழித்துவிட்டு. வேடிக்கை விளையாட்டுகளில் அதிகப்படி ஆர்வம் உள்ளவனோ என்று எண்ணி "சும்மாதானே சொல்லுகிறீர்கள்?" என்று. அவனிடம் கேட்க வேறு செய்தாளே! மகாக் கேவலம்!

என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி என்று எண்ணினானோ என்னவோ! கிட்டத்தட்ட அது போன்ற பார்வைதான், பார்த்துவிட்டு. "யார் தலைமேல் அடித்து சத்தியம் செய்யட்டும்? நான் சொல்வது முழு உண்மை, மொபைலில் சொன்னால் நம்புவாயோ இல்லையோ என்றுதான் நேரில் வரச்

சொல்லிக் கூறுகிறேன், கவனி, இப்போது நீயாகத் திருமணத்தை நிறுத்தினால் உன் பெயருக்குக் களங்கம் நேராது, என் தரப்பில் இருந்து மறுப்பு வெளியானால். உன் பெயர் கெடக் கூடும்,'' என்றான் யுகேந்திரன்,

இதென்ன. அவள் மேல் அக்கறையா? இல்லை, அதற்கு வாய்ப்பில்லை, கொஞ்சமேனும் அக்கறை இருக்குமானால் இந்த மாதிரி அதிர்ச்சியை அவளுக்குக் கொடுக்கமாட்டான்,

அல்லது... வேறு என்ன? இது அவனால் செய்ய முடியாததை அவளைக் கொண்டு சாதிக்கும் முயற்சியோ?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணியபோதுதான். அவனது வார்த்தைகள் முழுமையாக அவளது மூளைக்குள் இறங்கின,

அழகன் என்று அவள் உள்ளம் பூரித்த அதே ஆண்மகன். நாளைக் காலையில் அவனோடு நடக்க இருக்கும் அவளது திருமணத்தை நிறுத்தச் சொல்லுகிறான்!

அதையும் ஆண்பிள்ளையான அவன் செய்யாமல். அவளைக் கொண்டு சாதிக்க முயற்சிக்கிறான்! என்ன அநியாயம்!

அவளால் மட்டும் இது எப்படி முடியும் என்கிற யோசனையே இல்லையே!

யோசனை மட்டுமல்ல, இது அவளுக்கு எவ்வளவு வேதனையைத் தரும் என்கிற ஒரு பரிதாபம் கூட இல்லை!

பரிதாபம் என்ன? உயிர் உணர்ச்சி உள்ள மனிதப் பிறவியாகவே அவளை. அவன் மதிக்கவில்லை!

சுள்ளென்று அவளுக்கு உள்ளூர ஒரு சீற்றம் பிறந்தது,

"அவ்வளவுக்கு இந்தத் திருமணம் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால். அதை நீங்களே நிறுத்த வேண்டியதுதானே?'' எனறு அவனிடம் கேள்வி கேட்டாள்,

இப்போது அவன் முகத்திலும் கோபம் தெரிந்தது, "அது தெரியாமலா உன்னிடம் வந்து நிறுத்தச் சொல்கிறேன்? எல்லோரும்... நீயும்தான்! அவசியமற்று ஒரு மோசமான வாழ்வில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்றுதான் நாளைய நிகழ்ச்சியை நிறுத்தச் சொல்கிறேன், என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பழித்துக்கொள்,

பெண்பித்தன். குடிகாரன். ஏமாற்றுக்காரன்... என்ன சொல்வதானாலும் சரி! நான் அனுமதி தருகிறேன், ஆனால் கல்யாணத்தை மட்டும் எப்படியாவது நிறுத்தி விடு,!"

ரொம்பத் தாராளம்தான், அவளுக்குப் பழி ஏற்படாமல். அவனைக் குற்றவாளியாக்கிக் கொள்ளப் பெரிதாக அனுமதி தருகிறானாமே! ஆனால். இந்த நேரத்தில் இப்படிக் குற்றம் சுமத்தித் திருமணத்தை நிறுத்தச் சொன்னால் எல்லோரும் அந்தக் காரணத்தை அப்படியே நம்பி விடுவார்களா? எப்படித் தெரியும். என்ன தெரியும் என்று தொடங்கி. கல்யாணத்தை நிறுத்த வேறு ஏதோ காரணமோ என்று பழி பூமராங் ஆகி அவள் மேலேயேதானே திரும்பும்?

இதற்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் எதிர்பார்ப்பானோ? அவளது நல்ல பெயர் கெட்டுவிடாமல் காக்கிறானாமே!

முழுப்பொய்! அவளது வருத்தம் வேதனை பற்றி அக்கறையே இல்லாதவனுக்கு அவளது நல்ல பெயரைப் பற்றி மட்டும் என்ன கவலை இருக்க முடியும்?

அவளைப் பற்றி எந்தக் கவலையும் அவனுக்கு இருக்க வழியே இல்லை! எனவே. திருமணத்தை நிறுத்துவது மட்டுமே அவனது நோக்கமில்லை! மண நிறுத்தம் அவள் மூலமாக நடக்க வேண்டும்! அப்படி என்றால் .... இதில் வேறுசூது ஏதோ இருக்கிறது!

என்ன அது? சட்டென அவளுக்கு ஒரு நூல் கிடைத்தது, பணம்!

திருமணத்தை நிறுத்தும் பொறுப்பை அவன். அவளிடம் தள்ளி விடுவதின் காரணம் பணம்! பெண்ணோ பையனோ யார் திருமணத்தை நிறுத்தினாலும். அவர்கள் தலையில்தானே செலவைக் கட்டுவார்கள்?

"உன்னால்தானே திருமணம் நின்றது? செலவை நீயே பார்த்துக்கொள்!" என்று சொல்லிவிட்டுச் சத்தமின்றிக் காணாமலே போய் விடுவார்கள்,

இவன் காணாமல் போவானோ என்னவோ. பணப் பேச்சுக்கு என்ன பதில் சொல்கிறான் பார்க்கலாம்!

"இந்த நிலைவரை வந்தபின். நான் எப்படி நிறுத்துவது? என் பெற்றோருக்குமே நான் என்ன காரணம் சொல்வது? எவ்வளவு

செலவு? நகரின் பெரிய மண்டபங்களில் ஒன்றான இதுதான் வேண்டும் என்று உங்கள் தந்தை ஏற்பாடு செய்யச் சொன்னாரே. இந்த மண்டபத்துக்கு எத்தனை லட்சம் கட்டணம் தெரியுமா? ஆ...யிரம் பேருக்கு விருந்து சும்மா வருமா? அது எத்தனை லட்சங்கள்? எல்லாவற்றையும் திருப்பித் தந்துவிடப் பேகிறீர்களா?" என்று கணக்குப் போடத் தொடங்கினாள்,

அவனும் இதை ஓரளவு யோசித்திருப்பான் போலும், அதிர்ச்சியில் கேளாமல் விட்டுவிடுவாள் என்று எதிர்பார்த்தும் இருக்கலாம், எனவே ஒரு வினாடி என்று கூடச் சொல்ல முடியாது, அரைக் கணத்திலேயே அவனது பதில் வந்தது, "எவ்வளவு என்று கணக்குப் போட்டுத் தரச் சொல்லு, கட்டாயம் ஒரு நாள் திருப்பி விடுவேன்,"

அவள் எண்ணியது சரியே! மறுபடியும் மனம் சீறியது,

"ஒருநாள்! என்றோ ஒரு நாள்! எப்படி நம்புவது? நாளைக் காலையில் திருமணம்  என்கிற நிலை வரும்வரை நம்ப வைத்துக் கழுத்தை அறுத்திருக்கிறீர்களே! என்றோ ஒரு நாள் திருப்பித் தருவீர்கள் என்று மட்டும் எப்படி நம்புவது?"

போராட்டமில்லாமல் அவன் சொல்வதற்கு எல்லாம் அவள் தலையாட்டுவாள் என்று அவனும் கற்பனை செய்யவில்லை போலும், அடித்து வீழ்த்தத் தயாராகவே வந்திருந்தான்,

விழி இடுங்க அவளை நோக்கி. "ஆக. இந்தக் கல்யாணத்தை நிறுத்த உனக்கு விருப்பம் இல்லை என்று தெரிகிறது, மஞ்சள் கயிறு மாஜீக் என்பார்களே. அது போல எல்லாம் சரியாகிப் போய்விடும் என்று நினைக்கிறாய் போல?" என்று குரலில் ஏளனம் தொனிக்கக் கேட்டான்,

சத்தியமாக அந்தக் கணத்தில் அப்படிக் கூட ஆகக் கூடுமோ என்று அற்ப நம்பிக்கை அவளது உள்ளத்தில் முளைவிட்டது உண்மையே!

அவளது கண்களில் அது வெளிப்பட்டும் விட்டதோ என்னவோ. "வேண்டாம் மாதங்கி. உனக்கு என்னைப் பற்றித் தெரியாது, இரண்டு பேர் வாழ்வையும்வீணே அழிக்காதே!" என்று எச்சரித்தான் அவன்,

அவன் கண்டுகொண்டானே என்பதைவிட. அந்தக் கண நேர பலவீனத்துக்காகத் தன் மீதே கோபம் கொண்டவளாகி. “அதாவது. உங்களை மட்டும் விட்டுவிட்டு எங்கள் எல்லோரையும் அழித்துக் கொள்ளச் சொல்லுகிறீர்கள்! அப்படித்தானே? என் அம்மா. அப்பா. தங்கைகள் .... ரொம்ப நியாய புத்தி!” என்றாள் ஏளனமாக,

“அப்படி அவர்களுக்கு என்ன நேர்ந்து விடக் கூடும்? கொஞ்சம் ஏமாற்றம் தவிர எதுவும் ஆகாது! சும்மா மிரட்டாமல் நான் சொல்வதை .... “

அவள் மட்டுமல்ல, அவளுடைய குடும்பத்தில் யார் என்ன ஆனாலும். என்ன வேதனைப்பட்டாலும் அவனுக்கு அது பற்றி ஒன்றுமில்லை! எப்படியாவது அவன் நினைத்தது நடந்தால் சரி! என்ன அநியாயம்! என்ன சுயநலம்!

விறைப்புற்று உடல் நிமிர. “நீங்கள் ஆண்பிள்ளைதானே? தைரியம் இருந்தால் நீங்களே செய்யுங்கள், என் நல்ல பெயர் பற்றிக் கவலைப்படுவது போலச் சும்மா நடிக்க வேண்டாம்!” என்று வேகமாக உரைத்தவள். சட்டெனத் திரும்பி வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டாள்,

அந்த வினாடியில் இருந்து அவள் பட்டபாடு!

மனம் ஒரு பக்கம் என்னென்னவோ எண்ணிக் கலங்கியது என்றால். அதற்கு ஒத்து ஊதுவது போல உடலும் அவளைப் பாடாய்ப் படுத்தியது, தலை கிறுகிறுத்து. நெஞ்சு படபடத்து. கை கால்கள் வலுவிழந்து தடுமாறி எங்கேனும் மயக்கம் போட்டு விழுந்து விடுவோமோ என்று அவளுக்கு அச்சமாக இருந்தது,

எந்த நேரம் அவளுடைய தாயோ தந்தையோ வந்து. “ஐயோ உன்மேல் இப்படிப் பழி வந்துவிட்டதே” என்று கதறுவார்களோ என்று என்ன பயம் பயந்தாள்!

ஆனால் யுகேந்திரன் மிரட்டியது போல எதுவும் நடக்காதது அவளுக்கு ஆச்சரியம்தான்,

எந்தவித தட்டுத் தடங்கலுமே இல்லாமல். கிரீஸ் தடவிய இயந்திரம் சுழல்வது போல என்பார்களே. அது போலத் திருமணம் ஒழுங்காக நடந்தது,

கடைக்கண் பார்வை. கள்ளச் சிரிப்பு. பிறர் அறியாத

சிலுமிஷங்கள் எதுவும் இல்லையே தவிர. யாரும் குறைப்படவும் ஒன்றுமில்லை!

இன்னின்ன மாதிரிச் செய் என்று சொன்னதை இருவருமே செய்தார்கள்,

இருவரின் முகமும் சிரிப்பின்றி இருந்ததைக் கூடக் கல்யாண அலுப்பு என்று காரணம் கற்பித்தார்கள்,

இரவின் தனிமை நேரும்வரை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் எப்படியோ பொழுது போயிற்று,

மாதங்கியுடைய தந்தை ஒரு பெரியஹோட்டலில் முதல் இரவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்,

கூட்டி வந்தவர்கள் எல்லோரும் சென்றதும் கதவைத் தாளிட்டுத் திரும்பியவன் அவளைப் பார்த்த பார்வை! அதை இன்றளவும் அவள் மறக்கவில்லை,

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு யுகேந்திரன் படுக்கையை நோக்கிநடந்தான்,

கட்டிலில் இருந்து ஒரு தலையணை. போர்வையை எடுத்துத் தரையில் அவள் புறமாகவீசினான், “இனி நீ படுத்து உறங்க உன் இடம் அது, இன்றிலிருந்து இப்படித்தான் நம் வாழ்க்கை நடக்கப் போகிறது, வேறு ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்திருந்தாய் என்றால். பரிதாபப்படுகிறேன், “

குரலிலோ செயலிலோ அணுவளவு கூட இரக்கம் தென்படவில்லை,

அவள்தான் குற்றவாளி போலக் குத்திக் குதற நினைக்கிறான் என்பது புரிய. அவள் மனம் இன்னும் கலங்கியது,

இவன் என்னதான் நினைக்கிறான்? மகாராஜா கட்டளை இட்டுவிட்டான் என்று அணுப் பிசகாமல் அவள் அதை நிறைவேற்றி இருக்க வேண்டும் என்றா?

ஆனால் அவளுக்குக் குடும்பம் இல்லை? தந்தை. தாய். தங்கைகள் இல்லை? அவர்களுக்காக அவள் செய்ய வேண்டிய கடமைகள் இல்லை?

அதையெல்லாம் மறந்து. அவன் தாலி கட்டக்கூட இல்லை,. ஏன் தாலி கட்டுவதாகவே இல்லாதவன் சொன்னபடி எல்லாம் அவள் ஆடுவாள் என்று எப்படி எதிர்பார்த்தான்? எப்படி எதிர்பார்க்கலாம்?

முந்தைய நாள் நள்ளிரவில் யுகேந்திரனைப் பிரிந்து சென்றதில் இருந்து. இரவு முழுவதும் தூங்காமல்... தூங்க முடியாமல் விழித்துக் கிடந்து யோசித்து முடிவு செய்தது எதுவும் அவளுக்கு மறக்கவில்லை! முழுதாக அப்படியே நினைவில் இருந்தது,

ஆனால் நனவாக நடக்கையில் அவள் தீர்மானித்தது போல மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முடியவில்லை. அப்படிக் காட்டிக்கொள்வதோ அதை விடக் கடினமாக இருந்தது!

உள்ளே நெஞ்சு பதறியது, இப்படி எத்தனை காலம்? முப்பது...நாற்பது... ஒரு திருமண "கோல்டன் ஜூபிலி"க்குப் போய்வந்த நினைவு வந்தது, ஐம்பது ஆண்டுகள் அவளால் தாங்க முடியுமா? எப்படி சமாளிக்கப் போகிறாள்?

மாதங்கி தன்னுள் மிரண்டு தவிப்பது தெரியாமல். யுகேந்திரன் தன் ஆத்திரத்தையும் வெறுப்பையும் அவள் மேல் கொட்டினான்,

"என்ன? அலங்காரத்திலும் அழகிலும் ஆளை மயக்கிவிடலாம் என்று எண்ணினாயா? வேண்டாம் என்றாலும் விடாமல் வந்து கழுத்தை நீட்டினாயே! அப்படியா ஆணுக்காக ஏங்கித் தவித்... "

"போதும்!" என்று கத்திவிட்டாள் மாதங்கி, அவள் முகம் கன்றிச் சிவந்துவிட்டது,

என்ன பேச்சுப் பேசிவிட்டான்! திருமண ஏக்கத்தினாலா அவன் கேட்டதைச் செய்யாமல் அவள் சும்மா இருந்தாள், அதையும் எப்படிக் கொச்சைப்படுத்திக் கூறினான்!

இத்தனைக்கும் இவன் என்ன ஒழுங்கு? வேண்டாம் வேண்டாம் என்றவன். தன் சொந்தக் கைகளால்தானே தாலியை எடுத்து அவள் கழுத்தில் கட்டினான்?

அவளாவது பெற்றோர். தங்கைகள் என்று எண்ணி விதிக்குப் பணிகிற புல் மாதிரிச் சும்மா இருந்தாள், ஆனால் அவன் செயல்படவே செய்தானே!

அதற்கும் மேலாக அவளை எப்படிக் குறைகூறலாம்? அதுவும் அசிங்கமாக!

தவிர்க்க முடியாமல் நடந்துவிட்ட திருமணம், இல்லற வாழ்வு இல்லாவிட்டால் போகிறது, நண்பர்களாக வாழ முயற்சிப்போம்...

இப்படிச் சொல்ல எண்ணியதெல்லாம் அடியோடு மறந்தது,

நிமிர்ந்து. "ஆனால். யாரும் உங்கள் கழுத்தில் கத்தியையோ. பின்னே யாரும் துப்பாக்கியையோ வைத்து அழுத்தித் தாலி கட்ட வைத்ததாக நான் காணவில்லையே! முடியாது என்று மறுக்காமல் ஏன் கட்டினீர்கள்? " என்று ஆத்திரத்துடன் கேட்டாள்,

அவன் முகம் கன்றிச் சிவந்தது!

இன்று அவளை அடித்து நொறுக்கும்போதும் அவன் முகத்தில் அதே சிவப்புதான்!

அன்று. அவளுக்குப் பதில் சொல்ல மாட்டாத அவமானக் கன்றல் என்று எண்ணினாள், ஆனால் இன்று என்ன வந்தது?

# அத்தியாயம் -2

கோபம். வருத்தம். தவிப்பு ...இத்தனைக்கும் மேலாகக் கணவன் என்று ஆகிவிட்டவனின் அநியாயப் பேச்சினால் ஏற்பட்ட ஆங்காரம் எல்லாமாக அன்றைய இரவில் மாதங்கி கொதிநிலையில் இருந்தாள்,

அதனாலேயே அவமானத்தால் வந்த சிவப்பு என்று ஒரு தரம் நினைத்ததற்கு மேல். யுகேந்திரனது முகக் கன்றல் பற்றி அவள் யோசிக்கவே இல்லை! ஆனால் . இப்போது வேறு தோன்றியது

முடிந்த கதை என்று என்னதான் முடிக்க முயன்றாலும். பழைய கதையே அவள் மனதில் ஓடியது,

முக்கியமாக. இந்தவீட்டில் அவள் தங்கியது,

பல் வேறு நிகழ்வுகளாலும் இதை அடியோடு நினைக்கக் கூடாது என்றும் அவளால் ஒதுக்கி. மூடி மறைக்கப்பட்டிருந்த விவரமெல்லாம் இப்போது கல்லில் பொறித்த எழுத்தாய் அவள் மனதில் தெளிவாகத் தெரிந்தது,

அன்று அவனும் குமுறிக் கொண்டு இருந்திருக்க வேண்டும், மூத்த மகனாய். பட்டத்து இளவரசனாகவீட்டில் அதிகாரம் செலுத்திக்கொண்டு இருந்தான் போலும்! அவனுக்கு மேலாக மகாராஜாவாக அவனுடைய தந்தை அவன் தலையிலேயே “நொட்”டென்று ஒன்று வைத்து. அவரது மேலாண்மையைக் காட்டியதை அவனால் தாங்க முடியவில்லை,

அதை அவள் குத்திக் காட்டியதையும்!

நேராக அவனது தோல்வியை அவளிடம் ஒத்துக்கொள்ள மனமற்று. அவன் வேறு பக்கமாக அவளையே குற்றவாளியாக்க முற்பட்டான்,

“எனக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கும், ஆனால் இது எனக்குப் பிடிக்காத திருமணம்தான்,. நீயும் எனக்குப் பிடிக்காத மனை... மனைவி என்று சொல்லக்கூட முடியாத யாரோ ஒருத்திதான், ஆனால். இதற்காக என்னை நீ குற்றம் சொல்ல முடியாது, இந்தச் சிக்கலில் இருந்து தப்ப உனக்கு வாய்ப்பும் கொடுத்தேன், நீதான் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை!” என்றான் எடுப்பாகவே,

நல்ல வாய்ப்பு! காலையில் கல்யாணமாம், துரை நள்ளிரவில் அவளைக் கூப்பிட்டு. திருமணத்தை நிறுத்திவிடச் சொல்லுவாராம்! இது அவன் வாய்ப்புக் கொடுத்ததாக அர்த்தமாம்!

கொதித்துப்போய். “எனக்கு. நீங்கள் என்ன வாய்ப்புக் கொடுப்பது? இந்தத் திருமணத்தை என் பெற்றோர்...எங்கள் பக்கமாக மட்டுமாய் ஏற்பாடு செய்யவில்லையே! உங்கள் பெற்றோரும் சேர்ந்து. அதுவும் மகனுக்குச் சம்மதம் என்று தெளிவாகச் சொல்லி. அவர்களும் சேர்ந்து நிச்சயம் செய்து. பத்திரிகை அடித்து உறுதிப்படுத்தப்பட்ட திருமணம், ஒரு மாதத்துக்கு முன்பாகத் தீர்மானித்தது! பிடிக்கவில்லை என்றால். இதை ...இந்தத் திருமணத்தை நீங்கள் ஏன் நிறுத்தவில்லை? அதை விட்டுக் கடைசி நேரத்தில் என்னிடம் வந்து கல்யாணத்தை நிறுத்து என்றீர்களே! இதுதானே நீங்கள் கொடுத்த வாய்ப்பு! இல்லையா? காலில் விழுந்து கெஞ்சுவேன் என்று எண்ணம்! பயங்கரமான வக்கிர புத்தி! உண்மையிலேயே பழி போட்டு வதைக்க ஆள் தேடினீர்கனே தவிரத் திருமணத்தை நிறுத்தும் எண்ணம் உங்களுக்குக் கிடையாது!” என்று படபடத்தாள் மாதங்கி,

இப்படிப் பேசுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது,

ஆனால் அவன் திகைத்தது ஒரே ஒரு கணமே!

“இல்லை, கல்யாணத்தை எப்படியாவது நிறுத்தியே ஆக வேண்டும் என்றுதான் நான் உன்னிடம் வந்ததே!”

“பொய், உண்மை அதுவானால். என்னை அணுகுவானேன், என் நல்ல பெயர் என்றெல்லாம் கதை விடுவானேன்? ஏன். திருமணத்துக்கு முந்திய நாள் நள்ளிரவில் அதை நிறுத்துகிறவளுக்கு மதிப்பும் மரியாதையுமா பெருகும்? இவளிடம் என்ன தப்போ என்னவோ என்று எண்ண மாட்டார்களா? அது பற்றி இவ்வளவு நான் யோசிக்க மாட்டேனா? மெய்யாகவே நிறுத்துவது உங்கள் நோக்கம் என்றால் அதை நீங்களே செய்ய வேண்டியதுதானே? அதைச் செய்யவில்லை என்றால் வேறு என்ன அர்த்தம்?”

இந்தக் கேள்விக்குப் பிறகே உண்மை வெளிவந்தது,

“தூக்கிலே தொங்கிவிடுவோம் என்று மிரட்டுகிற பெற்றோரை

வைத்துக்கொண்டு நான் வேறு என்ன செய்ய முடியும்,” என்றான் அவன் கசந்த குரலில்,

“என்னது?!” என்று அவள் அதிர்ந்தாள்,

உடனே சுதாரித்து. “ஓ...பிளாக்மெயில், சிறைக்குள் தள்ள வேண்டிய குற்றம்! ஆனால் உங்கள் பெற்றோர் அப்படிப் பிடிவாதமாக மறுக்கும் நிலை ஏன் வந்தது? நாங்கள் ஒன்றும் மகாப் பெரிய பணக்காரர்கள் இல்லையே!”

“வாக்குக் கொடுத்து அழைப்பெல்லாம் கொடுத்து முடிக்கிற நிலைவரை வந்தாயிற்று, இனி மறுப்பதானால் செத்து விடுவோம் என்றார்கள், இந்த விஷயத்தில் செய்கிறார்களா இல்லையா என்று பரீட்சை செய்து பார்க்க முடியாது, அதனால்தான் உன்னிடம் வந்தேன், நீயும்... ச்சே!”

“அது வேறு, ஆனால் இன்னும் உதைக்கிறதே! அப்படி இந்தத் திருமணத்தை மறுக்கும் எண்ணம் உங்களுக்கு ஏன் வந்தது?” என்று அழுத்தத்துடன் கேட்டவள் சட்டென விவரம் புரிய “ஓ! காதலா?” என்று ஏளனமாகக் கேட்டாள்,

வெறுப்புடன் நோக்கி. “ஆமாம், மூன்று ஆண்டுகளாகக் காதலிக்கிறோம், வேற்று இனம் என்று மறுப்பு வரும் என்று எண்ணினோம், தங்கைக்குத் திருமணம் நடந்து விட்டால். அப்புறம் பிரச்சினை இராது என்று காத்திருந்தோம், ஆனால்  தொழில் ரீதியாக ஆறு மாதம் போய் வருமுன் இப்படிச் செய்வார்கள் என்று கனவு கூடக் காணவில்லை! ப்ராஜெக்டை முடித்துவிட்டு வந்து பார்த்தால்... காட்!” என்று செய்கையற்ற சினத்துடன் கையை விரித்தான் யுகேந்திரன், “கடைசி வழியாக உன்னிடம் வந்து கேட்டால் நீயும் காலை வாரி விட்டுவிட்டாய்!” என்று மறுபடியும் அவள் மேல் பாய்ந்தான்!

அவனும் பாவம்தானோ என்று ஒருதரம் அவள் சிந்தித்தாள்,

ஆனால். மீண்டும் மீண்டும் அவளை அல்லவா பலிக்கடா ஆக்குகிறான்! அவளது இழப்பு பற்றிய எண்ணமே இல்லையே! இது என்ன நியாயம்?

“நீங்கள் ஒரு தரப்பாகவே பேசுகிறீர்களே! எனக்கு அடுத்து இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள், நான் இப்படிக் கடைசி

நேரத்தில் திடீரென்று மணத்தை நிறுத்தினேன் என்றால். என்னைப் பற்றி என்ன பேச்சு வரும்? அப்புறம் அவர்கள் வாழ்வு என்ன ஆகும்? என் தந்தை. தாயார்...என் குடும்பம் பற்றி எண்ணிப் பார்த்தீர்களா? ...”

இது தன்னை நியாயப்படுத்த முடியாத விஷயம் என்று உணர்ந்தோ என்னவோ. அவள் பேச்சில் அவன் குறுக்கிட்டான்,

“அதை நான் ஏன் பார்க்க வேண்டும்? அன்பிலாப் பிணைப்பில் இருந்து தப்ப உனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன், உன் உறவினர் பற்றி எண்ணி அதை நீ பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும், செய்யவில்லை, கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல். எங்கள் வாழ்வை அழித்தவள் நீ! இப்போது என்னைக் கேள்வி கேட்கிறாயா? அதற்கு உனக்கு அருகதையும் இல்லை,. உனக்குப் பதில் சொல்லும் தேவையும் எனக்கில்லை!”

அவன் பேசப் பேச. விரிந்த விழிகளால் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாதங்கி,

என்ன தைரியமாகச் சொல்லுகிறான்! குரல் தோற்றம் எல்லாவற்றிலும் என்ன உறுதி! தாலி கட்டிய மனைவியின் மனதை வருத்துகிறோமே என்ற பரிவு. கருணை அணுவளவு கூட இல்லையே!

எப்படி இருக்கும்? அதற்கு மனதில் கொஞ்சமேனும் அன்பு இருக்க வேண்டுமே! என்னவோ தன் வாழ்வை அழித்த காதகியாக அவளை எண்ணும்போது பரிவாவது? கருணையாவது?

ஆனால் இன்றைய நிலையில் அது முக்கியம் அல்ல, அவனது அன்பு காதல் எதுவும் கிடையாது என்பது உறுதியாகிவிட்டது, முயற்சிக்கலாம் என்பதற்கும் வழியில்லை, அதற்குத்தான் ஏற்கனவே இன்னொருத்தி இருக்கிறாளே! அந்த மாதிரி எதிர்பார்ப்பதே பிழைதான்,

ஆனால் சாதாரண மனுஷியாகக்கூட அவளை மதிக்க அவன் தயாரில்லை!

இதற்கு மேல் உன்னிடம் பேசத் தயாரில்லை என்று சொல்லாமல் சொல்வது போல. அவன் கட்டிலில் அமர்ந்து எங்கோ பார்த்தான், அவன்வீசி எறிந்த போர்வை மீது அமர்ந்து அவள்

யோசித்தாள்,

இப்போது என்ன செய்வது? அதை விட இனி என்ன செய்வது?

அன்றைய இரவை அவள் பெரிதாக நினைக்கவில்லை, முந்நாள் இரவே திருமண இரவு பற்றிய கற்பனைகள் அவளிடமிருந்து மறைந்து போயின,

அந்த உறவு பிடிக்காவிட்டாலும் நண்பர்களாக வாழலாம் என்று கேட்கத்தான் மாதங்கியே எண்ணியிருந்தாள், ஆனால் அவனோ சைனர்களின் டிராகன் நெருப்பைக் கக்குவது போல வெறுப்பை அல்லவா உமிழ்கிறான்!

ஆனால் இதற்குப் பயந்து அவள் விழுந்தடித்துக்கொண்டு அம்மாவீட்டில் போய் அடைக்கலமாகிவிட முடியாது, கூடவே கூடாது, சும்மாவே முகத்தில் சிரிப்பையே காணோமே என்று பேச்சு வந்திருக்கிறது! அதற்கே என்னம்மா. என்னம்மா என்ற எத்தனையோ முறை கேள்விகளும் வந்தாயிற்று,

அங்கேயே நிரந்தரமாகப் போய் விழுவது நடக்கவே கூடாதது!

அவர்கள் யாருக்கும் இந்தப் பிரச்சினை பற்றி எதுவும் தெரியக் கூடாது,

அப்புறம் குடும்பமே அழுது கரைந்துவிடும்!

எனவே அதற்கு ஒத்துழைக்க மட்டும் இவனிடம் கேட்க வேண்டும்,

எப்படிக் கேட்பது? என்ன கேட்டாலும் அவன் ஒத்துக் கொள்வானா? திருமணம் நடந்ததற்கே அவள் மீது பழி சுமத்துகிறவன். அவளுடைய குடும்பத்தின் நிம்மதிக்காக எதைச் செய்யவும் எப்படிச் சம்மதிப்பான்?

மறுபடியும் அந்தக் கவலை உனக்கு இருந்து திருமணத்தை நிறுத்தியிருக்க வேண்டும் என்பான்!

ஆனால் எந்தக் காரணம் கொண்டும் அவளுடைய பெற்றோர். தங்கைகள் வருந்தும்படி விடக் கூடாது! இதை அவள் சாதித்தே ஆக வேண்டும்!

குளியல் அறைக்குள் சென்று பல்துலக்கிக்கொண்டு அவள் திரும்பி வந்தால் அவன் படுத்துத் தூங்கியிருந்தான், அல்லது.

அப்படிப் பாவனை செய்தான்,

என்ன நடிப்பு? எவ்வளவு நேரம் நடிக்க முடியும்? என்று எரிச்சலும் ஏளனமுமாக அவள் நினைக்கும்போதே. வார்த்தையில் சொல்ல இயலாத களைப்பு அவளைத் தாக்கியது, திருமண அலுப்போ? உணர்ச்சிகளின் போராட்டமோ?

அப்படி என்ன சோர்வு என்று யோசித்தபடியே போர்வை மீது அமர்ந்தவள் அப்படியே சரிந்து விழுந்து உறங்கிப் போனாள்,

காலையில் எழுந்து பார்த்தால். அவன் கிளம்பி உட்கார்ந்திருந்தான்,

அவசரமாகப் பல் துலக்கி. பேருக்குக் குளித்து உடை மாற்றி ஓடி வந்தாள்,

அவனிடம் பேச வேண்டுமே!

அவசரமாக வந்து பார்த்தால் அவனுமே பேசுவதற்காகக் காத்திருந்த மாதிரி ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான்,

முன்னே சிறு மேஜை ஒன்றின் மேல் சிற்றுண்டி. காஃபி பாட் எல்லாம் இருந்தன,

அந்தஹோட்டலில் தங்குவோருக்குக் காலைச் சிற்றுண்டி ரும் வாடகையோடு சேர்ந்தது, சொன்னால் தங்கும் அறைக்கே கொண்டு தருவார்கள் என்று அறை முன் பதிவு செய்தபோது தந்தை கூறியது மாதங்கிக்கு நினைவு வந்தது,

அத்தோடு சேர்த்து மகள் காதில் மட்டும் விழும்படியாக இன்னும் சிலது மனைவியிடம் சொன்னார்தான், ஆனால் அதை எண்ணிப் பார்ப்பது வெந்த புண்ணில் வேலிடுவது போன்றது, நினைப்பதை விட மறப்பது மேல்,

மேஜையைக் காட்டி “சீக்கிரமாகச் சாப்பிட்டு முடித்தாயானால் பேச வசதியாக இருக்கும்,” என்றுவிட்டுத் தனக்கு வேண்டியதை ஒரு தட்டில் எடுத்து வைத்து உண்ணலானான்,

அந்த மட்டும் அவள் குளிக்கும்போதே உண்டு முடிக்காமல் காத்திருந்தானே! அதுவே பெரிது!

முன் தினம் முழுதுமே எதுவுமே தொண்டைக்குள் இறங்காமல்

வயிறு காய்ந்து கிடந்தது, இப்போதும் ஏதேனும் உள்ளே போகாவிட்டால் இவனிடம் பேசக் கூடத் தென்பிராது! பேச வேண்டிய விஷயத்துக்கோ. தெளிவோடு தென்பும் நிறையவே தேவைப்பட்டது,

உணவை முடித்துக்கொண்டு மீதியை ஒதுக்கி வைத்தாள், அவன் ஏற்கனவே காஃபியை அருந்திக் கொண்டிருக்க. அடுத்த கப்பில் காஃபியை ஊற்றி எடுத்துக்கொண்டு அவனைப் பார்த்தாள் மாதங்கி,

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு யுகேந்திரன் சொல்லலானான்,

“பார். நேற்று நடந்தது ஓர் அர்த்தமற்ற சடங்கு, நான் அதை மதிப்பதாக இல்லை, என்னையோ உன்னையோ எந்த விதத்திலும் அது கட்டுப்படுத்தாது, எனவே. எனக்காக நீ என்வீட்டில் வசிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்க மாட்டேன், நீ இன்றே உன் வீட்டுக்கே போய்விடலாம், என் மனநிலை தெரியும் என்பதால். என் குடும்பத்தாரும் உன்னிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள், “ என்று அழுத்தமான குரலில் தெளிவாகச் சொன்னான்,

மீண்டும் நெஞ்சுக் கூடு காலியாயிற்று அவளுக்கு,

இவன் மனமென்ன இரும்பா. கருங்கல்லா?

மணமாகி ஒரு நாளே ஆன புது மனைவியிடம் இப்படிக் கூறும்போது அவளது இதயத்தில் கத்தியால் கீறுவது போல இருக்கும் என்று இவனுக்குத் தெரியாமலா இருக்கும்? அவளது வலி. வேதனை பற்றித் தனக்கு அக்கறையே கிடையாது என்று தெளிவாகப் புரிய வைக்கிறானா?

காஃபியை உறிஞ்சிக் குடிப்பது போன்ற பாவனையில் சிறு அவகாசத்தை ஏற்படுத்திக்கொண்ட மாதங்கி வேகமாக யோசித்தாள்,

இப்படியாகிவிட்டதே என்று வருந்துவது கூட இப்போது பொன்னான நேரத்தின் விரயம்,

அவனது நோக்கமே இந்த வலி தாங்காமல் அவன் சொல்வதற்கு அவள் தலையாட்ட வேண்டும் என்பதே என்று புரிந்தது, ஆனால் அது கூடாது,

நேற்று முன் தினம். திருமணத்தைத் தடுத்து அவளை விரட்ட முயன்றான், அது முடியவில்லை என்று ஆனதும். இப்போது இன்னொரு விதமாக விரட்ட முயற்சிக்கிறான்,

குறிக்கோள் ஒன்றே, அவன்வீட்டில் அவள் இருக்கக் கூடாது,

ஆனால். அவளது நோக்கம் நேர் எதிர் ஆயிற்றே!

துன்பமும் துயரமும் எவ்வளவு என்றாலும் அவளே அதை அனுபவிக்கத் தயார், ஆனால் அவளுடைய அன்பான குடும்பத்துக்கு. அவளது துயரம் பற்றிய வாடை கூடத் தெரியலாகாது, அது நடக்க வேண்டும் என்றால் அவள். அவன்வீட்டில்தான் இருந்தாக வேண்டும்,

அது பற்றி அவனோடு பேச வேண்டும் என்று அவள் ஏற்கனவே நினைத்திருந்தாள், உடனே பேசியாக வேண்டும் எனகிற நிலையை அவன் உருவாக்கிவிட்டான்,

அதுவும் நல்லதுதான், எப்படித் தொடங்குவது. எப்போது தொடங்குவது என்கிற தவிப்பு மிச்சம்!

நிமிர்ந்து “ஒன்று சொல்ல வேண்டும்,” என்றாள்,

“என்ன?” என்றான் யுகேந்திரன் சந்தேகக் குரலில்,

மானரோஷம் இல்லாமல் அவனிடம் கெஞ்சப் போவதாக எண்ணினானா?

கவனத்துடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து அவள் கூறலானாள்,

“இந்தக் கல்யாணம் இரு தரப்புப் பெற்றோராலும் நிச்சயிக்கப்பட்டு நடந்த திருமணம், நடந்தும்விட்டது, நடந்ததற்கு யார் மேல் குற்றம் என்று பேசி இனிப் பயன் இல்லை, … “

“அதற்காக? எல்லாம் மறந்து வாழ வேண்டுமா? இப்படிச் சொல்ல உனக்கு… “

“ப்ளீஸ். நான் சொல்லி முடித்து விடுகிறேன், அடுத்தவரைக் குறை கூறிப் பயன் இல்லை என்றேனே தவிர யாரும் எதையும் மறக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை, மறக்காது என்பதற்கு என்னை விடப் பெரிய உதாரணம் இருக்க முடியாது, உங்கள் வீடு

பற்றிச் சொன்னீர்கள், அவர்களுக்கு எதையும் ஏற்கும் திடம் இருக்கலாம், ஆனால் மணமான மகள் சுவரில் அடிபட்ட பந்தாய் உடனே திரும்பி வந்தாள் என்றால் என் குடும்பத்தினர் தாங்க மாட்டார்கள், அதனால்... "

"அதனால்?"

வார்த்தைகள் தொண்டையில் சிக்கியதை மறைத்து மாதங்கி பிடிவாதமாகப் பேசினாள், "நான் உங்கள்வீட்டில் வசிக்க வேண்டியிருக்கிறது,"

"அதனால் ஒரு லாபமும் இராது, நீ விரும்புவது போல எதுவும் நடக்காது," என்றான் அவன் உறுதியான குரலில்,

"நான் விரும்புவதா?" என்றவளின் குரலில் சிறு ஏளனம் இருந்தது, "இந்த வினாடியில் என்வீட்டில் தன்னந்தனியே ஓர் அறைக்குள் போய்ச் சுருண்டுவிடத்தான் எனக்கு ஆசை, ஆனால் அது முடியாது, எனக்குப் பிரியமான சுற்றம் இருக்கிறது, என்னை உயிராகக் கருதுகிறவர்கள், நான் நன்றாக இருக்கிறேன் என்ற மாயையையாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும், அதற்காக மட்டுமே உங்கள்வீட்டில் நான் தங்க வேண்டியதாகிறது,"

"அது சரிவராது," என்றான் அவன் முடிவான குரலில்,

அவள் பேசாமல் பார்க்கவும். "அங்கே...அங்கே உனக்குக் கொடுப்பதற்கு அறை எதுவும் காலியாக இல்லை," என்றான் தொடர்ந்து,

சொல்வது கடினமாகவே இருந்தபோதும். அதைக் காட்டிக் கொள்ளாமல் "பரவாயில்லை, இந்த அறையில் போல இருந்து கொள்ளலாம்," என்றாள் அவள்,

"உன் பேச்சில் ஏதோ உள் நோக்கம் இருப்பதாக எனக்குத் தெரிகிறது, அப்படி இருந்தால். என்னிடம் அது ஒருபோதும் பலிக்காது,. தெரிந்துகொள்,"

"என்ன பெரிய உள் நோக்கம்? உங்களை மயக்குவதா?" என்று நேரடியாகக் கேட்டாள் மாதங்கி, "அவ்வளவுக்கா என்னைத் தன்மானமற்றவள் என்று எண்ணினீர்கள்?"

"நா...ன் அஅப்படிச் சொல்லவில்லை, இன்றே பிரிந்துவிட்டால்

சீக்கிரமே திருமணத்தை ரத்து செய்வது எளிதாக இருக்கும்,"

பாவி! இருதயத்தில் செருகிய கத்தியைச் திருக வேறு செய்கிறானே! எவ்வளவுதான் வலிக்க வைப்பான்!

இல்லை, இவனது நோக்கம் இப்போதும் வேறு, இந்த வலியில் நிலை தடுமாறி. அவன் சொன்னதற்குத் தலையாட்டி விடுவாள் என்ற எண்ணம்!

வலி தாளாமல் பிறந்தவீட்டுக்கு ஓடி விடுவாள் என்கிற எதிர்பார்ப்பு முதலில் இருந்தே இருக்கிறது!

இல்லாத அமைதியைக் காட்டி. "இல்லை, இருக்காது, எப்படியும் இந்த இரவை என்னவென்று விளக்குவீர்கள்?" என்று திருப்பினாள் அவள்,

விறைப்புற்று நிமிர்ந்தவன் தயங்கியது ஒரு கணமே, அதற்குள் சுதாரித்துக்கொண்டு. "அதற்காக வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டும் என்கிறாயா?" என்று சீறினான்,

"வேண்டாத மருமகளாக உங்கள்வீட்டில் வசிக்க எனக்கும் விருப்பம் கிடையாதுதான், ஆனால். கொஞ்சம் பொறுமையாகக் கேட்டீர்கள் என்றால். அதற்கான என் காரணத்தைக் கூறி விடுகிறேன், இந்தத் திருமணத்துக்காக என் தந்தை பெரும் தொகை... இன்று வரையிலான அவரது சேமிப்பில் பாதிக்கு மேலாகச் செலவு செய்து. உங்கள் தந்தையின் விருப்பப்படி இந்தத் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தி இருக்கிறார், பெரிய திருமண மண்டபம். பெரிய இசை நிகழ்ச்சி. இலை நிறைக்கும் சாப்பாட்டு மெனு ....இன்னும். தொழிலில் என் பங்காகத் தருவதாகச் சொல்லி உங்கள் தந்தை வாங்கிய பணம் என்று நிறைய இருக்கிறது, எதையும் என் தந்தை முகம் சுளித்துச் செய்யவில்லை, என் மகிழ்ச்சிக்குரிய அச்சாரமாகவே செய்தார், அதெல்லாம் ஒன்றுமே இல்லை என்று ... அப்போதே சொன்னேனே சுவரில் அடித்த பந்து என்று. அது போல உடனே திரும்பிப் போய் என் பெற்றோரை வருத்தப்படுத்த என்னால் முடியாது,

"போவதானால் குறைந்த பட்சமாக அந்தப் பணத்தோடாவது போக வேண்டும்!"

"அங்கேதான் வருவாய் என்று நினைத்தேன், அதைத்தான்

எப்படியாவது திருப்பித் தந்து விடுவதாகச் சொன்னேனே!”

“எப்போது? என்னைப் பார்த்துப் பார்த்து என்னைப் பெற்றவர்கள் நொந்து உருகித் தேய்ந்து கரைந்த பிறகா? இன்று தருவதாக இருந்தால் பணத்துடன் திரும்பிப் போகிறேன், ஆனால் அதுவும் கூடக் கடினம்தான், எனக்கு அடுத்து இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள், மணமான உடனேயே மூத்த பெண் கணவனைப் பிரிந்து வந்துவிட்டாள் என்று செய்தி பரவும்போது அவர்களுக்கு நல்ல வாழ்வு அமைவது சிரமப்படும், குடும்ப வாழ்வில் என்ன பிரச்சினை என்றாலும் பழியைப் பெண் மேல் போடுவதுதானே நம் சமூகத்துப் பழக்கம்?

“அதனால். அனேகமாக அவர்களுக்குத் திருமணம் ஆகும் வரை. நான் உங்கள் வீட்டில் வசிக்க நேரலாம்,” என்று முடித்தாள் அவள்,

“இதை நான் ஏற்க மறுத்தால்?”

“இது பற்றி உங்கள் தந்தையிடம் பேச நேரும், அதாவது பணம் பற்றி,” என்றாள் மாதங்கி அமைதியாக,

விஷயம் தந்தையிடம் போனால் என்ன நடக்கும் என்று யுகேந்திரனுக்கு நன்றாகத் தெரியும், அவனுக்குக் கிலோக் கணக்கில் அறிவுரை கிடைக்கும்,

“திருமணமாகிவிட்டது, அவளோடு நல்லபடியாகக் குடித்தனம் செய்” என்று முடிப்பார்,

அப்புறம் அவர் அவனைக் கண்காணிக்க வேறு தொடங்கி விடுவார்!

“ஆண்டுக் கணக்கில் என்னையும் அபியையும் பிரித்துவைத்தால் நாங்கள் மனம் மாறிவிடுவோம் என்று ஏதேனும் எண்ணம் இருந்தால் அதை அடியோடு மறந்துவிடு, திருமணம் இல்லாமலே என்னுடன் சேர்ந்து வாழ அவள் தயார், என் அன்புதான் அவளுக்கு முக்கியம்!”

ஒவ்வொரு வார்த்தையும் அல்லவா ஈட்டியாகக் குத்துகிறது!

குரலில் வேதனை தெரிந்துவிடாமல் கட்டுப்படுத்திக்கொண்டு. “அந்தப் பெண்ணும் நீங்களும் எப்படி வாழப் போகிறீர்கள் என்பது பற்றி எனக்கு அக்கறை இல்லை, என் குடும்பம் வேதனைப்படக்

கூடாது என்பது மட்டுமே என் நோக்கம்,” என்றாள் தெளிவாக,

உறுத்து விழித்துவிட்டு. “ இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அறையைக் காலி பண்ண வேண்டும், உன் பொருட்களை எடுத்து வைத்துவிட்டால்.வீட்டிற்குக் கிளம்பிப் போகலாம்,” என்றான் உணர்ச்சி துடைத்த குரலில,

மாதங்கியின் புகுந்தவீட்டு வாழ்க்கை இப்படித் தொடங்கியது,

ஆனால். யுகேந்திரன் கேட்டபடி அன்றே விலகிப் போயிருந்தால். இப்படி அடிபடும்... எல்லோர் முன்னிலையிலும் அடித்து நொறுக்கப்படும் அவமானத்தில் இருந்து தப்பியிருக்கலாம்!

ஆனால் ஆறறிவற்ற  மிருகம் போல அடி வாங்கும் கேவலமான விதி இருக்கையில் அதிலிருந்து தப்புவது எப்படி சாத்தியம்?

# அத்தியாயம் - 3

“எண்ணித் துணிக கருமம்,. துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு” என்று வள்ளுவர் அன்றே எழுதி வைத்திருக்கிறார், குறள் தெரிந்தும் அதன் பொருள் புரிய மாதங்கிக்கு அனுபவம் . பல அனுபவங்கள் தேவைப்பட்டன,

ஒன்றல்ல பல வலிகள். வேதனைகள்,

யுகேந்திரனின் ஆதரவு அவளுக்குக் கிடையாது என்பது அவளுடைய புகுந்த வீட்டில் எல்லோரும் அறிந்த விவரம், அதன் விளைவு “இரண்டாம் தரக் குடிமகன்” என்பார்களே. அது போல நடத்தப்பட்டாள்,

எல்லோருடனும் சேர்ந்து உணவுண்ண அவள் அனுமதிக்கப்பட்டதில்லை,

“அப்புறம் யார் பரிமாறுவது?” என்றாள் தட்டை எடுத்துக்கொண்டு உட்கார்ந்த மாமியார் தனபாக்கியம்,

கடைசியாகச் சாப்பிட்டாலும். “என்ன அநியாயம்? ஆண்டாளுக்கு இவ்வளவூண்டு வைத்துவிட்டு எல்லாம் எடுத்துவிட்டாயே, அவள் உடம்பு உழைக்கிறவள், மூஞ்சை வேறு தூக்குவாள்!” என்றபடி. மாதங்கியின் தட்டில் இருக்கும் பதார்த்தங்களில் பாதிக்கு மேல் எடுத்துக் கொண்டும் போய்விடுவாள்,

திகைப்பும் அவமானமுமாக மேலே உண்ணவே சின்னவளுக்குப் பிடிக்காமல் போகும், அங்கங்கே கேட்கும் அரவங்களும். மாமியாரின் உரத்த குரலும் இந்த அவலம் எல்லோரும் அறியவே செய்யப் படுவதை உணர்த்த மனம் குன்றியது,

ஆனால் இதை யாரிடம் போய் என்னவென்று புகார் செய்வது?

ஆனால் நடப்பதைக் கவனித்துவிட்டுவீட்டு வேலைக்காரியே. “நா அவசரமாப் போகோணும், அஞ்சாறு பாத்திரம் பத்தாக் கிடக்குது, நீ வெளக்கி வச்சிரு,” என்று அவளை ஏவியபோது மாதங்கி சுதாரித்தாள்,

இதற்கு இடம்கொடுத்தால் முழு நேர வேலைக்காரியாகவே ஆக்கி விடுவார்கள்,

இதை யாரிடம் சொன்னாலும் தீர்வு கிடைக்காது என்று உணர்ந்து மாமனார் மாசிலாமணியிடமே செனறு முறையிட்டாள், “பத்துப் பாத்திரம் தேய்த்து எனக்குப் பழக்கம் இல்லை. மாமா, ஆண்டாளை ஒழுங்காக முழு வேலையையும் செய்யச் சொல்லுங்கள், அவளால் முடியாது என்றால் வேறு ஆள் பாருங்கள்,” என்றாள்,

இது பற்றிவீட்டில் ஒரு பட்டிமன்றமே நடந்தது,

இரண்டு பாத்திரம் தேய்த்தால் உடம்பு தேய்ந்தா போகும்? ரொம்ப நாளாக இருப்பவள்,. வேறே ஆள் பார்த்தால் அதிகச் சம்பளம் கேட்பாள்,. இங்கென்ன கொட்டியா கிடக்கிறது? பணத்தின் மதிப்பு தெரிய வேண்டாமா?

இந்தப் பேச்சுக் அஞ்சினால் இனி இந்த வேலைக்காரி ஆண்டாளே அவளை அடியோடு மதிக்க மாட்டாள் என்று புரிந்த மாதங்கி வேறு சொன்னாள்,

“நான் திருமணத்துக்காக வேலையில் விடுப்புதான் எடுத்திருக்கிறேன், புது வேலைக்காரிக்கு ஆகும் அதிகச் செலவை என் ஊதியத்திலிருந்து கொடுக்கிறேன்,” என்றாள் பிடிவாதமாக,

இதனால் அவளுக்கு இரண்டு நன்மைகள் கிடைத்தன,

ஒன்று. இந்த அன்பற்றசூழ்நிலையில் மூச்சு முட்டிக் கிடக்காமல் பல மணி நேர விடுதலையாக வேலைக்குச் செல்வதை உறுதி செய்துகொண்டாள்,

அடுத்தது. மருமகள் கையிலிருந்து சம்பளம் வாங்கும் வேலைக்காரி தன்னை மதிக்க மாட்டாள் என்ற பயத்தில் ஆண்டாளை மாமியாரே தட்டி வைத்தது,

ஆனால். அவளது துணிமணிகளை அவளிடம் ஒரு வார்த்தை கூடக் கேளாமல் எடுத்து அணிந்து சென்றதோடு திரும்பி வந்ததும் கண்டபடி கழற்றிவீசிய நாத்தனார் ஊர்வசியை அவளால் ஒன்றுமே பண்ண முடியவில்லை,

தாய் தந்தை இருவருமே மகளைக் குட்டி. செல்லம் என்று அழைப்பதே கொஞ்சலாகத்தான், இவர்களிடம் என்னவென்று சொல்வது? ஒத்த வயதுதானே என்று ஊர்வசியிடமே பேசிப் பார்த்தாள்,

“இந்தவீட்டின் செல்லப் பெண் நான், என்ன வேண்டும்

என்றாலும் எடுப்பேன்,. அணிவேன், இது பற்றிப் பேச யாருக்கும் உரிமை கிடையாது, அதுவும் நேற்று பெய்த மழையில் இன்று முளைத்து இங்கே வந்து உட்கார்ந்திருக்கும் நீ!” என்றாள் அவள் உதாசீனமாக,

“அது என்னுடையது!”

“அதற்கென்ன? கழற்றிவீசிவிட்டேன், அதோ மூலையில் கிடக்கிறது எடுத்துக்கொள்,”

“அடுத்தவர் பொருளை அனுமதி கேளாமல் எடுப்பதும் கையாள்வதும் தப்பு  என்று தெரியாதா?”

“இந்தவீட்டுக்குள் வந்துவிட்டால் அது முதலில் என்னுடையது, அப்புறம்தான் உன்னது, இதற்கு மேல் விதண்டாவாதம் பண்ணாமல் தூரப் போ, இல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!” என்று மிரட்டிவிட்டுப் போனாள் அவள்,

செய்வதறியாமல் கணவனிடம் முறையிட்டபோது. ஏதோ ஓர் அதிசயப் பிறவியைப் பார்ப்பது போலப் பார்த்தான் யுகேந்திரன்,

“இந்தவீட்டில் இருப்பதும் விட்டுப் போவதும் உன் விருப்பம், எனக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது, அப்படியிருக்க என் தங்கையை. உனக்காக நான் ஏன் கண்டிக்க வேண்டும்?”

பல முறை நேர்ந்தது போல. பிடிவாதமாக இங்கே வந்தது தவறோ என்று மாதங்கிக்கு அப்போதும்  தோன்றியது, ஆனால் அப்படி வந்ததன் காரணங்களும் நினைவு வரவே. வலியை மறந்து அவள் ஒரு மாதிரி நிமிர்ந்தாள், “எனக்காக என்று வேண்டாம், ஆனால் அடுத்தவர் பொருளை அனுமதியின்றி எடுப்பது …திருட்டுக்குச் சமம் அல்லவா? அது தப்பு என்று அவளுக்குப் புரியவைப்பது. அண்ணனாகிய உங்கள் கடமைதானே?” என்று மாற்றிக் கேட்டாள்,

“அடடா! என் தங்கையின் நடவடிக்கை பற்றி எவ்வளவு அக்கறை உனக்கு! ஆனால். இந்தக் குடும்பத்திற்கும் உனக்கும் எந்த விதமான உறவும் கிடையாது, அதனால். இந்த மாதிரி ஏதோ ஒரு சாக்குப்போக்கோடு என் முன்னே வந்து நிற்காமல் உடனே இங்கிருந்து போ!”

வாழ்க்கையே போய்விட்டது, இந்தத் துணிமணி என்ன

பிரமாதம் என்று விட்டுவிடலாமா என்று மாதங்கிக்குப் பலமுறை தோன்றியது,

ஆனால் அவை அவளுடைய சொந்த உடமை, ஆசையாக அவளுடைய பெற்றோர் வாங்கியவை, இவைகளை நாத்தனார் கேட்டு வாங்கி அணிந்துவிட்டு நன்றியோடு திருப்பித் தந்திருந்தால் வேறு மாதிரி, இவளானால் விருப்பம் போல எடுத்து அணிவதோடு. தேவை தீர்ந்ததும் கழற்றி அலட்சியமாகக் கண்ட இடத்தில் எறிகிறாளே!

இப்போது உடையவளின் எதிர்ப்புத் தெரிந்து விட்டதால். கிழித்துக் கூட எறியலாம்!

ஊகூம், அப்பா உழைத்துச் சம்பாதித்த காசில் வாங்கியது, அது போல அநியாயம் நடக்க விடவே கூடாது!

யோசித்துவிட்டு. தன் பொருட்கள் இருந்த அலமாரிக்குத் தனியாக ஒரு பூட்டு வாங்கிப் பூட்டினாள்,

வழக்கம்போல அந்த அலமாரியில் இருந்து எதையேனும் எடுத்து அணிய வந்த ஊர்வசி பூட்டைக் கண்டதும் திகைத்துத் தாயாரிடம் ஓடிச் சென்று புகார் செய்தைக் கண்டும் காணாதவள் போல மாதங்கி நடமாடினாள்,

எப்படியும் அவளிடம்தானே வந்தாக வேண்டும்,

“எல்லாம் பூட்டிப் பூட்டி வைத்தாகிறது! எதற்காக? கவர்ச்சிகரமாக அணிந்து ரம்பை போல அலங்கரித்துக்கொண்டு நின்றாலும் அண்ணன்தான் இவளைத் திரும்பிப் பார்க்கக் கூட மாட்டானே! அப்புறம் எதற்கு?” என்று மாதங்கியின் காது கேட்கக் கூறினாள்,

“சின்னப் பொண்ணு, ஆசைப் பட்டுக் கேட்டால் கொடுப்பதற்கு என்ன? இந்தப் பிறவிக்கு என் பையன் உன்னைத் தன் கூட எங்கேயும் கூட்டிப் போகப் போவதில்லை, உன் நல்ல துணியெல்லாம் போடாமலே இற்றுப் போய்விடப் போகிறது, அளவு சரியாக இருப்பதால். அவளாவது அணியட்டுமே!” என்றாள் மாமியார்,

காதே கேளாதவள் போல மாதங்கி விலகிப் போனாள்,

அது மகனிடமும் போனது, ஆனால். வாய்ப்புக்காகக்

காத்திருந்தவன் போல. “உங்கள் விருப்பப்படி நீங்கள் கூட்டி வந்த மருமகள், உங்களுக்கும் அவளுக்கும் இடையே நான் தலையிட முடியாது,” என்றானாம்,

விஷயம் தெரிய வந்தபோது. மாதங்கிக்குக் கொஞ்சம் ஆச்சரியம்தான், வாட்டி வதைக்க இன்னொரு வாய்ப்பு என்று இன்னும் ஏதாவது சொல்லி வருத்தப்படுத்தாமல் ஒதுங்கிப் போனானே! ஒருவேளை குத்திக் குதறி அலுத்துவிட்டதோ?

இது மாமனாரிடமும் போனது அவளுக்குத் தெரியும், ஆனால் அதிசயிக்கத் தக்க விதமாக அவரும் ஒன்றும் சொல்லவில்லை,

எந்த வித உரிமையும் கொடுக்காமல். இது போன்ற சலுகைகளை எதிர்பார்ப்பது தவறு என்று எண்ணினார் போலும்,

ஒரே கறுப்பு என்று யாரையும் தள்ளக் கூடாது என்று அவளுக்குத் தோன்றியது!

எப்படியோ. அன்றாடப் பிரச்சினைகளுக்கு நடுவே வயதிலும் உறவு முறையிலும் பெரியவரான அவரிடம் மீண்டும் போராடத் தேவையில்லாது போனது. மாதங்கிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது,

ஆனால். இத்தனையும் ஒன்றுமில்லை என்பது போல மாதங்கியின் மனதைப் பெரிய அளவில் பாதிக்கும்படி இன்னொரு விஷயம் நடந்தது,

அன்று பருப்பு வகை மிக்ஸரும் பால்கோவாவில் செய்த குலோப்ஜாமுனும் வீட்டிலேயே செய்து எடுத்துக்கொண்டு அவளுடைய தாயார் ரஞ்சனி மகளைப் பார்க்க வந்திருந்தாள்,

மறுவீடு கொண்டுவந்து விட்ட பிறகு. அடுத்து அன்றுதான் வந்தாள்,

கையில் தூக்குகளையும் பூ பழங்களையும் பார்த்தோ என்னவோ. சம்பந்திக்கு வரவேற்பு சரியாகத்தான் இருந்தது,

கணவர் வரவில்லையா? மற்ற மகள்கள் எப்படி இருக்கிறார்கள் ? இதுபோலக் குசல விசாரிப்புகளும் குறை சொல்ல முடியாதபடி நடந்தது,

விடுமுறை நாள் என்பதால் மாசிலாமணிவீட்டில் இருந்தார்,

விடுமுறை நாள் ஆனதால் எல்லோரும்வீட்டில் இருப்பார்கள் என்றுதான் அன்னை அன்று வந்ததும் என்று பிறகு தெரிந்தது,

யுகேந்திரன் நண்பர்களைப் பார்க்கப் போயிருந்தான் என்பது தனபாக்கியத்தின் பேச்சின் மூலம் மாதங்கிக்கும் தெரிய வந்தது,

தாயைப் பார்த்தது மனதுக்கு இதமாக இருந்தபோதும். அன்னை எப்போது என்ன ஊகித்து விடுவாளோ என்று அவளுக்குக் கவலையாகவும் இருந்தது, அல்லது இவர்களே கூட உடைத்துவிடலாம்,

இந்த அன்பற்றசூழ்நிலையில். அவள் வேகாமல் வெந்து கொண்டிருப்பதே பெற்றவர்களின் நிம்மதிக்காகத்தானே?

எல்லாம் சுமுகமாகப் போகவும் அவளும் இறுக்கம் தளர்ந்து இயல்பு நிலைக்கு வந்துகொண்டிருந்தாள்,

தட்டிலும் கிண்ணத்திலுமாக வைத்துக் கொடுத்த மிக்ஸர். குலோப்ஜாமுனை ரசித்து உண்டபடி மாசிலாமணி பேசலானார்,

“பாருங்கள் தங்கச்சி. நான் ஒன்று சொன்னால் அதைத் தப்பாக எடுத்துக்கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கிறேன், எங்கள் ஊர்ப்பக்கம் எல்லாம். பெண்ணைக் கட்டிக் கொடுத்துவிட்டால். நல்லது கெட்டதுக்குத்தான் பெண் தாய்வீட்டுக்கோ தாய்வீட்டார் மகள்வீட்டுக்கோ செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு, அடிக்கடி இங்கும் அங்குமாகப் போக வர இருந்தால் போகிற குடும்பம் ஒரு நாளும் உருப்படாது என்பார்கள், புருஷன்வீட்டில் பெண்ணுக்கு ஒட்டுதல் வராதாம், இதை நா…ன் உங்களைச் சொன்னதாக நினைக்க வேண்டாம், ஊர்ப்பக்கம் இன்னும் பயன்பாட்டில் இருக்கிற ஒரு நல்ல பழக்கத்தையே சொன்னேன்!” என்று மாமனார் சொல்லச் சொல்ல அன்னையின் முகம் சுண்ணாம்பாய் வெளுப்பதைக் கண்ட மாதங்கிக்கு நெஞ்சு கொதித்தது,

திருமணச் சடங்குகளுக்குப் பிறகு தாயார் வந்தது இதுதான முதல் தடவை! அதற்குள் இப்படிப் பேச வேண்டுமா?

உடைந்து விடும்போல மாதங்கியின் நெஞ்சுக்குள் வலித்தது, ஆனால் தாயாருக்காக அப்போது அவள் என்ன சொல்ல முடியும்? ஆனால் வாயை மூடிச் சும்மா இருக்கவும் பிடிக்காமல். “மாமாவின் தொழில்

இருப்பு எல்லாமே சென்னைதான் என்றாலும். ஊர்ப்பழக்கத்தை விடுவதில்லை. அம்மா,'' என்றாள் குரலில் கனிவுடன்,

ஏற்பது போலத் தலையாட்டி. ''அஅப்படித்தான் இருக்க வேண்டும், நம் பாரம்பரியத்தை கட்டிக் காப்பது நல்லதல்லவா? ஏற்றவாறு நீயும் பபழகிக்கொள் பாப்பா,'' என்று சமாளித்தாள் அன்னை,

அதன்பின் ரஞ்சனி அதிக நேரம் தங்கவில்லை, உதட்டில் முறுவல் வாடாமல் காத்தபடி எல்லோரிடமும் முறைப்படி விடைபெற்றுக்கொண்டு கிளம்பிச் சென்றுவிட்டாள்,

இதை யாரிடம் சென்று முறையிடுவது?

தவறு செய்தவரோவீட்டுத் தலைவர், மாமியாரோ எப்படிக் குட்டலாம் என்று தேடுகிறவள், நாத்தனார் தாயாருக்கும் மேலே பதினாறடி பாய்கிற குட்டி! மைத்துனனோ. திருமணத்துக்காக வந்த தந்தை பார்த்துக் கொண்டிருந்த வேலையைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காகப் போனவன் இன்னமும் திரும்பி வரவில்லை,

வந்தாலும்தான் என்ன? அவனும் இதே குட்டையில் ஊறிய மட்டைதானே? இல்லாவிட்டாலும் பெற்றவருக்கு எதிராக அவளுக்காகப் பேசிவிடப் போகிறானா என்ன?

பயன் இராது என்று தெரிந்திருந்தாலும். மனம் பொறுக்காமல் கணவனிடம் சென்று. ''என் தாயாரிடம் மாமா இப்படிப் பேசிவிட்டார்,'' என்றாள் வருத்தத்துடன்,

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு. படித்துக் கொண்டிருந்த பத்திரிகையின் பக்கத்தைத் திருப்பினான் யுகேந்திரன்,

சினம் துளிர்க்க. ''அப்படித் தோளைக் குலுக்கினால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டாள் அவள்,

பத்திரிகையை மடித்துப் போட்டுவிட்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன்,

''என்னவென்று கேட்டால். எனக்குசம்பந்தம் இல்லாதவர்களின் சந்தோஷத்தைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும் என்பதுதான் பதில்,'' என்றான் அவன் குரலில் பிசிரே இல்லாமல்,

எங்கே போய் முட்டிக் கொள்வது?

அன்று கல்யாணத்தை நிறுத்தியிருந்தால் அந்த ஒரு துன்பத்தோடு போயிருக்குமோ என்று மீண்டும் தோன்றியது,

ஆனால் அது கூடாது என்று அவள் முடிவெடுத்ததன் காரணங்கள் அப்படியே இருந்தனவே! ஒரொரு வலிக்காகவும் அந்த நோக்கத்தை மறப்பது கூடாது,

யோசித்துவிட்டு. அலுவலகத்திலிருந்துவீட்டாரோடு அவ்வப்போது பேசினாள்,

“இங்கே வரவே இல்லையேம்மா! நீயும் மாப்பிள்ளையும் வந்து போக இருந்தால்தானே எங்களுக்கும் நன்றாக இருக்கும்?” என்று குணசீலன் மகளிடம் ஒரு தரம் கேட்டார்,

இந்தக் கேள்விக்குத் தயாராகவே இருந்ததால். மாதங்கியால் தயங்காமல் பதில் சொல்லமுடிந்தது,

“என்னப்பா நீங்கள்? உங்கள் மருமகன் என்ன. ஒன்பதிலிருந்து ஐந்து வரை என்பார்களே. அது போல ஆஃபீஸ் வேலையா பார்க்கிறார்? தொழில் அப்பா! பாருங்கள். அவர் தம்பி பழனி மலைப் பக்கம் ஒரு வேலையை முடிக்கத் திருமணத்துக்கு மறுநாள் போனவர் இன்னமும் திரும்பி வரவில்லை, இவரும் தினமும் காலையில் கிளம்பிச் செங்கல்பட்டுத் தாண்டிப் போகிறவர் இரவுதான் திரும்ப முடிகிறது, அவ்வப்போது மாமாவும் அப்படித்தான் போய் வருகிறார், இதில் என்றைக்குக் கிளம்பி நாங்கள் அங்கே வருவது? அது பற்றிக் கேட்கவே முடியவில்லை அப்பா, ஆனால். இதில் இருக்கும் நல்ல விஷயத்தை யோசித்துப் பாருங்கள். வீட்டில் இருக்கும் மூன்று ஆண்பிள்ளைகளும் இப்படி உழைப்பதானால் லாபம் எவ்வளவு வரும்! விதுர நீதியில் சொல்லுகிற மாதிரி. இளமையில் உழைத்தால் முதுமையில் சுகமாக இருந்து சாப்பிடலாம் இல்லையா? வருமானம். பண விவகாரம் உங்களுக்குத் தெரியாததா. அப்பா? மகளுக்குச் செல்வம் பெருகுகிறது என்று சந்தோஷப்படுங்கள். அப்பா!” என்று நீளமாக அளந்துவிட்டாள்,

பொதுவாகவுமே மாதங்கியின் வார்த்தைக்குவீட்டில் மதிப்பு உண்டு, இப்போதும் அதுவே நேர்ந்தது,

இடையே பழனி காண்டிராக்ட் வேலை முடிகிற நிலை என்று மாசிலாமணி கிளம்பிச் சென்று இளைய மகனையும் கூட்டிக்கொண்டு

திரும்பி வந்தார்,

சும்மா எப்படியோ? உள் விவகாரம் தெரிந்ததால் சந்தேகக் கண்ணுடன் பார்த்த லோகேந்திரனுக்கு. அண்ணியின் நிலைமை திருப்தி அளிக்கவில்லை,

ஆனால் மாதங்கிக்கு ஆதரவாகப் பேசவும் அவனுக்குத் தயக்கமாக இருந்தது, தாயார் தமையன்.வீட்டோர் அனைவரையும் சீண்டி விட்ட மாதிரி ஆகிவிடக் கூடாதே,

ஆனால் தன்னால் ஆனமட்டும் அவளை மதித்து அவளோடு உட்கார்ந்து பேசினான், அவர்களது தொழில். வேலை இடங்கள். நாட்டு நிலைமை .... குடும்ப உறவு தவிர்த்துப் பேச விஷயமா இல்லை?

அவளை ஒரு மனிதப் பிறவியாக மதித்து மைத்துனன் பேசுவதே. மாதங்கிக்கு ஆறுதலாக இருந்தது,

பொதுவாக வேலை முடிந்துவீட்டுக்குத் திரும்பி வரும்போது. வழியில் ஒரு பூங்காவில் சற்று நேரம் உட்கார்ந்திருப்பது மாதங்கிக்கு வழக்கமாகிக் கொண்டிருந்தது,

அவள் வேலைக்குப் போவதே. அன்பற்றவீட்டுச்சூழ்நிலையில் இருந்து ஒரு விடுதலை என்பதாகத்தான், கைக்கு வரும் சம்பளம். அதில் கிடைக்கும் ஒரு கொசுறு மாதிரியே,

மகள் வேலைக்குப் போவதைத் தொடர்வதை அறிந்ததம். அவளது ஸ்கூட்டியை அவளுடைய தந்தை இங்கே கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனார், அதற்குப் பெட்ரோல் போட எடுத்தது தவிர. மிச்சம் அவள் கணக்கில் அப்படியே சேர்ந்து கொண்டிருந்தது,

அம்மாவும் மகளும் என்ன நினைத்தார்களோ. “இங்கே ஓசிச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு. சம்பளத்தை அப்படியே சேர்த்தாகிறது, இரண்டு தங்கைகள் திருமணச் செலவுக்கு அவள் அப்பா அம்மா கேட்டிருப்பார்கள் போல” என்று இருவருமாகக் கூடிப் பகிரங்க ரகசியம் பேசினார்கள்,

தொழிலில் பங்கு தருவதாகச் சொல்லி மாமா பணம் வாங்கினாரே. அந்தப் பங்கு வருமானம் என்னாயிற்று என்று கத்திக் கூவிச் சண்டை போட மாதங்கிக்கு விருப்பம் இல்லை, அது போன்ற செயல்கள் அவளுக்கு உள்ள தென்பையும் அது அழித்துவிடும்!

ஆனால் சிந்தனை சும்மா இருக்குமா?

அவளுடைய பெற்றோரா மகளிடம் பணம் வாங்குவார்கள்? திருமணத்துக்கு முன்பே அதைச் செய்ததில்லையே,

தந்தையின் ஆலோசனைப்படி. "அப்ருவ்டு ப்ளாட்" ஒன்றிற்காக அவள் பணம் கட்டி வருவது அவளுடைய மாமனாரும் அறிந்த விவரம்,

ஆனாலும். யுகேந்திரன் அவளை மனைவியாக ஏற்கவில்லை எனும்போது. அந்தவீட்டு உணவைச் சும்மா உண்ண அவளுக்கு உரிமை ஏது என்று அவளது மனமே அவளைக் கேட்டது,

யோசித்துவிட்டு. அவளது உணவு. தங்குமிடத்துக்கு என்று ஒரு தொகையைக் கணக்கிட்டு. அந்தவீட்டுப் பூஜையறையில் வைத்துவிட்டுக் கவனித்தாள்,

தேவைக்குச் சற்று அதிகப்படியான பெரிய தொகைதான்,

சில நிமிஷங்களுக்குள். மாமியார் அல்லது நாத்தனார் அதை எடுத்துப் போவதைக் கண்டாள், அத்தோடு "ஓசிச் சோறு " பேச்சு நின்றுவிடவே. அவளுக்குமே நிம்மதியாயிற்று,

ஆயினும்வீடு அன்பற்றதுதானே? வேலை முடிந்து திரும்பினால். உடனே  அந்தவீட்டினுள் சென்று விட அவளுக்கு மனம் வராது, எனவே. வரும் வழியில் இருந்த ஒரு பூங்காவினுள் சென்று சற்று நேரம் அமர்ந்திருந்துவிட்டு. அதன் பிறகுவீடு திரும்புவாள்,

அந்தப் பகுதிச் சிறுவர்கள் வந்து விளையாடும் இடம் அது, ஒருநாள் வேலை முடிந்து திரும்பி வரும்போது. சின்னப் பிள்ளைகளின் சிரிப்பொலி கேட்டுத்தான் வண்டியை நிறுத்திவிட்டு. அந்தப் பூங்காவுக்குள் அவள் சென்றதே,

அவர்கள் கத்திக் கூச்சலிட்டு விளையாடுவதைச் சற்று நேரம் ஆவலாகப் பார்த்திருந்தவள். அதன் பிறகு தினமுமேவீடு செல்லுமுன் அந்தப் பார்க்கில் சற்று நேரம் உட்கார்ந்திருப்பதை  வழக்கமாகக் கொண்டாள்,

அந்தச் சிறுவர் சிறுமியரின் சிரிப்பும் இளங்குரலும் அவளது அலைபாய்ந்த மனதுக்கு வெகு நேரம் ஆறுதலை அளித்தன,

ஆனால். அந்த ஆறுதலின் விலையாக இந்த அடியும் அவமானமும் பட நேரும் என்று முன்பே தெரிந்திருந்தால் அந்தப் பூங்காவின் பக்கமே அவள் சென்றிருக்க மாட்டாளே!

ஆனால் இதை மாதங்கி எதிர்பார்த்திருக்க வேண்டுமோ?

பெரிய பெரிய இழப்புகளின் இடையில் கண்களுக்கும் காதுகளுக்கும். அவற்றின் மூலம் மனதுக்கும் ஒரு சின்ன சுகம், அதற்குக் கூடவா அவள் கொடுத்து வைக்கவில்லை?

அன்றும் அது போல அந்தச் சிறுவர் சிறுமியர் விளையாடுவதை உதடுகளில் புன்னகையோடு மாதங்கி பார்த்துக் கொண்டிருந்தபோதுதான். பக்கத்தில் பெரிதாக ஓர் இரைச்சல் கேட்டது,

“எங்கள் வாழ்வை அழித்துவிட்டு என்ன சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறாய். பாவி! இப்படி எவ்வளவு காலம் எங்கள் உயிரை வாங்கப் போகிறாயோ. தெரியவில்லையே!” என்று யாரோ கத்திக் கொண்டிருந்தார்கள்,

இந்த அழகான இடத்துக்கும்சூழலுக்கும் பொருத்தமே இல்லாமல் என்னக் காட்டுக் கத்தல் இது? பாவம் யார் வாங்கிக் கட்டுகிறார்களோ என்று எண்ணியபடி மறுபடி யும் பிள்ளைகளின் விளையாட்டில் மாதங்கி கவனத்தைத் திருப்பினாள்,

ஆனால். “மூளைதான் மந்தம் என்று எண்ணினேன், காதும் கேளாதா? யுகேன் எந்தப் பிறவியில் என்ன பாவம் செய்தாரோ. உன்னிடம் மாட்டிக்கொண்டு இப்படி வதைப் படுவதற்கு! “ என்று வெகு அருகில் கத்தல் தொடர்ந்து கேட்டு அவளைத் தொல்லை செய்தது, அத்தோடு ....

யுகேன்? யுகேந்திரனின் சுருக்கமா? யுகேன் தங்கம் என்று அவனுடைய தாயார் கூப்பிடுவதை மாதங்கி கேட்டிருக்கிறாள், அதே பெயரைச் சொல்லுகிறாளே!

திரும்பிப் பார்த்தால். ஒரு பெண் அருகில் நின்று அவளைத்தான் குரோதத்துடன் முறைத்துக் கொண்டிருந்தாள்,

இளம் பெண்ணே, யாரோ வடக்கத்திப் பெண் போலத் தெரிந்தது, அதற்குரிய வெண் தோலுடன் அழகாக இருந்தாள்,

இவள் யாராக இருக்கக் கூ .... வேற்று இனம் என்பதால்

தங்கை திருமணம் வரை .... சுரீலென மாதங்கிக்கு உண்மை உறைத்தது,

இவள் அந்தப் பெண்! அவளுடைய கணவனுடைய காதலி!

# அத்தியாயம் -4

சற்று நேரம் மாதங்கிக்கு ஒன்றுமே ஓடவில்லை,

முதலில் அவளது கண்களில் பட்டது அந்தப் பெண்ணின் அழகுதான்,

பளபளத்த கூந்தல். வில்லாகத் திருத்தப்பட்ட புருவங்கள். வடிவான முக அமைப்பு. கவர்ச்சிகரமான ஆடை அணிகலன்கள்

யுகேந்திரன் இவளிடம் மயங்கியதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை!

சட்டெனத் தன்னை நினைத்து மாதங்கி கூசிப் போனாள்,

நாள் முழுதும் செய்த வேலையில் சோர்ந்த முகம். நலுங்கிய ஆடை. காற்றில் பறந்த கூந்தலைக் கையால் கோதிவிட்டுப் பணிய வைக்கக் கூட இல்லை!

அம்மாவீட்டில் இருந்தபோது கூட. வேலை முடிந்து செல்லும்போது முகம் கழுவிக் கூந்தல் உடை திருத்திக் கொண்டுதான்வீட்டுக்குப் போவாள், இல்லாவிட்டால். "என்னடாக் கண்ணு. அதிக வேலையா? பேசாமல் உட்கார், உன் காலுக்கு ஒத்தனம் கொடுக்கிறேன்," என்று தாயார் உருகுவாள்,

ஆனால் இங்கே அவள் பரட்டைத் தலையாக நின்றால் கூடப் பார்க்கவோ. என்னவென்று கேட்கவோ ஆள் கிடையாது எனும்போது. உடை தோற்றம் எல்லாவற்றிலுமே மாதங்கிக்கு ஓர் அசட்டை வந்துவிட்டது!

யுகேந்திரன் அவளை மனைவியாக ஏற்க மறுத்தது வியப்பே இல்லை என்று எண்ணிவிட்டு. உடனே அவள் தன்னைத் தானே திருத்திக் கொண்டாள்,

இரண்டு பெண்களையும் ஒத்து நோக்கிப் பார்த்து. யுகேந்திரன் இந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கவில்லை, இவளிடம் உள்ள மையலால்தானே. அவன் திருமணத்தை வெறுத்ததே! கூடவே மாதங்கியையும்!

தன்னை அறியாமல் கைகளால் தலைமுடியை லேசாகக் கோதிப் படிய வைத்தபடி. மாதங்கி .வந்த பெண்ணைப் பார்த்து லேசாக

முறுவல் செய்தாள்,

“சா , ரி, நீங்கள் பேசியதை முதலில் கவனிக்கவில்லை!” என்றாள் மெல்லிய குரலில்,

உதட்டை அழகாகப் பிதுக்கினாள் அவள்,

“கவனித்தாலுமே. இவ்வளவு நாட்கள் செய்யாத எதைச் செய்து விடப் போகிறாய்?” என்று வெறுப்புடன் கேட்டாள் அந்தப் பெண், “யுகேனை டைவர்ஸ் செய்துவிட்டு ஓடப் போகிறாயா? அல்லது ஒரேயடியாக உயிரைத்தான் விட்டுவிடுவாயா? எந்த வகையில் யுகேந்திரனுக்கு விடுதலை தரப் போகிறாய்?”

அன்றுதான் சந்தித்த ஒருத்தியிடம் என்ன சொல்வது என்று ஒரு நியதியும் இவளுக்குக் கிடையாதா? அல்லது மாதங்கி உல்லாசத்தில் மிதந்து கொண்டிருப்பதாகக் கருதுகிறாளா?

“என் கவனமின்மையால். நீங்கள் இரண்டு தடவை கத்திப் பேசும்படி ஆனதற்குத்தான் வருத்தம் தெரிவித்தேன், அவ்வளவே, மற்றபடி உங்கள் விருப்பங்களில் எதையும் நிறைவேற்றும் நிலையில் இப்போதைக்கு நான் இல்லை!” என்று தெளிவாகக் கூறினாள்,

சற்று அழுத்தத்துடன்தான் சொன்னாள், அதென்ன? ஆளாளுக்கு அவளைப் போட்டுப் பந்தாடுவார்களா. என்ன?

வீட்டில் மற்றவர்களுக்கு அதிக உரிமை இருக்கலாம், ஆனால் இது பொது இடம், இங்கே இந்தப் பெண்ணுக்கு இருக்கும் உரிமை மாதங்கிக்கும் உண்டுதானே?

தாலி கட்டியவனால் துரும்பாய்த் தூக்கி எறியப்பட்டவள்! அதன் காரணமான தன்னைக் கண்டதும் நடுங்கி ஒடுங்கிப் போவாள் என்று அந்தப் பெண் எதிர்பார்த்தாள் போலும், இப்போது மாதங்கியின் பதிலில் அவளுக்குத்தான் தூக்கிவாரிப் போட்டுவிட்டது,

“எஎன்ன,ன்ன? என்ன “ என்று தடுமாறியவள் உடனே சுதாரித்து. “ஏய்! என்ன திமிர் உனக்கு? நான்யாரென்று தெரியவில்லை? அபீதாடீ! அபீதா! அபி அபி என்று யுகேந்திரன் கொஞ்சுகிற அந்த அபீதா! என்னிடம் மரியாதையாக நடந்துகொள், அல்லது. உன்னை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவேன்!” என்று பழைய மாதிரியே கத்தலானாள்,

இப்போதே யுகேந்திரனைப் பொறுத்தவரையில் மாதங்கி உரிமை உறவு எதுவும் இல்லாதவள்தான், இதற்கு மேல் இல்லை என்று ஆக்குவதற்கு என்ன இருக்கிறது?

தாயைப் பற்றிச் சொல்லி வருந்தியபோது யுகேந்திரனின் அலட்சியம் நினைவு வந்தது,

அவனைப் போலவே லேசாகத் தோளைக் குலுக்கி. "நீங்கள் என்ன செய்வதானாலும் இப்படிக் கத்தி ஊரைக் கூட்டாமல் மெதுவாகப் பேசுவது நல்லது, பொது இடம் பாருங்கள். இப்படி அலறுவது சரியில்லை," என்று மாதங்கி அமைதியாகவே குத்தினாள்,

அவனிடமும் போகட்டும், இந்தப் புகாரைக் கேட்டுவிட்டுத் தன்னிடம் அதட்ட வந்தால். இதே போலத் தோளைக் குலுக்க மாதங்கியால் மட்டும் முடியாதா என்ன?

வேண்டும் என்றே. "நாலு பேர் பார்க்க இப்படிக் கத்தாதீர்கள், என்னவோ ஏதோ என்று கூட்டம் கூடிவிடும்!" என்று சேர்த்துச் சொன்னாள், சீண்டினாள்!

முகம் ரத்தமெனச் சிவக்க ஏதோ சொல்ல வந்த அபீதா அதைச் சொல்லாமலே வாயை இறுக மூடிக் கொண்டாள்,

கோடாய் அழுந்த மூடிய உதடுகளைப் போலவே. கண்களும் இடுங்கிப் போயின,

தன் எண்ணம் அவளுக்குப் புரிந்து விட்டதோ என்ற மாதங்கிக்கு சந்தேகம் வந்தது, அதை விடவும். இந்த வாக்குவாதம் எங்கே. எப்படி நடந்தது என்று யுகேந்திரன் கேட்டால் இந்த அபீதாவால் என்ன பதில் சொல்ல முடியும்?

ஒரு பொது இடத்தில் இருந்தவளிடம் போய். வலுச் சண்டைக்கு இழுத்தவள் அவளே அல்லவா?

மூன்று ஆண்டுகளாகப் பொறுமை காத்த புண்ணியவதி என்கிற வேஷம் கலைந்து போய்விடாதா?

நிறையப் பொய் சொல்லவும் இயலாது, பல பேர் பார்க்க நடந்ததை மாதங்கியால் நிருபிக்கவும் முடியும்! இவள் எந்த அளவுக்குத் துணிவாள் என்று தெரியாதே!

என்னடீ என்பது போல மாதங்கி நிற்பதைப் பார்க்கும்போதே

அபீதாவுக்கு எழுந்த சந்தேகம். யோசிக்கும்போது மேலும் உறுதிப்பட்டது,

இல்லை, இவளை வேறு விதமாக விரட்ட வேண்டும் என்று யோசித்தபடி. “என்னடீ. என்னிடமே விளையாடிப் பார்க்கிறாயா? என்னை யார் என்று நினைத்தாய்? மூன்று ஆண்டுகளாக யுகேனை என் பிடியில் வைத்திருக்கிறேன்! ஒருநாளும் அவனை விட மாட்டேன், மரியாதையாக யுகேனை விட்டு விரைவிலே நீ விலகிப்போய்விடு, சண்டித்தனம் ஏதும் செய்தாயானால். அவனை விட்டே உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன்! “ என்று மிரட்டலாக மொழிந்தாள்,

ரொம்பத்தான் நம்பிக்கை என்று எண்ணிய மாதங்கிக்குச் சிரிப்பு வந்தது,

யுகேந்திரனால் அவளை எப்படி வெளியேற்ற முடியும்? லட்சக் கணக்கில் பணத்தைத் தந்தையிடம் என்ன சொல்லிக் கேட்டு வாங்கி. அவளிடம் கொடுத்துப் போய்த்தொலை என்று வழியனுப்ப முடியும்? அது முடியாமல்தானே அவள் அங்கேயே இருப்பதை அவன் சகித்துக் கொண்டிருப்பதே! அது தெரியாமல் இவள் என்னமோ கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வைப்பாளாமே!

ஒன்று தெரிகிறது, மூன்றாண்டுக் காதலியான இவளிடமும் யுகேந்திரன் எல்லாவற்றையும் ஒப்பித்து விடவில்லை! சுயகௌரவம் தடுக்கிறது போலும்!

ஏளனம் கலந்த வெறுத்த சிரிப்பு உதடுகளில் நெளிய. மாதங்கி மீண்டும் தோளைக் குலுக்கினாள்,

அப்படிக் குலுக்கும்போதே அவள் மனம் லேசாகத் திடுக்குற்றது,

இந்தத் தோள்க் குலுக்கல் அபீதாவை வெறுப்பேற்றச் செய்ததில்லை, தானாகவே அனிச்சைச் செயலாக நேர்ந்தது, அவளென்ன. தன்னை அறியாமலே யுகேந்திரனைப் பின்பற்றுகிறாளா?

அப்படிப் பின்பற்றுவதற்கு அவன் ஒன்றும் லட்சிய புருஷன் அல்லவே!

சே என்று மாதங்கி தன்னைத்தானே குட்டிக் கொண்டபோதும்.

அந்தச் செயல் அபீதாவை ரொம்பவுமே சீண்டிவிட்டது,

முகம் செக்கச் சிவந்ததை அவளது நிறம் மறையாது காட்டியதோடு. மற்றவளுக்குப் பதில் கொடுக்கவும் தெரியாமல் மூச்சிரைத்தது அவளுக்கு,

தோற்று ஓடினாற்போல இருக்கக் கூடாது என்று எண்ணியவள். “இரு இரு, உன்னை நான் பிறகு பார்த்துக் கொள்ளுகிறேன், உன்னை விரட்டி அடித்தே ....இப்போது எனக்குப் பார்லருக்கு நேரமாகிவிட்டது, அதனால்... “ என்று வாய்க்கு வந்ததைச் சொல்லிக் கறுவிவிட்டு அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள்,

ஓடிப் போனாள் எனலாம்,

ஒரே ஒரு கணம் உள்ளம் துள்ளியபோதும். மாதங்கியின் மனம் முன்னிலும் அதிகமாகச் சோர்ந்து போயிற்று,

கணவனுடைய காதலி என்ற வார்த்தையே மோசமானது! இதில். வாய்ப் போரில் அவளைச் சற்றே பின்வாங்க வைத்துவிட்டதாகப் பெருமை வேறா?

அப்படியென்ன. அவள் யுகேந்திரனின் வாழ்வை விட்டு அடியோடு ஒதுங்கியா போய்விட்டாள்? இவளையே விரட்டுவதாக மிரட்டி விட்டல்லவா போயிருக்கிறாள்!

மாதங்கியைச் சோர்விலிருந்து மீட்பது போல. ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளிடம் இருந்து “ஹோ” என்ற கூச்சலும் கைதட்டலும் கேட்டது, யாரோ அவுட் ஆகி விட்டார்கள்!

உதடுகளில் புன்னகை அரும்பியபோதும் மனதில் பளு குறைய மறுத்தது, மேலும் சற்று நேரம் இருந்து பார்த்துவிட்டு மெல்ல எழுந்துவீடு நோக்கிச் செல்லலானாள் அவள்,

மாதங்கி நினைத்தபடியே அந்த அபீதா அவளுடைய மூன்றாண்டுக் காதலனிடம் எதையும் சொன்னதாகத் தெரியவில்லை, துணிந்து ஏதாவது சொல்லியிருந்தாலும். யுகேந்திரன் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை,

ஓரிரு நாட்களை இறுக்கத்துடனேயே கழித்த மாதங்கி. யாரும் எதுவும் கேளாது போகவே. இயல்பு நிலைக்குத் திரும்பினாள்,

மனதில் முணுமுணுவென்று ஒரு வேதனை தவிர,

என்னதான் காதலி ஒருத்தி யுகேந்திரனுக்கு இருக்கிறாள் என்று அவனது வாய்மொழி மூலமாகவே அவளுக்குத் தெரியும் என்றாலும். உயிரும் உடலுமாக அந்தக் காதலியைப் பார்க்காத வரையில். தன் இல்லற வாழ்வு கெட்டது மட்டுமே மாதங்கியை வருத்திக் கொண்டிருந்தது,

இப்போது அபீதாவைப் பார்த்துவிட்ட பிறகு. அவளும் அவனும் பேசி மகிழ்வது போன்ற கற்பனைகள் அடிக்கடி தோன்றி அவளை வருத்தலாயின,

மனம் ஒரு குரங்கு அல்லவா? மனக் குரங்கைக் கட்டுப்படுத்த முடியாமல். இன்னும் அதிக நேரம் பூங்காவில் உட்கார்ந்திருக்கலானாள் அவள்,

ஒரு நாள் அவள்வீடு வந்து சேரும்போது மணி ஏழரையைத் தாண்டிவிட்டது,

வீட்டுக்குள் வந்தால் காளிகாதேவியாக மாமியார் தயாராகக் காத்திருந்தாள்,

“அலுவலகம் முடிவது ஐந்தரைக்கு, வண்டியில் வர அரை மணி நேரம், ஒன்றரை மணி நேரம் எங்கே ஊர் சுற்றிவிட்டு வருகிறாள்? அப்படி ஊர் சுற்றுகிறவளுக்கு வடித்துக் கொட்ட. இதென்ன அன்னச் சத்திரமா? “

பூங்காவுக்குச் செல்வதை மாதங்கி தப்பாகக் கருதியதில்லை,

ஆனால் தனபாக்கியத்தின் கோப முகம் உண்மையை ஏற்குமோ என்னவோ என்ற சந்தேகத்தில். “அலுவலகத்தில் கொஞ்சம் அதிக வேலை, அதனால் நேரமாகிவிட்டது,” என்று சமாளித்தாள் அவள்,

“அப்ப்படியா? ஆனால் தினமுமே கொஞ்சம் கொஞ்சமாகத் தாமதமாகத்தானே வருகிறாய்?” என்று சந்தேகத்துடன் கேட்டாள் பெரியவள்,

“ஆமாமாம், நான் பத்து நிமிஷம் லேட்டாக வந்தால் அப்பா. அண்ணன் என்று ஆளாளுக்குச் சொல்லி ஊரைக் கூட்டுவீர்கள்! இப்போதானால் வார்த்தைகளுக்கு வலித்துவிடுமோ என்று பயப்படுவது போல இப்படி மெல்ல்லக் கேட்கிறீர்களே!” என்று ஊதிவிட்டாள் நாத்தனார்,

முழுதாகப் பொய் பேசவும் பிடிக்காமல். "வழியில் அழகான பூங்கா ஒன்று இருக்கிறது, சின்னப் பிள்ளைகள் வந்து விளையாடுவார்கள், அவ்வப்போது உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வருவேன்," என்றாள் மாதங்கி கவனத்துடன் உணர்ச்சி காட்டாத குரலில்,

"அதானே பார்த்தேன்!" என்றாள் ஊர்வசி கிண்டல் குரலில், "சீக்கிரமாக வந்தால்வீட்டில் ஏதாவது வேலை செய்ய நேர்ந்து விடுமோ என்ற பயத்தில் மேடம் பார்க்கில் போய் இருந்துவிட்டு வருகிறாள் போல! சும்மா உட்கார்ந்திருப்பது மட்டுமா? அல்லது. இன்னும் நம்வீட்டில் மூச்சு விடுவது முதற்கொண்டு பார்க் மேடையில் பறை சாற்றப் படுகிறதா?" என்று நியாயமற்று எடுத்துக் கொடுத்தாள்
,

"வீட்டு விஷயங்கள் பற்றி நான் யாரிடமும் பேசுவதில்லை," என்றாள் மாதங்கி சுருக்கமாக,

"பின்னே இவ்வளவு நேரம் வேறே எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தாய்?" என்று தனபாக்கியம் கேட்கவும் மாதங்கி திகைத்தாள்,

எவ்வளவு கெட்டிக்காதத்தனமாகப் பூங்காவில் அவள் யாருடனோ பேசிக் கொண்டிருந்ததாக முடித்து விட்டாள் மாமியார்!

தலையசைத்து. "இவ்வளவு நேரமும் நான் யாருடனும் எதைப் பற்றியும் பேசவே இல்லை, சும்மா அங்கே சின்னப் பிள்ளைகள் ஓடிப் பிடித்து விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன், அவர்களைக் கூட்டிப் போக ஆயா வருவாள், , அதுவரை உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பேன்," என்று உண்மையைச் சொன்னாள் மாதங்கி,

ஆனால் அதை நம்பத்தான் அம்மாவும் மகளும் தயாரில்லை! அவர்களை நம்ப வைத்தே தீர வேண்டும் என்கிற வேகம் அவளுக்கும் இருக்கவில்லை,

எனவே. "நான் முகம் கழுவப் போகிறேன்," என்று முணுமுணுத்துவிட்டு அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டாள்,

டீவி பார்க்கும் பாவனையில் அந்த ஹாலிலேயே அமர்ந்திருந்தான் அடுத்தவன் யோகேந்திரன், மாதங்கி காது கேளாத

தூரம் சென்றுவிட்டதைக் கவனித்து. “ஏன் அம்மா. அண்ணியை இப்படிச் சீண்டுகிறீர்கள்? அவர்களைக் கேள்வி கேட்பதே தப்பு, உங்களை மதித்து அவர்கள் பதில் சொன்னால் அதை நம்பாமல் ஏதேதோ பேசலாமா? சரியில்லை அம்மா, ஊர்வசி வேறு. யோசிக்காமலே எதையாவது பேசுவது! கொஞ்சம் வாயை மூடிக் கொண்டிருக்கப் பழகும்மா!” என்று அண்ணனாய்த் தங்கைக்கு அறிவுரை சொன்னான்!

“முதலில் நீ வாயை மூடிக் கொண்டிரு! பெண்களுக்குள் என்னவெல்லாமோ பேசுவோம்! அதை ஒட்டுக் கேட்டதோடு இலவச அட்வைஸ் வேறா? சும்மா உன் திருவாயை மூடிக் கொண்டு போ!” என்று ஆத்திரத்துடன் மொழிந்தாள் தங்கை,

கட்டுப்பாட்டை விட்டு ஏன் வாயைவிட்டோம் என்று யோகேந்திரன் தன்னைத் தானே நொந்துகொண்டான்,

மாதங்கியிடம் குறை காண முடிந்தால் அதைச் சும்மா விடக் கூடாது அல்லவா? இது வழக்கம் போல யுகேந்திரன் காதுக்கும் போனது, அவனுக்குத்தான் அவள் யாருமே இல்லையே!

வழக்கம் போலவே. “நீங்கள் தேர்ந்தெடுத்து அழைத்து வந்த மருமகள், குற்றம் குறை என்று என்னிடம் வராதீர்கள்,” என்று சம்பந்தம் இல்லாதவனாக முடித்துவிட்டான்,

மாதங்கிக்கு இப்போது ஊர் சுற்றி என்ற பெயர் ஒன்று வந்து சேர்ந்தது,

எதற்கு? படுகிற அவதியை ஒரு மணி நேரம் அதிகமாகப் படுவதில் என்ன பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடப் போகிறது என்று ஒரு தரம் மாதங்கி யோசித்துப் பார்த்தாள், ஆனால். இந்தச் சிறார்களின் சிரிப்பும் குதூகலக் கூச்சலும் அவளது நொந்த மனதிற்கு எவ்வளவோ ஆறுதல் அளிக்கும்போது. அதை ஏன் விட வேண்டும் என்றும் யோசனை ஓடியது,

அப்படி விரைந்துவீட்டுக்கு வந்துவிட்டால் மட்டும் உத்தமி என்று கொண்டாடி விடப் போகிறார்களா?

இதில்லாவிட்டால் இன்னொன்றைப் பிடிப்பார்கள், அதைத் தவிர்க்க இன்னொரு வழியைத் தேட வேண்டும், அதைவிட. இந்தக் குறையையே பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டு இருக்கட்டுமே!

அதுவுமே. யுகேந்திரன் அதிலே அக்கறை காட்டாது போகவும் பெரிதும் குறைந்து போயிற்று,

பார்க்கிலும் அவளைப் போல இன்னும் சில பேர். அந்தப் பிள்ளைகளுடைய பெற்றோராகவும் இருக்கலாம், சிறுவர்களின் விளையாட்டைப் பார்க்க வந்தார்கள், எல்லோருமாகச் சேர்ந்து பேசிச் சிரித்தார்கள்,

இதனால்வீட்டுக்குச் செல்லும் நேரம் இன்னும் சற்றுத் தாமதம் ஆன போதும். மாதங்கி அதைப் பெரிதாக நினைக்கவில்லை,

அப்படி அவளது வரவுக்காகவீட்டில் யார் துடிக்கப் போகிறார்கள்? வராமலே போனால் நல்லது என்று எண்ணுகிறவர்கள்தானே அங்கே இருப்பவர்கள்!

இப்படியெல்லாம் வருந்திவிட்டு. அதற்காகத் தன்னைத்தானே மாதங்கி கடிந்து கொள்வாள், அவளது நிலைமை மோசமானதுதான், ஆனால். அதை நினைத்து வருந்தி ஓய்ந்து போவதில் யாருக்கு. என்ன லாபம்?

இன்னும் ஐந்து ஆண்டுகளேனும். அவளுடைய தங்கைகளின் திருமணம் நல்லபடியாக நடக்கும் வரையேனும். அவள் தன்னைப் பாதுகாத்துதான் ஆக வேண்டும்!

இந்த உறுதி கொண்ட பிறகே அவளால் உறங்க முடிந்தது எனலாம்,

என்றேனும் அதிகத் தாமதம் ஆகிவிட்டதால் பூங்கா நட்பினரே அவளை வீடு வரை கூட்டி வந்து விட்டுவிட்டுப் போனார்கள்,

அப்போது மட்டும் மாமியாரும் நாத்தனாரும் கண் கொத்திப் பாம்பு போலக் கவனமாகக் கண்காணிப்பார்கள், ஆனால் அதை மாதங்கி சற்றும் பொருட்படுத்துவது இல்லை, மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம்?

இதுவும் தொடர்ந்தது,

இதை விடவும் முக்கியமானது ஒன்று. அவளது அலுவலக வேலை முறை, ஆண்டுக்கு இரண்டு மாதங்கள் அலுவலகத்தில் கடுமையான வேலை இருக்கும், பன்னாட்டு நிறுவனம்,. அவர்கள் நாட்டில் கணக்கு முடிக்கிற சமயம் இங்கும் வேலை அதிகம் இருக்கும்,

அப்படி நாட்களில். மாதங்கி வண்டியை எடுத்துப் போவதில்லை, பதினோரு மணிக்கு மேலெல்லாம் தனியே ஸ்கூட்டியில் அவ்வளவு தூரம் வருவது. ஆபத்தை வலிய அழைப்பதுதான் அல்லவா?

பொதுவாக அந்தந்தப் பக்கம் உள்ள காரில் வந்த சக அலுவலர் யாரேனும் கூட்டி வந்துவீட்டருகில் விட்டுப் போவது வழக்கம், மனிதாபிமானம்,

அன்றும் அப்படித்தான் நடந்தது, அவளுடைய செட்டில் வேலையில் சேர்ந்தவன், படிக்கும்போதே காதல், வேலை கிடைத்ததுமே திருமணம் முடிந்து உடனே ஒரு குழந்தை, அவசரக்காரன் என்று எல்லோரும் கிண்டல் செய்வார்கள்,

காரிலிருந்து இறங்கியதும். “கவனமாக மெதுவாகவே ஓட்டுப்பா,” என்று சிரித்தவாறே சொல்லிக் கையாட்டிவிட்டு வீட்டுப்பக்கமாய்த் திரும்பும்போதே அவளது புன்னகை மறைந்து நடை தளர்ந்தது,

காலை அலுவலகத்துக்குக் கிளம்பும் வரை அன்பற்றசூழல்! ஒரு புன்னகைக்குக் கூடப் பஞ்சமாகிப் போன முகங்கள்!

கதவைத் திறந்துவிட்டு முகத்தைச் சுளுக்கிக் காட்டிவிட்டுச் செல்லும் மாமியாருக்காக மனதைத் தயார்ப்படுத்தியவாறே கதவைத் தட்டினால் கதவு இலகுவாகத் திறந்துகொண்டது,

தாளிடப் படவே இல்லை!

பாதுகாப்பு பாதுகாப்பு என்று கத்தும் மாமனார் இதற்கு ஒரு தரம் கத்தப் போகிறார் என்று எண்ணியபடியே உள்ளே சென்றால் கணவன் மாமியார் நாத்தனார் மூவருமே ஹாலில் இருந்தார்கள், பக்கவாட்டுக் கதவுப் பக்கம் மைத்துனனின் தலை தெரிந்தது,

என்னவாக இருக்கும் மூளை ஒரு பக்கம் யோசித்தபோதும். வழக்கம் போல மாதங்கியின் உடம்பு இயல்பாகத் திரும்பிக் கதவை உட்புறமாகத் தாளிட்டது,

“ஹூம் என்னத்தைச் சொல்ல? எப்படி எப்படியோ ஊர் சுற்றிவிட்டு நடு ராத்திரியிலேவீடு திரும்புகிறவளுக்கெல்லாம் விழித்துக் கிடந்து கதவு திறக்க வேண்டியிருக்கிறது!” என்று தனபாக்கியம் எரிச்சல்பட்டாள்,

எப்படியெப்படியோ ஊர் சுற்றுவதா? என்ன பேச்சு இது?

“நான் ஒன்றும்... “ என்று மாதங்கி மறுத்துப் பேசத் தொடங்கும்போதே. “யாரவன்?” என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான் யுகேந்திரன்,

மாதங்கிக்கு ஆச்சரியமாக இருந்தது, இயன்றவரையில் அவளோடு பேசாதவன். அவள் ஒருத்தி இருப்பதாகவே கண்டு கொள்ளாதவன் அவளுடைய கணவன்! இப்போது அவளிடம் கேள்வி வேறு கேட்கிறானே!

“என்னையா கேட்டீர்கள்?” என்று வியப்புடன் வினவினாள் அவள்,

அவளது வியப்போ காரணமோ புரியாமல். “பின்னே வேறே யாரைக் கேட்பாங்க? நீதானே நட்ட நடுராத்திரியிலே எவனுக்கோ கையாட்டிக் காட்டிட்டு உள்ளே வந்திருக்கிறே? உன்னைத்தானே கேட்கணும்? வேறே தெருவிலே போறவளையா கேட்க முடியும்? ஆனால் இந்த நேரத்திலேவீட்டுப் பெண்பிள்ளை எவளும்... “ என்ற தாயின் பேச்சில் யுகேந்திரன் குறுக்கிட்டான்,

“அம்மா விடுங்கள்,இவ்வளவு நேரம் விழித்திருப்பது உங்கள் உடம்புக்கு ஆகாது போய்ப் படுங்கள், இவளை நான் பார்த்துக் கொள்கிறேன்,” என்றவன் மாதங்கியிடம் திரும்பி மறுபடியும் “அவன் யார்?” என்று கேட்டான்,

அவள் புரியாமல் விழிக்கவும். “சும்மா நடிக்காதே! இந்தப் பார்வையில் ஏமாற இங்கே யாரும் முட்டாளில்லை, சொல்லு! இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்? எவனோடோ ஊர் சுற்றிவிட்டு. பிரிய முடியாமல் பிரிந்து வந்தாயே. அவன் யார்? “ என்று முழங்கினான் யுகேந்திரன்,

மாதங்கிக்கு ஒருவாறு விஷயம் புரிந்தது, அவள் காரில் தாமதமாகக் வந்து இறங்கியதைத் தப்பாக எண்ணிவிட்டார்கள், ஆனால் மாமியாரிடம் தாமதம் பற்றிக் காலையிலேயே சொல்லிவிட்டுத்தானே போனாள்?

கணவன் கேட்டதற்குப் பதிலாக. “அது பாஸ்கர், கூட வேலை பார்க்கிறார், அலுவலகத்தில் வேலை முடியத் தாமதம் ஆனதால்.வீட்டில் விட்டுவிட்டுப்...ஆ !” என்று விவரம் சொல்லிக்கொண்டே போனவள். கன்னத்தில் இடி இறங்கவும்

தன்னை மீறி அலறிவிட்டாள்,

வலியை விடவும் அதிர்ச்சி!

அவன் அடிக்கவா செய்தான்?! அவளையா?

ஆனால் மேலே யோசிக்க அவளுக்கு அவகாசமில்லை! “பாதகி. பாதகி! அப்போதே அபி பல முறை சொல்லியும் மடத்தனமாக நம்பாமல் இருந்தேனே! ஆனால் கண்ணாலேயே பார்த்துவிட்டேனே! இனியும் ஏமாறுவேனா? எப்படியெப்படி? வாய் கிழிய இளித்தபடி விடை கொடுப்பாளாம், அப்புறம்வீட்டுக்குள் வருவதானால் கால் தயங்குமாம். இந்தக் கால்தானே? முகம் வா... டி விடுமாம்! இந்த முகம்தானே? இந்த மாதிரிக் குடும்பத்தில் இருந்துகொண்டு என்ன அசிங்கம்! இந்தவீட்டில் இருந்து கொண்டு அதைப் பண்ண என்ன தைரியம்! என்னைச் சொல்ல வேண்டும், நான் அம்மா சொன்னதை நம்பவில்லை! அபி கூறியதை நம்பவில்லை! எல்லாவற்றுக்குமாக என் முகத்தில் கரியைப் பூசிவிட்டாயே! உன்னை...உன்னை என்ன செய்தால் தகும்? இது போதுமா? இதற்கு மேல் இன்னொரு தரம் இந்தத் தப்பு செய்ய மனம் துணியுமா? ....”

வார்த்தைகளால் மட்டுமாய் அவன் அவளை வருத்தவில்லை,

அடியும் குத்தும் எந்த இடத்தில் விழுகிறது என்பது கூட இல்லாமல். தடுக்க இயலாமல் அவள் தடுமாறி விழுகிற வரை அவன் நிறுத்தவில்லை!

அப்போதும் கூட. அவனுடைய தம்பி யோகேந்திரன் எவ்வளவோ முயன்று அண்ணனைத் தடுத்து இழுத்துப் போன பிறகுதான்!

# அத்தியாயம் -5

அன்று வரையான நினைவுகளில். மாதங்கிக்கு மேலும் அவமானமாக இருந்தது. கணவன் அடித்ததும் செயலற்று நின்று அந்த அடிகளை அவள் ஏற்றது!

ஒரு மாட்டை அடிப்பது போல அவளை அடித்திருக்கிறான்,. அவளும் அந்த மாட்டைப் போலவே எதிர்க்கத் துணிவின்றி அடிபட்டுக்கொண்டு இருந்திருக்கிறாளே!

ஏன் அவள் யுகேந்திரனை எதிர்க்கவில்லை?

கல்லூரி நாட்களில் தோழிகளோடு சென்றுகொண்டிருந்தபோது ஒருத்தியின் பையைப் பிடுங்கிக்கொண்டு ஓட முயன்ற திருடனை விடாமல் பிடித்துக் கொடுத்திருக்கிறாள்!

அதற்காகப் பிரின்சி கூட அவளைப் பாராட்டினார்கள்! அவளுக்குமே தன்னைப் பற்றிப் பெருமைதான், தோழிகள் அய்யோ. அய்யோ என்று கத்திக்கொண்டு நின்றபோது. பயமே படாமல். இந்தத் திருடன் இப்படித் தப்பி ஓடக் கூடும்,. தடுத்தால் இப்படித் தாக்கக் கூடும் என்று வேகமாக யோசித்துச் செயல்பட்டாளே!

இன்று என்ன ஆகிவிட்டது?

அடிப்பது கணவன் என்பதால் பழங்காலப் பத்தினியாகப் பணிந்து போனாளா?

சீச்சீ. என்ன கேவலம்! ஒழுங்கான கணவனாக நடந்திருந்தால் கூட. அவளை அடிப்பதற்கு அவனுக்கு உரிமை கிடையாது, அப்படியிருக்க இவன்!

அதிர்ச்சியா?

எப்போதும் யாரோ போல நடந்துகொள்ளும் யுகேந்திரன். இன்று மனைவியின் ஒழுக்கம் காக்கும் கணவனாக மாறி அடித்துத் திருத்த முயற்சிக்கக் கூடும் என்று எதிர்பாராததால் அதிர்ந்து செயலற்றுப் போனாளா?

இந்திரா காந்தி இறந்ததற்குக் கூட. குண்டுக் காயங்களைக் காட்டிலும் அதிர்ச்சியே காரணம் என்று சொல்லிக் கேட்டிருக்கிறாள்!

அப்படி ஓர் அதிர்ச்சி நேரவும். உடம்பு செயலற்று உறைந்து

போனதா?

அவன் அடித்துப் போட்டதில் அப்படியே தரையில் விழுந்து கிடந்தது இன்னும் கேவலமாகத் தோன்றியது,

மூளை கொஞ்சம் வேலை செய்து ஆழ்ந்த மூச்சுகளை எடுக்கச் சொன்னது, மூச்செடுக்க எடுக்க. ஒருவாறு பதட்டம் குறைந்து உடல் உறுப்புகள் வசத்துக்கு வந்ததும் மாதங்கி மெதுவாக எழுந்து அமர்ந்தாள்,

சுற்றிப் பார்த்ததில். அங்கே வேறு யாருமில்லை என்பது தெரிந்தது,

அசகாயசூரன் அடித்துப் போட்டுவிட்டான்! மூட்டிக் கொடுத்தவர்கள். தூண்டி விட்டவர்கள் எல்லோரும் அவள் எப்படியோ கஷ்டப்படட்டும் என்று சந்தோஷமாகத் தூங்கப் போய்விட்டார்கள்! என்ன அநியாயம்!

மனிதத் தன்மையே இல்லையே! மைத்துனன் யோகேந்திரன் கூடவா. அப்படி?

அவன் கொஞ்சம் வேறு மாதிரி என்று எண்ணினாள்!

ஆனால் கூடைச் செங்கல்லும் பிடாரிகள் என்பார்களே. அப்படித்தான் போலும்! ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்! போகிறார்கள்!

அவளுக்குமே இப்போது உடல் வெகுவாகச் சோர்ந்திருந்தது, படுத்தால்தான்  முடியும்!

சிரமப்பட்டு எழுந்தவள் சட்டெனத் திகைத்தாள்,

அவள் எங்கே போய்ப் படுப்பது? யுகேந்திரன் இருக்கும் அறையிலா?

அல்லது அவளை அடித்துவீழ்த்தினானே. இந்த ஹாலிலேயே ஒரு சோஃபாவில் சுருண்டு முடங்குவதா?

இரண்டு[மே கேவலமாக அருவருப்பில் மாதங்கியின் உடல் கூசிச் சிலிர்த்தது,

இந்தவீட்டில் அவள் எப்படியெப்படியோ வாழப் போவதாக எண்ணி வெகு சிறப்பாகத் திருமணத்தை நடத்திய பெற்றோரின்

நினைவு வந்தது,

சுற்றிலும் தீ எரிவது போன்ற உணர்வில் அங்கே நிற்கக் கூட அவளால் முடியவில்லை, தட்டுத் தடுமாறியபடிப் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனாள்,

வீட்டின் பின்னே ஒரு தோட்டமும். காற்றாட உட்கார்ந்திருக்க இரு சிமென்ட் பெஞ்சுகளும் உண்டு,

கால்கள் தடுமாற அங்கே அமர்ந்தவளுக்கு விம்மி வெடித்துக்கொண்டு கண்ணீர் பெருகியது,

கல்யாணமாகி. யுகங்களாகத் தோன்றிய இந்த மூன்று மாதங்களாக நடந்த அனைத்தும். ஒவ்வொரு வினாடியுமே கண்ணீரை இன்னும் பெருக்கினவே அன்றி நிறுத்த. குறைக்க வலிமையற்றுப் போயின,

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமவ் எத்தனை மணி நேரம் அழுதாளோ? அல்லது எத்தனையோ மணி நேரமாக அவளுக்குத்தான் தோன்றியதோ?

"அண்ணி என்ற யோகேந்திரனின் குரல் முதலில் அவளை எட்டவே இல்லை!

அவன் பல முறை அவளை அழைத்திருப்பான் போலும்!

கடைசியாக அவள் முன்னே போய் நின்று அழுத்தமான குரலில் அவன் கூப்பிட்ட பிறகே. மாதங்கி நிமிர்ந்து பார்த்தாள்,

பரவாயில்லை, இவ்வளவு நேரம் கழித்து உயிருடன்தான் இருக்கிறாளா என்று பார்க்க வந்தான் போலும், உயிருடன் இருப்பது ஏமாற்றமாகக் கூட இருக்கும்!

கசந்த பார்வை அவனை விட்டு விலகிப் போயிற்று,

வருத்தத்துடன். "அண்ணி என் மீதும் கோபமா? இருக்கத்தான் செய்யும், இவ்வளவு நேரமாக இங்கே தனியாக உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறீர்களே! " என்றவன் கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து. "கிட்டத்தட்ட ஒரு மணி நேரம். அண்ணி! பாவம் நீங்கள்!" என்று பரிதாபப்பட்டான்,

ஒரு மணி நேரம்தானா? இந்த மைத்துனனின் கடிகாரம் நின்றுவிட்டதா?

சந்தேகமாகத் தன் கையைத் திருப்பிப் பார்த்த மாதங்கிக்கு. அன்று அலுவலகத்திலிருந்து பதினொன்றரைக்குத் திரும்பி வந்து. யுகேந்திரன் கையால் அடிவாங்கி விழுந்து எழுந்து இங்கே வந்து உட்கார்ந்து .... எல்லாமாகக் கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம்தான் ஆகிறது என்றால் நம்பக் கூட முடியவில்லை,

துன்பம் காலத்தை நீட்டித்துக் காட்டும் போல! இன்னும் இங்கே வசிக்க வேண்டிய நாலைந்து ஆண்டுகள். நாற்பது ஆண்டுகள் போலத் தோன்றுமா? எப்படி சகிப்பது?

அவளது மனம் தெரியாமல் யோகேந்திரன் பேசினான், “அண்ணி.வீட்டுக்குள் வாருங்கள், நீங்கள் இன்னும் சாப்பிடவே இல்லையே, சாப்பாட்டு மேஜையில் இட்டிலி இருக்கிறது, சாப்பிட்டுவிட்டுத் தூங்க முயற்சி செய்யுங்கள், “

மறுப்பாகத் தலையை மட்டும் அசைத்துவிட்டு மாதங்கி அசையாமல் அமர்ந்திருக்கவும் யோகன் மறுபடியும் தொடங்கினான்,

“அண்ணி. இங்கே நான் உட்காரலாமா?” என்று கேட்டபடி அமர்ந்து. அவளை மேலும் வற்புறுத்தினான்,

“பட்டினியோடு தூங்காமலும் இருந்தால். பிரச்சினை ரொம்பப் பெரிதாகத் தோன்றும். அண்ணி... அப்படிப் பார்க்காதீர்கள் அண்ணி. உங்கள் பிரச்சினை பெரிதில்லை என்று நான் சொல்லவில்லை, ரொம்பவே பெரிதுதான், ஆனால் பட்டினியோடு தூக்கமும் இல்லாமல் எதை உங்களால் சமாளிக்க முடியும்? அண்ணி, ப்ளீஸ். யோசித்துப் பாருங்கள்! நீங்கள் இப்படி விழுந்து கிடக்கிறவர்களா? எவ்வளவோ திடமாகச்சூழ்நிலையை எதிர்கொள்ளுகிறீர்கள் என்று நினைத்தால் சொத்தென்று விழுந்து விட்டீர்களே! எனக்குத் தாங்கவே முடியவில்லை அண்ணி! “

இந்தப் பேச்சை மாதங்கியால் ஒத்துக்கொள்ள முடியவில்லை,

அப்படித் தாங்க முடியாதவன்தான். இப்படி சாவகாசமாக அவள் இருக்கிறாளா இல்லையா என்று பார்க்க வந்தானாக்கும்!

கசிந்து வந்த தெரு விளக்கின் ஒளியில். அவனை உறுத்து விழித்தாள் மாதங்கி,

கைக்கடிகாரத்தைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு, “ஓ! அதனால்தான் நான் என்ன நிலையில் இருக்கிறேனோ பார்ப்பதற்காக. வெறும் ஒன்றரையே மணி நேரத்தில் விழுந்தடித்துக்கொண்டு வேக வேகமாய் என்னைத் தேடி ஓடோடி வந்தீர்கள் போல!” என்றாள் மாதங்கி ஏளனமாக,

லேசாக முறுவலித்து. “குத்தலா அண்ணி? எனக்கு...நான் அண்ணனிடம் சற்றுப் பேச வேண்டியிருந்தது, என்ன மடத்தனம் செய்துவிட்டான் என்று அவனிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் அல்லவா? இப்போது உங்களைத் தேடி வரும்போது கூட. ஹால் ஃபோனில் மணியடித்தது, அங்கே நீங்கள் இல்லை என்றதும் பகீரென்று இருந்ததா? நீயே பார் என்று அண்ணனிடம் சொல்லிவிட்டு ஓடி வந்தேன், “ என்றான் மைத்துனன்,

“இந்த நேரத்தில் என்ன ஃபோன்? யாருக்கு என்ன பிரச்சினையோ. தெரியவில்லையே!” என்று மாதங்கி கவலைப்பட்டாள்,

“பிரச்சினை என்றால் அண்ணன் கூப்பிட்டிருப்பான்!” என்றான் யோகேந்திரன்,

“ஒன்றும் இராது, ஏதேனும் இருந்திருந்தால் அண்ணன் கூப்பிட்டிருப்பான்,” என்ற யோகேந்திரன். மாதங்கி சற்று சாதாரணமாகப் பேசியதும் வாய்ப்பை விட்டுவிடாமல். “வாருங்கள் அண்ணி,வீட்டினுள் போகலாம், பனி வேறு விழுகிறது, உள்ளே போய்க் கொஞ்ச நேரமாவது தூங்குங்கள், எதுவானாலும் காலையில் பார்க்கலாம்,” என்று அவளை உள்ளே அழைத்தான்,

யோகேந்திரனின் எண்ணம் மாதங்கிக்குப் புரிந்தது, இரண்டு வார்த்தை சாதாரணமாகப் பேசினால் அவள் இளகிவிட்டாள் என்று அர்த்தமா? தனக்கு ஒரு பிரச்சினை என்றால் மற்றவருக்கு என்னவோ என்று மனம் இரங்காதா? ஒருவேளை இந்தவீட்டாருக்கு அப்படிக் கிடையாது போலும்!

அவனை வெறித்து நோக்கிவிட்டு முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் அவள்,

“கொஞ்சம் யோசியுங்கள் அண்ணி, இரவு முழுவதும் இப்படி உட்கார்ந்திருக்க முடியுமா? வேலை முடிந்துவீடு வரவே

பதினொன்றாகிப் போயிற்று, நாளையும் வேலைக்குச் செல்ல வேண்டும், செல்வீர்கள் என்று நினைக்கிறேன், அதனால் கொஞ்ச நேரமாவது படுத்துத் தூங்கி ஓய்வெடுங்கள் அண்ணி!" என்று கெஞ்சினான் அவன்,

ஆனால் இவன் அண்ணன் எப்படி அடித்தான்! அந்த அபி சொன்னாளாமே!                சொல்லிச் சொல்லி அடித்தானே!

"எவளோ ஒருத்தி என்னவோ சொன்னாள் என்று மாட்டை அடிப்பது போல உங்கள் அண்ணன் என்னை அடித்திருக்கிறார், அவர் இருக்கும் அறையில் இனி நான் நுழைவேனா? எந்தத் தைரியத்தில் போவது?" என்றாள் வெறுத்த குரலில்,

திகைப்புற்று "அண்ணி?" என்றான் அவன், "போகாமல் எப்படி? புரியவில்லை. அண்ணி, உங்கள் அறைக்குள் போகாமலே எப்படி இருக்க முடியும்?"

அவளது பதில் வினாடி தாமதியாமல் வேகமாக வந்து விழுந்தது, "போனால். உங்கள் அண்ணன் இரவோடு இரவாக என் முகத்தில் தலையணையை வைத்து அழுத்திக் கொல்ல மாட்டார் என்று எனக்கு என்ன நிச்சயம்?"

"அண்ணி!" என்று அலறிவிட்டான் யோகேந்திரன், "என்ன அண்ணி இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? " என்று வருத்தமாக வினவினான்,

"ஏன் கூடாது? ஆமாம் தம்பி. மனிதர் படித்தவர். பண்பிருக்கும் என்றுதான் என் தந்தை நினைத்தார், அதற்கு நேர் மாறாகக் கை கூசாமல் காட்டுமிராண்டித்தனமாக என்னை இப்படி அடித்திருக்கும் மனிதர் அதன் தொடர்ச்சியாகப் பழைய கற்கால மனிதராகக் கொலையும் செய்ய மாட்டார் என்று எனக்கு என்ன நிச்சயம்? எனக்கு நம்பிக்கை இல்லை. தம்பி, இனி அந்த அறைக்குள் நான் போய்ப் படுக்க மாட்டேன்!" என்று திட்ட வட்டமாக அறிவித்தாள் மாதங்கி,

குரல் இறங்கிவிட்டபோதும். "அண்ணன் அப்படி எதுவும் பண்ண மாட்டார். அண்ணி, எனக்கு நிச்சயமாகத் தெரியும், நம்புங்கள். அண்ணி!" என்று அவளுக்கு உணர்த்த முயன்றான் யோகேந்திரன்,

"ஓ. அப்ப்படியா?" என்றவளின் குரலில் ஏளனம் தெறித்தது,

“அப்படியானால் உங்களால் சத்தியம் பண்ண முடியுமா. தம்பி? மாட்டை அடிப்பது போல ஒரு பெண்ணை அடிக்க மட்டும்தான் செய்வார்,. அதற்கு மேல் கொல்லவே மாட்டார் என்று உங்களுக்கு அவ்வளவு நிச்சயம் இருக்கிறதா? சாரி தம்பி, உங்கள் நம்பிக்கை எனக்கு இல்லை, இந்த உயிர் கூட அப்படி ஒன்றும் எனக்கு வெல்லமாய் இனிக்கவில்லை, சொல்லப் போனால். உன் அண்ணனின் உறவு ஏற்பட்ட பிறகு ஒரே கசப்பாகத்தான் இருக்கிறது,
ஆனால் நான் செத்துப் போனால். என்னைப் பெற்றவர்கள். தங்கைகள் தாங்க மாட்டார்கள், சும்மாவே நான் சந்தோஷமாக இல்லையோ என்று கவலை அவர்களுக்கு இருக்கிறது, நான் நன்றாக இருப்பதாக நான்தான் அவர்களை ஏமாற்றி வைத்திருக்கிறேன், என் இரு தங்கைகளுக்கேனும் நல்ல வாழ்வு அமைந்து. அந்த சந்தோஷத்தில் என்னைப் பற்றிய கவலை குறையும்வரை நான் உயிரோடு இருந்துதான் தீர வேண்டும், அதனால். அங்கே போய்ப் படுப்பது ஒருபோதும் முடியாது,

“ஆனால் ஒன்று தம்பி, எனக்கு என்னமும் ஆகிவிடுமோ என்று. நீங்கள் ஒன்றும் தூக்கத்தைத் தியாகம் செய்துகொண்டு இங்கே காவல் இருக்க வேண்டாம், அப்படியே ஒரு திருடன் வந்து கழுத்தில் காதில் இருப்பதைப் பிடுங்கிச் சென்றாலும். என் அப்பா செய்து போட்டதுதானே போகும்? அதனால் உங்களுக்கு எந்த நஷ்டம் இராது, அத்தோடு நகை போனாலும் என் உயிர் இருக்கும் அல்லவா? இப்போதைக்கு எனக்கு அது போதும்!” என்று முடித்தாள் மாதங்கி,

இதுதான் முடிவு என்று தீர்மானித்துவிட்ட குரல்!

இது சாத்தியமா என்பது இன்னமும் அவளுக்குத் தெளிவில்லைதான், ஆனால் மனிதத் தன்மையே இல்லாமல் அவளை அடித்துப் போட்டுவிட்டுப் பின் விளைவே இல்லாமல். அதைப் பற்றிய கவலையும் இல்லாமல் எப்போதும் போல இருக்கலாம் என்கிற திமிர் யுகேந்திரனுக்கு இருக்கக் கூடாது, இருக்க விடக் கூடாது,

இரவு தூங்கத்தானே ஏதாவது வசதி வேண்டும், சோஃபாவில் சரி வராது, ஒரு “காம்ப் காட்”டை வாங்கி இரவில் ஹாலில் போட்டுப் படுத்துக் கொள்ளலாமோ ....................................................................

மாதங்கியின் எண்ணம் ஓடும்போதே. “ப்ளீஸ் அண்ணி. நான்

சொல்வதைத் தயவு பண்ணிக் கொஞ்சம்… “ என்று யோகேந்திரன் ஏதோ சொல்ல முயன்றான்,

ஆனால் “யோகன்…” என்று அவனுடைய அண்ணன் யுகேந்திரனின் குரல் ஊடே புகுந்து தம்பியை அழைத்தது,

திரும்பிக் கூடப் பாராமல் மாதங்கி அசையாமல் அமர்ந்திருக்க. “அண்ணா…” என்று யோகேந்திரன் திரும்பினான்,

“உன் பொருட்களை எடுத்துக்கொண்டு என் அறைக்கு வந்துவிடு, அவள் உன் அறையைப் பயன்படுத்திக் கொள்ளட்டும்,” என்றான் அவன் மெல்லிய குரலில். ஆனால் தெளிவாக,

“அண்ணா!”

“ஆமாம்ப்பா, நான்தானே பிரச்சினை, உன் அறையைக் கொடுக்க முடியும் அல்லவா?”

ஏதோ தீர்வு கிடைத்து விடவே. “தாராளமாய்ச் செய்யலாம் அண்ணா!” என்றான் சின்னவன் நிம்மதியோடு,

மாதங்கியைப் பார்த்து. “இனி என்ன அண்ணி? உங்கள் பிரச்சினை தீர்ந்தது, இனியேனும் உள்ளே வாருங்கள்,” என்று அழைத்தான்,

பெரிய பிரச்சினை தீர வழி இல்லைதான், அது பற்றி நினைப்பது போகாத ஊருக்கு வழி தேடுவதுதான், ஆனால் ஒரு வசதி, வேண்டாதவளாக இந்த அறையில் இருக்கிறோமே என்ற கூச்சம். வலி இல்லாமல் நிம்மதியாகத் தூங்கி நிம்மதியாக எழலாம்!

தூக்கத்தில் ஆடை விலகித் தப்பாகத் தோன்றிவிடக் கூடாதே என்ற அச்சத்தில் அயர்ந்து உறங்கக் கூட முடியாதே! இனி அது இராது!

யுகேந்திரனை நிமிர்ந்து பாராமலே மாதங்கிவீட்டினுள் சென்றாள்,

கதவருகே சின்னவன் சற்றே தயங்கவும். “நீ அண்ணியைக் கூட்டிப் போ, நான் தாளிட்டு விடுகிறேன்,” என்றான் மூத்தவன்,

பெரிய “அண்ணி”!

கண் பாராவிட்டாலும் மாதங்கியின் மனம் கணவனைப்

பற்றியே யோசித்தது, இது அவனுக்கும் வசதிதான் அல்லவா? வேண்டாத மனைவியோடு ஒரே அறையில் இருக்கும் கட்டாயம் கிடையாது, காலையில் அவள் முகத்தில் விழிக்க வேண்டியிராது! விடுதலைதானே? அநியாயம்!

எப்படியோ போகட்டும், அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாக மூச்சு விட முடியும், அதை நினைத்து ஆறுதல் பட்டுக் கொள்ளலாம்!

தன் அறைக்குள் கூட்டிப் போய் விட்டுவிட்டுப் பேஸ்ட். பிரஷ். சீப்பு. சோப்பு எல்லாம் எடுத்துக்கொண்டு யோகேந்திரன் கிளம்பவும். "தம்பி..." என்று அழைத்து அவனை மாதங்கி நிறுத்தினாள்,

என்ன என்பது போலப் பேசாமல் நின்றவனிடம் . படுக்கையில் கிடந்த தலையணை. போர்வையை எடுத்து நீட்டினாள், "சாரி தம்பி இதில் படுக்க என்னால் முடியாது, கொண்டு போய்விடுங்கள்," என்றாள்,

வாங்கிக்கொண்டு. "இதில் "சாரி" என்ன அண்ணி? கதவைத் தாளிடாதீர்கள், உங்களதை எடுத்து வருகிறேன்," என்று கிளம்பினான் அவன்,

"ஒன்றும் கட்டாயமில்லை, ஒரு நாள் தலையணை இல்லாமல் செத்துவிட மாட்டேன், "

"இல்லை அண்ணி. எடுத்து வருகிறேன்," என்றுவிட்டுப் போனான் மைத்துனன்,

அப்படியே அவளது பொருட்கள் எல்லாம் இங்கே குடியேறின,

மாதங்கியின் விருப்பம் முக்கியம் என்பது போல நடந்த எதுவும் மாமியார் தனபாக்கியத்துக்கோ. நாத்தனார் ஊர்வசிக்கோ கொஞ்சமும் பிடிக்கவில்லை,

"என்ன பெரிய மகாராணி? ஒரு தட்டுத் தட்டினால் உடைந்து விடுவாளாக்கும், ஆகாத்தியம் பண்ணுகிறாளே!" என்று ஆத்திரப்பட்டார்கள்,

"ராத்திரியானால்வீடியோ பார்ப்பாய், சத்தமாகப் பாட்டுக் கேட்பாய், அண்ணன் வேறே மாதிரி ஆயிற்றே! அவன் அறையில் இருக்க உனக்கு வசதிப்படுமா சின்னவனே?" என்ற தாயாரின் குரல் அப்படியே உருகி வழிந்தது,

“அதெல்லாம் என் அறையைத் தர முடியாது, வெளியே கிடந்து என்னமாகவும் போய்த் தொலை! என்று விட்டுவிட வேண்டியதுதானே. சின்னண்ணா?” என்றாள் தங்கை,

மாதங்கிக்கு அடி விழுவதற்குப் பாதிக் காரணம் அவர்கள் இருவரும் மூட்டிக் கொடுத்ததும்தானே? மேலும் துன்புறுவதற்குப் பதிலாக அண்ணனும் தம்பியும் மருமகளுக்கான வசதிகளைச் செய்யத் தொடங்கியது. அவர்களுக்கு எரிச்சலாக இருந்தது, ஆனால் அவர்கள் இருவரும் இதே போலத் தொடர்ந்து பேசவும். அவர்களிடம் யோகேந்திரன் சீறி விழுந்தான்!

“வாயை மூடுங்கள்! அண்ணன் அடித்த அடியில். அண்ணியின் முகம் உடம்பு எல்லாம் வெளியே தெரியும்படியாகவே கன்றிப் போயிருக்கிறது, அண்ணி மட்டும் போலீசுக்குப் போனார்கள் என்றால். “டொமஸ்டிக் வயலன்ஸ்” என்று நாம் எல்லோரும் கேவலமாகக் கம்பி எண்ண நேர்ந்திருக்கும், அண்ணி பெருந்தன்மையாகச் சும்மா இருக்கிறார்கள், அதற்கு இது. காலில் ஒட்டிய தூசு மாதிரி மிக அற்பமான உதவி, ...உதவி என்று கூடச் சொல்ல முடியாது! வெறும் கைமாறு! இதை நாம் நன்றியோடு செய்வதுதான் சரி, அது முடியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு சும்மாவேனும் இருங்கள்,” என்று யோகேந்திரன் எரிச்சலோடு தம்பி கூற. அதன் பிறகே தாயும் மகளும் வாயை மூடிக் கொண்டனர்,

தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த மாதங்கியின் காதுகளில் இந்த உரையாடல் பெருமளவு விழ அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது,

பெருந்தன்மையாலா இந்தக் குடும்பத்தை மாட்டி வைக்காமல் அவள் சும்மா இருந்தாள்? இல்லவே இல்லை! இந்த அடி உதை விவரம் தெரிய நேர்ந்தால் அவளுடைய அருமைப் பெற்றோரும் தங்கைகளும் வருந்துவார்களே என்றல்லவா வாயை மூடிக் கொண்டிருக்கிறாள்!

இது தெரியாமல் பெருந்தன்மையாம் மண்ணாங்கட்டியாம்!

ஆனால் எதற்கோ தெரியுமா கற்பூர வாசனை என்பது போலப் பாசத்தைப் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? அதிலும் அம்மாவும் மகளும் சேர்ந்துகொண்டுவீட்டு மனிதர்களையே தூற்றும்போது கேட்க வேண்டுமே!வீட்டு மனிதர்கள் படும் பாட்டில் வேற்று மனிதர்

பற்றிச் சொல்லவே தேவையில்லை என்று எண்ணும்போதே மாதங்கியின் முகம் வாடியது,

இந்த வேற்று மனிதர் பட்டியலில்தான் மாதங்கியும் அவளுடைய குடும்பத்தினரும் இருந்தனர், ஜாடை மாடையாகவும். அவளது காது கேட்கவும் தாயும் மகளும் பேசியதை எண்ணி. அவள் எத்தனை இரவுகள் கண்ணீர் வடித்திருக்கிறாள்!

என்னவோ. இப்போதெல்லாம் இந்தப் பேச்சகள் மாதங்கியின் காதுகளில் அதிகம் விழுவதில்லை, முன்பானால் கணவன்வீட்டில் இருக்கையில் அந்த அறைக்குள் இருக்க மனமற்று வெளியே அதிக நேரம் தங்க நேரும், அப்போதெல்லாம் மாமியாருக்கும் நாத்தனாருக்கும் கொண்டாட்டமாக இருந்தது,

ஆனால் இப்போது மைத்துனனின் அறை அவளதாகி விட்டதால். பேசாமல் மாதங்கி அங்கே போய் முடங்கிக் கொள்வாள், கதவைச் சாத்திக் கொண்டால். தட்டித் திறந்து உள்ளே சென்றா வம்பு பேச முடியும்?

யுகேந்திரனோவீட்டில் இருக்கிறானா இல்லையா என்பது கூடத் தெரியாத அளவுக்கு ஒதுங்கிப் போனான், முன் போலன்றிப் பல விடுமுறை நாட்களில் அவன் வீட்டிலேயே இருந்தபோதும். அவளுக்குப் பிரச்சினை இருக்கவில்லை,

வாழ்க்கை இப்படியே போக. முன்னைக்கு இப்போது பரவாயில்லை என்று மாதங்கி எண்ணலானாள்,

ஆனாலும் ஒரு சின்ன உறுத்தல்! ஏதோ வேண்டும் போல ஓர்...ஒரு சிறு ஏக்கமும் அவளைப் புழுவாய் அரித்துக் கொண்டே இருந்தது,

வேறென்ன? எப்போது இரு தங்கைகளுக்கும் திருமணம் முடிந்து. பழைய மாதிரித் தாய் தந்தையோடு ஒளிவு மறைவின்றிக் கலகலப்பாகப் பேசி மகிழப் போகிறோமோ என்பதுதானே எப்போதும் அவளது கவலை!

எவ்வளவு சீக்கிரமாக நடந்தாலும். அதற்கு இன்னும் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகும், அதற்காக இப்போதே ஏங்குவது வடிகட்டின அசட்டுத்தனம் அல்லவா?

யோசித்துவிட்டு. மனம் மாறுவதற்காக மொபைலில் ஏதாவது

விளையாடுவது. டீவியில் ஏதாவது பார்ப்பது என்று ஏதேனும் ஒரு வகையில் மாதங்கி மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்கலானாள்,

சும்மா இருக்கும் மனம்தானே. சைத்தானின் உலைக்களம் என்பார்கள்?

ஆனால் அதிலும் பிரச்சினை வந்தது,

ஒருநாள் டீவியில் ஒரு நிகழ்ச்சி, சில எழுத்துகளை வைத்துக்கொண்டு பல்வேறு வார்த்தைகளை உருவாக்குவது, அந்த வார்த்தைகளையே வளர்ப்பது, இரண்டு குழுக்கள்,

போட்டி பிரமாதமாகப் போய்க் கொண்டிருந்தது,

மாதங்கி ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோதே. தனபாக்கியமும் ஊர்வசியும் அங்கே வந்தார்கள்,

இருவரும் சோஃபாவில் வசதியாக அமர்ந்து. ரிமோட்டை எடுத்து சேனலை மாற்றினார்கள், கையோடு கொண்டு வந்த தட்டில் இருந்த வடைகளை எடுத்துத் தின்றபடி. யாரோ ஒரு பெண் கதறி அழுவதை இருவரும் வெகு சுவாரசியமாகப் பார்க்கலானார்கள்,

சில கணங்கள் தரையைப் பார்த்த வண்ணம் இருந்த மாதங்கி எழுந்து அறைக்குள் சென்றாள், நல்லவேளை! யார் முகத்தையும் பாராமல் புகுந்து கொள்ள இந்த அறையாவது கிடைத்ததே!

ஆனால் அவளிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுச் சேனலை மாற்றியிருக்கலாமே! அதுதானே நாகரீகம் என்று மனம் கனன்றுகொண்டே இருந்தது,

விஷயம் இத்தோடு முடியவில்லை,

மறுநாள் அவள் இருந்த அறைக்குள் ஒரு டீவி குடியேறியது,

வியக்கும்போதே. அவள் தலை குனிந்து அமர்ந்திருந்தபோது யாரோ நடந்தது போலத் தோன்றியது நினைவு வந்தது!

அதன் பலன்தான் இந்த டீவியா? அறையிலேயே இருந்து பார்த்துக் கொள்ளலாம்!

ஆனால் வாய்விட்டு நன்றி கூற அவளுக்கு மனமில்லை,

கழுத்தை வெட்டிவிட்டுக் கைப்புண்ணுக்கு மருந்து

போடுகிறானாக்கும்? வெட்டி வேலை செய்ய நேரமும் பணமும் இருந்தால் தாராளமாகச் செய்யட்டும்!

இந்த நிலையில் யுகேந்திரனுடைய தங்கை ஊர்வசிக்குத் திருமணம் நிச்சயமாயிற்று, அது. அந்தவீட்டில். மாதங்கியின் நிலையை மேலும் உயர்த்தியது! அவளை வாய் விட்டுச் சிரிக்கவும் வைத்தது!

# அத்தியாயம் -6

ஊர்வசியின் எதிர்கால உறவினரும் சென்னையை ஒட்டித்தான் வசித்தார்கள்,

அண்ணனின் சாயலில் அமைதியாக அமர்ந்திருந்த ஊர்வசியை மணமகன் வீட்டில் எல்லோருக்கும் பிடித்துவிட்டது,

இந்தத் தரப்பிலும் அப்படியே, நகைகள். பட்டுகள் என்று சந்தோஷமாகப் பேசினார்கள், நிச்சத்துக்குக் காஞ்சீபுரத்தில் பட்டு வாங்குவதாக முடிவு செய்தார்கள்,

அதுவரை அலுங்காமல் குலுங்காமல் நேராகச் சென்று கொண்டிருந்த பேச்சு வார்த்தைகளில். முதல்முதலாக ஒரு சிக்கல் ஏற்பட்டது,

விடிகாலை நேரத்தில். கிளம்பினால். வெயிலை எதிர்கொள்ளத் தேவை இராது என்று யோசித்து மாப்பிள்ளையுடைய தாயார் முன் தினம் இரவிலேயே இங்கே பெண் வீட்டில் வந்து தங்கிவிட்டுக் காலையில் இங்கிருந்தே கிளம்பி விடலாம் என்று முடிவு செய்திருப்பதாக பையன்வீட்டிலிருந்து தகவல் சொன்னார்கள்,

“ஆஹா!” என்று தலையாட்டிவிட்டு வந்து இந்த விவரத்தைவீட்டுத் தலைவர் மாசிலாமணி சொன்னபோதும் முதலில் அம்மாவுக்கும் மகளுக்கும் மிகவும் மகிழ்ச்சி! பட்டுச் சேலைகள் அல்லவா வாங்கப் போகிறார்கள்!

என்ன விலையில் எந்த மாதிரி வாங்கலாம் என்று திட்டம் போடத் தொடங்கினார்கள்,

“காலைப் பலகாரம். மதியத்துக்கு ஏதாவது கட்டிக்கொண்டு வரச் சொன்னார்கள்,” மாசிலாமணி தொடர்ந்து தெரிவித்தபோது குதூகலம் கொஞ்சம் குறைந்த மாதிரி மாதங்கிக்குத் தோன்றியது,

அவளுக்கு இப்படி வாங்கச் சென்றபோது இனிப்பு வரை செய்து எடுத்துவரச் சொல்லிவிட்டு. அங்கே ஒரு பெரியஹோட்டலைப் பார்த்ததும் அங்கே சாப்பிட ஆசை என்று கொண்டு போன அனைத்தையும்வீணாக்கியது அவளுக்கு நினைவு வந்தது,

தேவையற்ற வருத்தம்! இங்கே உட்கார்ந்திருப்பானேன். கண்ட நினைவில் வேதனைப்படுவானேன்?

“எதற்கு இப்படி முகத்தைத் தூக்குகிறீர்கள்? நீங்களா காலையில் எழுந்து இதையெல்லாம் தயாரிக்கப் போகிறீர்கள்? சமையல்காரம்மாதானே... “ என்று மாமனார் கூறுவதைக் கேட்டபடி மாதங்கி அங்கிருந்து அகன்றாள்

மைத்துனன் தயவால் கிடைத்த அறைக்குள் சென்று கதவைச் சாத்திவிட்டு கார்ட்டூன் படம் ஒன்றைச் சத்தமின்றி ஓட விட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள்,

“அண்ணீ !” என்று மைத்துனன் அழைப்பது கேட்டுப் போய்க் கதவைத் திறந்தால். மொத்தக் குடும்பமும் அங்கே நின்றது!

அவள் திகைத்து நோக்கவும். உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு. “உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். மாதங்கி, இங்கே வசதிப்படாது, ஹாலுக்கு வா,” என்று கூறித் திரும்பி

மற்றோரும் பின்தொடர்ந்தனர்,

மாமனார் கூப்பிட்டிருக்கிறார், போய்த்தான் ஆக வேண்டும்,

தொண்டையைச் செறுமிக்கொண்டு அவர் மெல்லத் தொடங்கினார்,

தயங்கித் தயங்கி அவர் பேசிய விதம் பிடிக்காமல். “சும்மா ஜவ்வு இழுக்காதீர்கள்! விஷயம் இதுதான், ஊர்வசியுடைய மாமியார் இங்கே வந்து இரவு தங்கப் போகிறாள், அப்போது. மருமகள் வேறு அறையில் இருப்பது அவர்களுக்குத் தப்பாகத் தோன்றும்,” என்று கடகடவென்று சொல்லி வந்த தனபாக்கியம். கடைசியாக அவளும் தயங்கி “அதனால் ..........................................” என்று இழுத்தாள்,

பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர. முக பாவத்தினால் கூட ஏனென்று மாதங்கி கேட்கவில்லை, பல நாட்களாகப் பழகி வைத்திருந்த முகமூடியால் அவளது ஆழ் மனதின் குழப்பங்களைக் காட்டாமல் அவளால் மறைக்க முடிந்தது, எனவே சும்மா இருப்பது போலத் தோற்றமளித்தபடியே மாமியாரின் பேச்சைக் கவனித்தாள்,

அத்தோடு. காரியம் ஆக வேண்டியது அவர்களுக்குத்தானே. அவர்களே சொல்லட்டும் என்ற எண்ணமும் அவளுக்கு இருக்கவே பேசாமலே பார்த்துக் கொண்டிருந்தாள்,

ஆனால் மருமகளின் உணர்ச்சியற்ற முகபாவம் ஆத்திரமூட்ட

“உன்னிடம்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன், காதிலே விழுதா இல்லையா?” என்று சீறினாள் பெரியவள்,

மாதங்கி அப்போதும் அசையவில்லை, என்ன என்ன என்று ஆவலும் காட்டவில்லை,

மாமியாரை நேராக நோக்கி. “எல்லாமே கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன், உங்கள் பேச்சு என் காதில் விழுந்தே தீரும் என்று உங்களுக்கும் தெரியும், அத்தோடு. மேலே சொல்லாமல் நிறுத்தியிருப்பது நீங்கள்தான்,” என்றாள் நிதானமாக,

அதற்கு மேல் தனக்கு அக்கறை இல்லை என்று மாதங்கி சொல்லாமல் சொன்ன விதத்தில் தனபாக்கியம் திகைத்தாள்,

இயல்பின்படி கண்ட வார்த்தை சொல்லி மருமகளைத் திட்டவும் அவளுக்குத் தயக்கமாக இருந்தது, அன்று மட அடி அடித்த பிறகு. மாதங்கியை யாரும் வம்புக்கு இழுப்பது மகனுக்குப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம் அந்தத் தாய் மனதில் ஏற்பட்டிருந்தது, ஏற்கனவே சின்னவனும் அந்தப் பக்கம்,

இப்போது மருமகளுடன் பேசும் விதம் அறியாமல் மகனைப் பார்த்தாள்,

மேலும் இது ஒரு மாதிரியான விஷயம், இதில் தலையிட விருப்பம் இல்லாமல் மற்றவர்களுமே யுகேந்திரனையே பார்த்தனர்,

ஒரு தரம் எல்லோரையும் லேசாகப் பார்த்துவிட்டு அவனும் பேசலானான்,

“பார் மாதங்கி. உனக்கு இது பிடிக்காதுதான், ஆனால் மாப்பிள்ளைவீட்டாருக்கு நாம் வாழும் முறை தெரிவது. ஊர்வசியின் திருமணத்துக்குப் பிரச்சினை ஆகி விடுமோ என்ற கவலை அம்மாவு...எல்லோருக்குமே இருக்கிறது, அதனால் ...........” என்று அவனும் நிறுத்தினான்,

கணவன் சொல்ல முயல்வது என்ன என்று மாதங்கிக்குப் புரியாமல் இல்லை,

ஆனால் அன்று வெறி பிடித்தவன் போல அடிக்கும்போது ஒரு தயக்கமும் தோன்றவில்லையே, அதற்காக ஒரு வார்த்தை மன்னிப்புக் கேட்கவும். அந்தவீட்டுத் திமிர் இடம் கொடுக்கவில்லை,

தம்பி அறையைத் தர வைத்துவிட்டான்,. அங்கே ஒரு டீவியை வைத்துவிட்டான் என்று அவள் மட்டும் அவன் சொல்ல வருவதை ஊகித்து. பணிந்து அதை ஏற்க வேண்டுமா?

என்ன தேவையோ அதை முழுசாக வாய்விட்டுச் சொல்லட்டும்!

“அதனால்? உங்கள் அம்மாவும் இங்கேதான் நிறுத்தினார்கள்! சொல்லுங்கள். அதனால் என்ன?” என்று கேட்டாள் அவள்,

ஓசையற்று பெரிய மூச்சை உள்ளிழுத்துவிட்டு. “நீ என்...வந்து நம் அறைக்கே வந்துவிட்டால் ஊர்வசி மாமியாருக்கு வித்தியாசமாகத் தோன்றாது இல்லையா? அஅதனால் உனக்கு ஒரு பிரச்சினையும் ....என்னால் உனக்கு ஒரு பிரச்சினையும் இராது, சத்தியம், என்னிடம் நம்பிக்கை இல்லாவிட்டாலும். வீட்டில் வருங்கால சம்பந்திவீட்டில் இருக்கும்போது. நீ பயப்படுவது போல எதுவும் நடக்காது என்று உனக்கே தெரியும் ,” என்று கூறியவன் அவள் சிரிக்கவும் பேச்சை நிறுத்தினான்,

எல்லோருக்குமே திகைப்பாகத்தான் இருந்தது

அதை அதிகமாக்கும் விதமாக. “சம்பந்தி!” என்று ஒரு தரம் சொல்லிப் பார்த்துவிட்டு. மாதங்கி மறுபடியும் சிரித்தாள், வாய்விட்டு!

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் அவளையே திரும்பிப் பார்க்கவும் மாதங்கி சிரிப்பை நிறுத்தினாள்,

இதற்கு மேல் சிரித்தால் பைத்தியம் என்று பட்டம் கட்டினாலும் கட்டலாம்,

எனவே சிரிப்பை அடக்கிக்கொண்டு பேசத் தொடங்கினாள்,

“சம்பந்திகள் என்றால் அனுசரித்துப் போக வேண்டும்தான்! இல்லையா ........” என்றவளுக்கு அடக்க மாட்டாமல் மீண்டும் சிரிப்பு வந்துவிட்டது,

குபுக்கென்று சிரித்துவிட்டாலும். உடனே அதை அடக்கிக்கொண்டு. “சாரி, ரொம்ப நாளைக்குப் பிறகு சிரிப்பதால் என்னால் அதை நிறுத்த முடியவில்லை போல! அது எப்படியோ போகட்டும், இப்போது சம்பந்திகள் விஷயத்துக்கு வருவோம், சம்பந்தி தப்பாக நினைத்துவிடக் கூடாது என்பதும் ரொம்ப...ரொம்ப

ரொம்ப முக்கியமே, அதனால் .... நீங்கள் கேட்டபடி செய்கிறேன்," என்று முடித்தாள்,

வேண்டும் என்றே ஒரு நோக்கத்தோடுதான் அந்த "அதனால்" என்ற வார்த்தையில் சற்று நிறுத்திவிட்டு மாதங்கி வாக்கியத்தை முடித்தது,

அதைக் கவனித்தோ. அல்லது அவளை நம்பாமலோ. யுகேந்திரனின் கண்கள் லேசாக இடுங்க. மற்றவர்கள் மகிழ்ச்சியோடு நன்றி உரைக்கத் தொடங்கினார்கள்,

"ரொம்பத் தாங்க்ஸ்". "தாங்க்ஸ் அண்ணி!". "நன்றி பொண்ணே. நீ புத்தி கெட்டவ இல்லைன்னு எனக்குத் தெரியும்! அதனாலே ரொம்ப நன்றி!"

போதும் என்பது போல இரு கைகளையும் உயர உயரத் தூக்கி. நன்றி உரைகளை மாதங்கி நிறுத்தினாள், "நான் கொஞ்சம் பேசலாமா?"

அமைதி ஏற்படவும் அவள் தொடங்கினாள்,

"பாருங்கள். என் அச்சங்கள் பயம். வெறுப்பு. அருவருப்பு எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு இவரது அறைக்குச் செல்ல நான் தயார், ஆனால் அதற்கு நீங்கள் ஒரு விலை கொடுக்க வேண்டும், யாருக்கும். முக்கியமாக இந்தவீட்டில் யாருக்கும் எதையும் ஓசியில் செய்ய எனக்குப் பிரியம் இல்லை, ..."

அவள் பேசி முடிக்கு முன்பாகவே ஊர்வசியும் அவள் அன்னையும் குறுக்கிட்டார்கள்,

"என்ன. என்ன? பணம் வேண்டுமா? எவ்வளவு? முதலில் அதைச் சொல்லு, எனக்காக என் குடும்பத்தார் எவ்வளவு செலவு செய்யவும் தயங்க மாட்டார்கள், சொல்லு அண்ணி எவ்வளவு வேண்டும்? எத்தனை லட்சம்?" என்று அறிந்துகொள்ள அவசரப்பட்டாள் மகள்,

மகளுக்குத் தாயாகத் தனபாக்கியமும். "எதெனும் கேட்பியோன்னு முதலிலேயே நினைத்தேன், ஆனால் எங்கள் மகளுக்காக எவ்வளவு தரவும் நாங்கள் தயார், சொல்லு, ஒரு லட்சம் போதுமா? இன்னும் கூட வேண்டுமா?"

யுகேந்திரன் முகத்தில் எதையும் காட்டாமல் நிற்க. யோகேந்திரன் சற்று ஏமாற்றத்துடன் பார்த்தான்,

மகளையும் மனைவியையும் உறுத்து விழித்தார் மாசிலாமணி, இப்படி அவசரப்பட்டுத் தொகையை ஏற்ற வழி செய்கிறார்களே என்று அந்தத் தொழிலதிபருக்குக் கோபமாக இருந்தது!

ஆனால் மாதங்கி அவர்கள் பக்கம் பார்ப்பதாகவே இல்லை,

தாயும் மகளும் பரபரத்துப் பேசியதை மட்டும் கேட்டவள் போலக் கையில் ஒட்டிய தூசி தட்டுவது போலக் கையைத் தட்டிவிட்டுக் கொண்டாள், முகத்தைச் சுளித்து. "உங்களைப் போல எல்லோருமே. எதையுமே பணத்துடன் மட்டுமே சம்பந்தப்படுத்தியே யோசிப்பதில்லை, அது உங்களுக்குத் தெரியுமா?" என்று இனிய குரலில் எடுத்துச் சொன்னாள்,

அவசரப்பட்டுக் கேட்ட தாய் தங்கையரின் முகம் கன்றுவதையும் மாதங்கி அதை ரசிப்பதையும் கவனித்து. யுகேந்திரன் ஓரெட்டு முன்னே வந்து. "என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாய்?" என்று மனைவியின் கவனத்தைத் தன்புறம் திருப்பிக் கேட்டான்,

மாதங்கிக்கும் அது சந்தோஷம்தான், ஏனெனில் அவள் சொல்வதைச் செய்ய வேண்டியவன். முக்கியமாக அவன்தானே?

லேசாகத் தோளைக் குலுக்கி. "பிராயசித்தம் செய்ய வேண்டும்," என்றாள் அவள்,

"ஏஏ..." என்ற மாமியாரின் முகம் மாறிய விதத்தில் மாதங்கியின் முகத்தில் அருவருப்பு படர்ந்தது,

தலையை நிமிர்த்தி. மற்றவளைக் கீழ்க் கண்ணால் நோக்கி "பிராயசித்தம் செய்ய வேண்டியது எனக்கல்ல," என்றாள் கடுமையான குரலில்,

மற்றவர் பேச இடம்கொடாமல் உடனேயே தொடர்ந்து. "உங்களுக்கு மறந்து போயிருக்கலாம், ஆனால். இந்த வீட்டில் பெண்ணைக் கொடுத்த பாவத்தைச் செய்த பரிதாபத்துக்கு உரிய சம்பந்தி ஏற்கனவே ஒருவர் இருக்கிறாரே. நினைவு இருக்கிறதா? இல்லாவிட்டால் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள், என் தந்தை! அவரும் உங்களுக்குச் சம்பந்திதான், உங்கள் பிராயசித்தத்தை அவருக்குச் செய்ய வேண்டும்! அந்தக் குடும்பத்துக்கும்! இதுவரை

அப்படி ஒரு குடும்பம் இருப்பதாகவே காட்டிக்கொள்ளாமல் அலட்சியம் செய்தீர்களே. அந்தக் குடும்பத்தை இனியேனும் ஒத்துக்கொள்ள வேண்டும், உரிய மரியாதை காட்ட வேண்டும், அந்தவீட்டுக்குப் போய்வந்து இருக்க வேண்டும், நல்லபடியாக, இல்லாவிட்டால். அது இங்கே எப்படிப் பிரதிபலிக்கக் கூடும் என்று யோசித்து எல்லோரும் நடந்துகொள்ள வேண்டும், முக்கியமாக நீங்கள்!" என்று கணவனிடம் திரும்பிச் சொன்னாள் அவள்,

"நாங்கள் யாரும்... " என்று தொடங்கிய மாசிலாமணி வாக்கியத்தை முடிக்காமலே வாயை மூடிக் கொண்டார்,

மாதங்கியின் வண்டியைக் கொண்டு வந்து விட வந்தவருக்கு ஒரு வாய்த் தண்ணீர் கூடக் கொடுக்காமல் அனுப்பியது அவருக்கு நினைவு வந்தது, கூடவே மனைவியிடம் எரிச்சலும் வந்தது,

வீட்டுத் தலைவி என்றால் எப்படி இருக்க வேண்டும்? இப்போது இந்தச் சிறு பெண்ணிடம் தலை குனிய வைத்துவிட்டாளே!

கூடவே இந்த மகன் செய்திருக்கும் கிறுக்குத்தனம்!

கோபமாக அவனைப் பார்த்தால். அவன் அமைதியாகச் "சரி," ஒற்றை வார்த்தையில் மனைவிக்குப் பதில் கூறிக் கொண்டிருந்தான்.

எல்லோருக்குமே ஒரு மாதிரிக் குட்டுப்பட்ட உணர்வுதான், அதே சமயம் உடனடிப் பிரச்சினை நல்லபடியாகத் தீர்ந்தது என்ற நிம்மதியும் இருந்தது,

அவரவர் மன நிலைக்குத் தக்கவாறு பேசினார்கள், பேசிவிட்டுக் கலைந்து போனார்கள்,

மற்றவர்கள் கவனியாதபோது மைத்துனன் மட்டும் "சூப்பர்" என்பது போல சைகை செய்துவிட்டுப் போனான்,

நல்லபடியாக ஒரு தீர்வு கண்டதில் மாதங்கிக்கும் உள்ளூரப் பெருமைதான் என்றாலும். ஏனோ கண்களில் நீரும் சுரந்தது!

எடுத்த எடுப்பில் கணவனைக் கூட்டிக்கொண்டு அடிக்கடி பெற்றோர்வீட்டுக்குப் போவது. அவ்வளவாகச் சரிவராது என்று மாதங்கி நினைத்தாள், வேலை வேலை என்று அங்கு செல்லாதிருப்பதற்கு முன்பு சொன்ன காரணத்துக்கு அது எதிராகிவிடும், அத்தோடு. அவனும் பிரியமற்று வருப் போகிறவன், தன்னையறியாமலே அதைக் காட்டிவிடக் கூடும்,

எனவே முதலில் அவள் மட்டுமே பிறந்தவீட்டுக்குப் போய் வர எண்ணினாள்,

தங்கையிடம் தகவல் சொல்லிவிட்டு மாதங்கி அப்படிக் கிளம்பியபோது யுகேந்திரன் தானாகவே கூட வந்தது அவளே எதிர்பாராதது,

அதே போல எதிர்பாராமல் மருமகனும் சேர்ந்து வரவும் அந்தக் குடும்பமே குதூகலித்ததும். மகிழ்ச்சியோடு வரவேற்றதும். அவசர அவசரமாக ஒரு கேசரியைக் கிண்டி இனிப்பு பரிமாறியதும் அவனுள்ளும் சிறு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்குமோ என்று மாதங்கிக்குத் தோன்றியது,

இன்னும் மகளைத் தனியே அழைத்து. "நீ மட்டும் வருகிறாயோ என்று எனக்குப் பிடித்த அயிட்டங்களை மட்டும் செய்து வைத்தேன், அப்போது மாப்பிள்ளைக்கு என்ன பிடிக்கும் என்று சொல்லு, அதையும் வாங்கிச் சீக்கிரமாகச் சமைத்து விடுகிறேன்," என்று ரஞ்சனி கூறியதைவீட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த யுகேந்திரன் கேட்டுவிட்டு. "உங்கள் மகள் சொல்லவில்லையா? எங்கள் இருவருக்கும் ஒரே சுவைதான் பிடிக்கும், அவளுக்குப் பிடித்ததுதான் எனக்கும், ஒரு விஷயம் முதலிலேயே சொல்லி விடுகிறேன், அவளுக்குக் கொஞ்சம் தனியாக எடுத்து வைத்துவிட்டுப் பரிமாறுங்கள், அல்லது நானே முழுவதையும் காலி பண்ணி விடுவேன்!" என்று குரலில் நகையுடன் கூற. எல்லோருக்கும் ஒரே சந்தோஷம்,

மாதங்கிக்கும் ஒரு மாதிரியாக மகிழ்ச்சிதான்,

திருமணம் என்றபோது இது போன்ற குதூகலத்தைத்தானே அவளும் கனவு கண்டு கொண்டிருந்தாள்!

ஆனால் இப்போது அவன் வந்தது. சிரிப்பது எல்லாம் அவளது ஒரு விதக் கட்டாயத்துக்காகத்தானே தவிர. மனமுவந்து செய்வது அல்ல,

இதை அவள் ஒருபோதும் மறந்து விடக் கூடாது! மறந்து அவனிடம் மனம் சாய விட்டுவிடவும் கூடாது,

உண்மையைச் சொல்வதானால். யுகேந்திரனைப் பொறுத்த வரையில் மனைவியின் மனம் குளிர்வதல்லவா. அவனுடைய தங்கை

வாழ்வுக்கு இப்போது முக்கியம்? அதற்காக நடித்தும் இருக்கலாம்,

இருக்கலாம் என்ன? சந்தேகமின்றி அப்படியேதான்,

எப்படியோ? பெற்றோர் தங்கைகளின் முகங்களில் கண்ட மகிழ்ச்சி அவளுக்குப் போதுமானதாக இருந்தது,

இந்தப் பிரச்சினையின் தீர்வில். யுகேந்திரன்வீட்டின் மற்ற அங்கத்தினரும் அவளைச் சற்று மரியாதையாக நடத்தினார்கள்,

மைத்துனன் எப்போதுமே நல்லபடியாகவே நடப்பவனே என்றாலும்.வீட்டினருக்கு அஞ்சிக் கொஞ்சம் ஒதுங்கியே போவான், ஆனால் இப்போது கலகலப்பாகப் பேசலானான், இருவரின் வயதும் கிட்டத்தட்ட சமம் எனும்போது. இயல்பாகப் பேசவும் முடிந்தது,

முன்போல தாயார் சகோதரி குறுக்கீடு இல்லாததால். உலக நிலைமை. அரசியல். கல்வித்துறை எல்லாம் ஆராய்வார்கள்,

அவனது விருப்பு வெறுப்புகள் பற்றித் தயக்கமின்றிக் கூறுவான்,

கால்பந்தில் ஆர்வம் அதிகம், ஆனால் அடிக்கடி விழுந்து அடிபட்டுக்கொண்டு வருகிறான் என்று விளையாட விடுவதில்லை என்றான்,

படிக்கிற காலத்தில் பாவம் என்று ஒரு பையனுக்கு உதவி செய்தால் அவன் ஏமாற்றுக்காரனாக இருந்ததால் பெற்றோருக்கு அவனிடம் நம்பிக்கையே கெட்டுப் போய் முழுப் பொறுப்பாக அவனிடம் எந்த வேலையும் கொடுப்பதில்லை என்று வருத்தப்பட்டான்,

“அண்ணனோ. அப்பாவோ தொடங்கி வைப்பதை இடையில் போய்ப் பார்க்கச் சொல்லுவார்கள், அதுவும் நடப்பதை மேற்பார்வை இடுவது மட்டும்தான், நானாக ஒன்றும் செய்ய முடியாது,” என்றான் குறையோடு,

அவனது கல்வித் தகுதி. ப்ராஜெக்ட் ரிப்போர்ட் பற்றி அறிந்த பிறகு. மாதங்கிக்கு இது நியாயமாகத் தோன்றவில்லை,

ஆனால் தொழிலைப் பொறுத்த வரையில் தந்தையும் மூத்த மகனுமாக வெற்றிகரமாகவே நடத்துகிறார்கள் என்றால்.

மனிதர்களின் திறமை தெரியாமலா போகும்?

“கவலையே படாதீர்கள் தம்பி, எனக்கென்னவோ. உங்கள் திறமைக்குத் தகுந்த பெரிய வேலைக்காகக் காத்திருக்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது, எத்தனையோ பேரைத் தகுதி பார்த்து வேலை வாங்குகிறவர்கள், உங்கள் திறமை பற்றி அவர்களுக்குத் தெரியாமல் இராது,” என்பாள் அவள் தேறுதலாக,

அவர்களது நிறுவனத்துக்குப் புதிதாகக் கிடைக்க இருக்கும் வாய்ப்புகள் பற்றிக் கூட அவளிடம் சொல்லி விவாதிப்பான்,

“மலைச் சாரலில் ஓர் அருவி அண்ணி, அந்த நீரைத் தேக்கி. மின்சாரம் எடுப்பதாக ஒரு திட்டம், டெண்டர் விடப் போகிறார்கள், அண்ணனும் நானுமாகப் ப்ராஜெக்ட் ரிப்போர்ட் எல்லாம் தயார் செய்திருக்கிறோம், கிடைத்தால் நமக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது!” என்று தெளிவாக விவரம் சொல்வான்,

கணவனோ. மாமனாரோ இதெல்லாம் பற்றி அவளை மதித்துச் சொல்ல நினையாதது, இவர்கள் இருவருமாக விவாதிப்பார்கள்,

“உங்களுக்கு இருக்கும் திறமைக்கு. இதை நீங்களேசூப்பராகச் செய்வீர்கள். தம்பி!” என்று உணர்ந்து கூறுவாள் அவள், “உங்கள் வாக்கு பலிக்கட்டும் அண்ணி என்று சிரிப்பான் அவன்,

அவளுடைய பிறந்தவீட்டாரின் பாசமான வரவேற்பு பிடித்ததோ. அல்லது அவளுக்குக் கொடுத்த வாக்குக்காகவோ. யுகேந்திரனும் அவளோடு கூடவே அங்கே அவ்வப்போது சென்றுவந்தான்,

ரஞ்சனியின் கைப் பக்குவம் பிடித்துப் போக. தன்வீட்டிலும் அதே சமையல் செய்யச் சொன்னான், அதே போலப் பதார்த்தங்களும் செய்யப்பட. தட்டில் வைத்தது பறி போகாமல் மாதங்கியால் சாப்பிடவும் முடிந்தது,

இவை போன்ற சின்னச் சின்ன சுகங்கள் இப்போது மாதங்கிக்குக் கிடைத்தன, ஆனால். இதில் ஆறுதல் அடைய அவள் மனம் மறுத்தது,

எல்லாமே இயல்பாக அவளுக்குக் கிடைத்திருக்க வேண்டியவையேதானே? அநியாயமாகத் தடுக்கப்பட்டிருந்தவை, அதுவும் தப்பான ஒரு காரணமாக, அவளது நிபந்தனையின்

காரணமாகத் தாற்காலிகமாக அந்தத் தடை நீங்கியிருக்கிறது , அவ்வளவே, இதில் மகிழ்ச்சி அடைய என்ன இருக்கிறது என்றது அவளது மனம்,

அத்தோடு என்ன மாதிரி அடித்தான்! அதை எப்படி மறப்பது?

வீட்டுப் பெண்ணின் திருமணத்துக்காக சம்பந்திவீட்டாருக்குத் துணிமணி வாங்க வேண்டும் என்று பேச்சு நடந்தபோது கவனியாதது போல மாதங்கி அங்கிருந்து விலகிப் போனாள்,

ஒரு பட்டுச் சேலைப் பெட்டியைக் கொணர்ந்து. "உன் அம்மாவுக்கு!" என்று திறந்து காட்டினாள் மாமியார், "பெரியவனும் நானும் போய் வாங்கி வந்தோம்,"

நல்ல சேலைதான், இதுவும் அவளது நிபந்தனையின் பலனாக்கும் என்று மாதங்கியால் ஏளனமாகத்தான் நினைக்க முடிந்தது,

தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு பழத்தோடு சேலையையும் வைத்து அதன்மேல் அழைப்பை வைத்துக் கொடுக்கும்படி. மகன் மருமகளிடம் தனபாக்கியம் கூறினாள்,

சேலையோடு தந்தைக்கும் ஒரு செட் துணிகள் இருக்கவே. மாதங்கிக்கு ஓர் ஐடியா வந்து. தங்கைகளுக்கும் நல்லதாகச் சுடி செட் வாங்க எண்ணினாள்,

கூடவே வந்த யுகேந்திரன் முந்திக்கொண்டு பில்லை வாங்கிக்கொண்டு  பணத்தைக் கொடுக்கப் போனான், அவள் மறுத்துப் பேச வாய் திறக்குமுன். "என் தங்கை திருமணத்துக்காகத்தானே? நான் கொடுப்பதுதான் சரியாக இருக்கும்," என்றான்,

செலவை அவன் ஏற்பான் என்று அவள் எண்ணியிருக்கவில்லை, ஆனாலும் அவன் கூறியது சரிதானோ என்றும் இருந்தது,

பணம் கொடுக்கும் இடத்தில் க்யூ இருந்தது,

இனிமையும் வருத்தமும் கலந்தது போல இனம் புரியாத ஒரு மன நிலையில் சும்மாவேனும் பக்கத்தில் வரிசையாகத் தொங்க விட்டிருந்த சேலைகளைப் பார்க்கும் பாவனையில் மெல்ல நடந்துகொண்டிருந்தபோது. மாதங்கிக்கு முதல் அதிர்ச்சி நேர்ந்தது,

மிகப் பெரியதான அந்தத் துணிக்கடையில். வாங்க எண்ணும் துணிமணிகள் பொருந்துகிறதா என்று உடம்பில் வைத்துப் பார்ப்பதற்காக அங்கங்கே ஆளுயரக் கண்ணாடிகள் வைக்கப்பட்டிருக்கும்,

சின்னப் பெண் ஒருத்தி. அவளது முதல் பாவாடை தாவணியாக இருக்க வேண்டும். கடை விற்பனைப் பெண் மாட்டி விட்டதை இப்புறமும் அப்புறமும் திரும்பிப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள், புன்னகையோடு அதை ரசித்தவளின் கவனம். அவளுக்குப் பின்புறம் நடந்த சைகை நாடகத்தில் சிதறியது,

காரணம். அந்த நாடக நாயகி அபீதா! யாரையோ பார்த்து சைகையால் பேசிக்கொண்டிருந்தது. அந்தச் சின்னப் பெண்ணுக்குப் பின்னே கண்ணாடியில் தெளிவாகத் தெரிந்தது,

வேறு யாரையோ என்ன? பெரிய நியாயவாதி போல அவளுடைய தங்கைகளுக்காக வாங்கியப் பில்லுக்குப் பணம் கொடுக்கப் போன யுகேந்திரனோடுதான்!

# அத்தியாயம் -7

அந்த அபீதா ஒரு பொது இடத்தில் கணவனோடு சைகையில் பேசுகிறாள்!

என்ன தைரியம்! என்னதான் அவர்கள் இருவரும் காதலர்கள் என்றாலும். மனைவி என்று ஒருத்தி இருக்கும் இடத்திலேயே இப்படி நடப்பதா?

அதுவும் அந்த மனைவியுடைய தங்கைகளுக்காக உடைகள் வாங்கச் சென்றிருக்கும்போது!

இருக்கட்டும்! இதைச் சும்மா விடக் கூடாது! உச்சந்தலையில் ஆணி அறைகிற மாதிரி அவனிடம் இது பற்றி நன்றாக நாலு வார்த்தை கேட்டே ஆக வேண்டும்!

பொது இடத்தில் அடுத்தவள் கணவனோடு அநாகரீகமாக ஜாடையில் சரசம் செய்யும் அந்த அபீதா மாதிரி அடுத்தவர் காண மாதங்கியால் சண்டை போட முடியாது என்றாலும் . வீட்டுக்குப் போய் யுகேந்திரனிடம் இது பற்றிப் பேசியே ஆக வேண்டும்!

கண்டித்துப் பேசும் உரிமை உள்ள மனைவி அவள் என்று

ஆத்திரத்துடன் திட்டமிடும்போதே. மாதங்கி சொத்தெனச் சோர்ந்தாள்,

இல்லையே! அவள். அவனுடைய உரிமை உள்ள மனைவி அல்லவே!

நடந்தது அர்த்தமற்ற சடங்கு,. மனைவி என்று நினைக்கக் கூட முடியாது என்றானே! அவனிடம் போய். எந்த உரிமையில் என்ன பேசுவது?

கேட்பதற்கு நீ யார் என்று கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்?

இப்போதைக்கு. ஊர்வசி திருமணம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்பதற்காக. மாதங்கியின் நிபந்தனையை ஏற்று. அவள்வீட்டார் விஷயத்தில் மருமகனாக .............. இல்லையில்லை. மருமகன் போல நடந்து கொள்கிறான், அவ்வளவே,

அபீதாவோ. எதற்கும் தயார் ரகம்!

அவர்கள் இருவரின் நடவடிக்கை பற்றி. யுகேந்திரனிடம் மாதங்கி என்ன பேச முடியும்?

பெரு முயற்சி செய்து. மனதை ஓரளவு கட்டுப்படுத்திக்கொண்ட பிறகே. வரிசையாகஹாங்கரில் தொங்க விட்டிருந்த சேலை வரிசையை விட்டு மாதங்கி வெளியே வந்தாள்,

தேடிக் கொண்டிருந்தவன் போல. "ஓ. நீ இங்கேதான் இருந்தாயா? உன்னைக் காணோமே என்று லிஃப்ட் இருக்கும் கோடி வரை போய்விட்டு வந்தேன், ஆனால் சொல்லாமல் அடுத்த தளம் செல்ல மாட்டாய் என்று திரும்பி வந்தால் பக்கத்திலேயேதான் இருந்திருக்கிறாய், இவ்வளவு நேரம் பார்த்தாயே! அந்தச் சேலைகள் எதுவும் வேண்டுமா? பிடித்தால் சேர்த்து வாங்கிக்கொண்டு போய்விடலாமே!" என்று சகஜமாகப் பேசினான் யுகேந்திரன்,

குற்ற உணர்ச்சியே இல்லாமல் என்ன இயல்பாகப் பேசுகிறான்,. என்று உள்ளூரச் சினந்தாள் மாதங்கி, உடனேயே. அவனைப் பொறுத்தவரையில் அபீதாதான் உரிமைக்காரி என்பது அவளுக்கு நினைவு வந்தது,

மாதங்கியோ இடையில் வந்து அவனது ஆசைகளைக்

கெடுத்தவள்,. இப்போது நிபந்தனை வைத்து அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பவள்! அவளிடம் இயல்பாகப் பேசுகிறான் என்னால். அதுவே நடிப்பாகத்தானே இருக்க முடியும்!

திறமையாக நடிக்கிறான் என்று பாராட்டலாம்! அவ்வளவே!

கணவனும் மனைவியுமாக. அவளுடைய தாய்வீட்டிற்குத் திருமணப் பத்திரிகை வைக்கக் கிளம்பினார்கள்,

அழைக்கச் செல்லும் அன்று ஒரு சேலையைக் கொடுத்து “அழைக்கப் போவதற்கு இதை அணிந்துகொள்,” என்றான் யுகேந்திரன்,

நல்ல டிசைனர் பட்டு, “பிளவுஸ் இல்லாமல் இதை அணிய முடி…” என்று அவள் மறுத்துப் பேசும்போதே. சேலையோடு இருந்த பிளவுஸ் கீழே விழுந்தது,

மாமியார் ஏற்பாடோ என்னவோ?

இருக்கும் சுமுக நிலையைக் கெடுத்துக்கொள்ள விரும்பாமல் சேலையை அணிந்துகொண்டே மாதங்கி கிளம்பினாள், கிளம்புமுன் கண்ணாடியில் பார்த்தவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது,வீட்டாருக்கும் சந்தோஷமாக இருக்கும் என்று எண்ணினாள்,

வெறும் சந்தோஷம் என்று மட்டும் சொல்ல முடியாமல். தங்கைகள் இருவரும் “ஆஹா ஓஹோ” என்று குதித்தார்கள்,

முக்கியமான காரணம் என்னவென்றால். மனைவிக்கே தெரியாமல் யுகேந்திரன் அவர்களிடம் சென்று மாதங்கிக்காக அளவுச் சட்டை வாங்கிப் போய்த் தைக்கக் கொடுத்திருக்கிறான்! கேட்க வேண்டுமா?

“இரண்டே நாட்களில் தைத்து வாங்கி உன்னை அணிந்து வரவும் ஏற்பாடு செய்துவிட்டாரே! உம்மணாமூஞ்சி என்று நாங்கள் நினைத்த அத்தான் உண்மையில் ரொம்ப ரொமான்டிக்! இல்லையாக்கா?” என்றார்கள் சந்தோஷமாக,

பெற்றோரின் முகங்களும் அதையே பிரதிபலித்தன,

எல்லாமே அவள் வைத்த நிபந்தனைக்காக நடப்பது, அவனுடைய தங்கையின் திருமணத்தின் பின் நின்றுவிடவும் கூடும், அன்று அபீதாவின் சைகை உரையாடலைப் பார்த்த

பிறகு. கட்டாயம் நின்றுவிடும் என்பதிலும் அவளுக்கு ஐயம் இல்லை,

ஆனாலும் பிறந்தவீட்டினரின் மகிழ்ச்சி. மாதங்கியின் முகத்திலும் முறுவலை வரவழைத்தது!

ஏனெனில். அவளது உள்ளமும் அதில் லேசாகக் குளிர் காய்ந்து கொண்டுதானே இருந்தது!

ஊர்வசியின் திருமணத்தின் போது இந்த உணர்வு இன்னமும் அதிகமாயிற்று, துணிக்கடை சைகை நாடகம் பகல் நேரப் பனியாக மறைந்து மறந்தது,

பட்டாடையும் நகையுமாகத் திருமண நிகழ்ச்சிகளில் இருவருமாக அருகருகே நிற்கும்போதும். பொருத்தமானஜோடி என்று பார்க்கிறவர்கள் கூறும்போதும். தன்னை மீறி அவளுக்கு உச்சி குளிரத்தான் செய்தது,

அந்த உச்சியிலேயே ஓங்கி ஓர் அடி விழுகிற வரை!

திருமணத்துக்கு மட்டுமில்லாமல் அடுத்து விருந்து. மறு விருந்து என்ற சடங்கு சம்பிரதாயங்களின் போதும். மாதங்கியின் பிறந்தவீட்டாரின் மரியாதைக்கு எந்த விதமான குந்தகமும் நேரவில்லை,

குணசீலன் தம்பதியினரும் மகளுடைய புகுந்தவீட்டினருக்குத் திருப்தியாக அவளுடைய நாத்தனாருக்கு நல்ல விதமாகப் பரிசளித்தார்கள்,

மாதங்கியுடைய பிறந்தவீட்டாருக்கு இங்கிருந்து ஒரு தூக்கில் கல்யாணப் பலகாரம் கொடுத்து அனுப்புகிறவரை எல்லாம் சுமுகமாக நடந்து முடிந்தது,

அவர்களுக்கு விடையளித்த கையோடு. உரிய சீர் செனத்தியோடு ஊர்வசியை அவளுடைய புகுந்தவீட்டில் விட்டுவிட்டு வந்தார்கள்,

அங்கிருந்து கிளம்பும்போது. நாத்தனார் தன் கையைப் பற்றி ஒரு தரம் அழுத்தி விடை கொடுத்தது. மாதங்கிக்கு ஆச்சரியமாக இருந்தது,

அவளைப் பெற்ற தாயிடம் கண் கலங்கியது இயல்பே, ஆனால் தன்னிடம்?

மறுநாளில் இருந்து வழக்கமான வாழ்க்கை தொடங்கியது, மாதங்கியின் மனக் கலக்கமும் தொடங்கியது,

அலைச்சலும் களைப்புமாக அயர்ந்து உறங்கிய மாதங்கியின் தூக்கம் எதனாலோ கலைந்தது, அசையாமல் படுத்திருந்தால் மறுபடியும் உறங்கி விடலாமோ என்று எண்ணும்போதே. தூக்கம் கலைந்ததன் காரணம் அவளுக்குப் புரிந்தது,

அவளுடைய கணவன் யாருடனோ மொபைலில் பேசிக் கொண்டிருந்தான்,

யாருடனோ என்ன? அவனுடைய ஆசைக் காதலியுடன்தான்!

அப்படி இல்லை என்று மூளையைக் கசக்கி யோசித்து ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து மாதங்கி நிம்மதி அடைந்து விடக் கூடாது என்று எண்ணியவன் போல. கூடப் பேசிக் கொண்டிருந்தவளின் பெயரை வேறு யுகேந்திரன் சொன்னான்!

“சரி. சரி! கட்டாயம் வருகிறேன். அபீதா, அதற்காக அழுவானேன்? அதுதான் வருகிறேன் என்றேனே!” என்றான் குரலில் சிறு எரிச்சலுடன்,

பொறுமையிழந்த எரிச்சல்! ஆசைக் காதலி அழுவது தாங்கவில்லையாக்கும்!

அர்த்த ராத்திரியில் யாரோ ஒருத்தியோடு கொஞ்சிக் கொண்டிருக்கிறான்! இவன் அருகில் நிற்பதற்கே ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாளே!

மனதோடு சேர்ந்து உடலும் கூசியது மாதங்கிக்கு!

ஊர்வசியுடைய மாமியார்வீட்டார் இனியும் இங்கே அடிக்கடி வந்து போகவோ. தங்கியிருக்கவோ போவது இல்லை, அப்படியிருக்க. மாதங்கி மறுபடியும் மைத்துனனை இங்கே அவன் அண்ணன் அறைக்கு வரச் சொல்லிவிட்டு அந்த அறைக்குக் கிளம்பிப் போயிருக்க வேண்டுமா?

அப்படிப் போயிருந்தால் சுய கௌரவமாவது மிஞ்சியிருக்கும்,

என்னவோ பெரிய அலுப்பு மாதிரி கணவன் அறையிலேயே தூங்கினாளே! அவளைப் பற்றி என்ன நினைத்திருப்பான்? ஏற்கனவே ஒட்டிக்கொள்ள முயல்வதாகப் பேசியவன்,. இப்போதும்

அதையே எண்ணியிருப்பானோ?

யோசனை மனதில் ஓடும்போதே முகத்தில் பரவியசூடு. முகம் கன்றிக் கறுத்திருப்பதை உணர்த்தியது,

நடந்ததை மாற்ற முடியாது, ஆனால். விரைவிலேயே இதைச் சீர்ப்படுத்திவிட வேண்டும்! கட்டாயம்!

கணவனாகப் போ என்று சொல்லுமுன் கிளம்பிவிட வேண்டும்,

மறுநாள் மைத்துனன் யோகேந்திரனிடம். அறையை மாற்றிக் கொள்வது பற்றிப் பேசினால் அவன் பேந்த விழித்தான், “எதற்கண்ணி? அண்ணன் முன்போலெல்லாம் நடந்துகொள்ளவே மாட்டான், உங்களிடம் அவனுக்கு நல்ல அபிப்பிராயமும் வந்திருக்கிறது, அப்படியே வாழ்க்கையில் ஜெயிப்பதைப் பார்ப்பீர்களா .......................................................................”

அவன் முடிக்குமுன் “தம்பீ!” என்று கத்திவிட்டாள் மாதங்கி,

அவன் அரண்டு நோக்கவும் தன்னை அடக்கிக்கொண்டு குரலைத் தணித்து “பாருங்கள் தம்பி. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள், எதையும் அனுபவிப்பவர்களுக்குத்தான் பிரச்சினையின் வலி தெரியும், தயவு பண்ணி இது விஷயமாக எனக்கு ஆலோசனை சொல்ல வேண்டாம், உங்கள் அறையைத் தர விருப்பம் இல்லை என்றால். விட்டுவிடுங்கள், நான் வேறு ஏதாவது பண்ணிக் கொள்கிறேன்! “ என்றாள் அவள் உணர்ச்சியற்ற குரலில்,

அந்தக் குரல் மறைத்த வேதனை புரிய. “சாரி அண்ணி, நான் வேறு நினைத்தேன், அண்ணனுக்குப் புத்தி வந்துவிட்டதாக நினைத்து மகிழவே தொடங்கிவிட்டேன், அதுதான் .... ஆனால் நல்ல திருப்பத்துக்கு வழியே இல்லையா அண்ணி?” என்ற கவலையோடு அவன் விசாரித்தான்,

உச்சுக் கொட்டிவிட்டு. “காலி பீடத்தில்தான் சிலையை நிறுவ முடியும். தம்பி, உங்கள் அண்ணன் மனதில் வேறு ஆள் இருக்கிறாள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே? ஊர்வசி அறையைக் கூடக் கேட்டிருப்பேன், ஆனால். அவள் கணவரோடு எப்போது இங்கே வந்தாலும் மாற்றமின்றித் தங்குவதற்காக. அந்த அறையை அப்படியே வைத்திருக்கப் போவதாக அத்தை சொல்லிக் கொண்டு இருந்தார்கள்,

அதைப் பற்றி வாக்குவாதம் நமக்கு எதற்கு? போகட்டும். தம்பி, உங்கள் அறையை தருவது பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? அதை மட்டும் பேசுவோமே!" என்றாள் மாதங்கி,

"உங்களுக்கு இல்லாதது இல்லை அண்ணி, எப்போது வேண்டுமானாலும் சொல்லுங்கள், அறையைக் காலி பண்ணிக் கொடுக்கிறேன், எப்படியுமே காலி பண்ண வேண்டிய அறைதான், என்ன? மகிழ்ச்சியோடு செய்ய நினைத்தேன், இப்போது வருத்தத்தோடு செய்யும்படி இருக்கிறது என்றான் மைத்துனன்,

வாயால் சொன்ன வருத்தத்தோடு சிறு மகிழ்ச்சியும் அவன் குரலில் இழையோடுவதை உணர்ந்து மாதங்கி வியப்புடன் விவரம் கேட்டாள்,

"ஆமாம் அண்ணி, நாம் பேசிக் கொண்டிருந்தோமே. அந்த ப்ராஜெக்ட் நமக்கே கிடைத்து விடும்போல இருக்கிறது, அதை விட முக்கியமாக. ப்ராஜெக்டின் முழுப் பொறுப்பையும் என்னிடமே தரலாம் என்று உத்தேசித்து இருப்பதாக அப்பா சொன்னார்,

முழுப் பொறுப்பையும் கவனிப்பது என்றால். நாலைந்து மாதங்களேனும் அங்கேயே இருக்க நேரும், அப்போது இந்த அறை காலியாகத்தானே இருக்கும்? அதைத்தான் சொன்னேன், !" என்றான் அவன் அடக்க மாட்டாத புன்னகையோடு,

தன் வருத்தம் ஒதுக்கி. "கை கொடுங்கள் தம்பி! மனமார்ந்த வாழ்த்துக்கள்!" என்று மைத்துனனின் கையைப் பற்றிக் குலுக்கினாள் மாதங்கி, "இனிப்பு தருவதில்லையா? சமையற்காரம்மாவிடம் பாயசம் பண்ணச் சொல்லுகிறேன், உங்களுக்கு என்ன பாயசம் பிடிக்கும்? பால் பாயாசமா? அல்லது பிரதமன் மாதிரி வெல்லத்தில் செய்வதா?" என்று மகிழ்ச்சியோடு கேட்டாள்,

முகம் லேசாகச் சிவக்க "ஐயோ. சும்மா இருங்கள் அண்ணி, கிடைத்து விடும் போல இருக்கிறது என்றுதானே சொன்னேன்? முதலில் அது கைக்குக் கிடைக்கட்டும் அதன் பிறகு மற்றதைப் பார்க்கலாம், இன்னும் அம்மா வேறு என்னைத் தனியே அனுப்புவதற்கு ஒத்துக் கொள்ள வேண்டும், இன்னும் என்னைப் பார்த்தால். திருவிழாவில் தொலையப் போகிற குழந்தை என்பதாகத்தான் அவர்களுக்கு நினைப்பு, அதனால் இப்போது

எதுவுமே வெளியே தெரிய வேண்டாம், அத்தோடு நீங்கள் என்னை விடுங்கள், இப்போது நண்பன்வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறேன், போய்விட்டு வந்து அறையை ஒதுக்கித் தரட்டுமா? நீங்கள் வேலையிலிருந்து திரும்பி வருவதற்குள் அறையை ஒதுக்கி வைத்து விடுகிறேன்," என்றான் யோகேந்திரன்,

ஏதோ இவனுக்காவது நல்லது நடக்க இருப்பது மாதங்கிக்கு ஆறுதலாகத்தான் இருந்தது, "உங்கள் வசதி போலச் செய்யுங்கள், வந்து... தாங்க்ஸ் தம்பி! நான் கிளம்புகிறேன், இன்றைக்கு அலுவலகம் போக வேண்டும்," என்று சென்றாள் அவள்,

மாதங்கி அறை மாறுவது பற்றி அந்தவீட்டில் யாரும் எதுவும் கூறவில்லை,

அவள் எக்கேடு கெட்டாலும். அவர்களுக்குத்தான் ஒன்றுமில்லையே! அவளுடைய கணவன் உட்பட,

அவனது பொருட்களை உள்ளே வைக்கப் போனபோது அண்ணன் அதிர்ந்த மாதிரி இருந்தது என்று யோகேந்திரன் சொன்னதை மாதங்கியால் நம்ப முடியவில்லை,

அப்படி அவனுக்கு மனமாற்றம் நேர்ந்திருந்தால். வாயைத் திறந்து சொல்ல வேண்டியதுதானே? எவ்வளவோ கொடிய வார்த்தைகளைக் கூசாமல் சொன்ன வாய்தானே? இப்போதென்ன?

எல்லாம் இந்தவீட்டில் தப்பிப் பிறந்த சின்னவனின் ஆசைக் கற்பனை!

அது கற்பனையே என்பதற்கு உறுதியான சான்றாக. அன்று நள்ளிரவில் அந்த அபீதாவோடு அவனது மொபைல் பேச்சு இருக்கிறது, அதற்கும் முன்னாலேயே துணிக்கடையில் அவர்களது ஜாடைப் பேச்சு! அதற்கும் முன்னராக வெளிப்படையாகத்தானே யுகேந்திரன் கூறியதும்!

அதற்கும் மேலாக அந்த அடி!

போதுமடா சாமி! அந்த அடியும் கூடவே அந்த வார்த்தைகளும்! இன்னும் இரண்டு பிறவிகளுக்குப் போதும்!

என்னவோ. அவனே அதை உணர்ந்தது போல. அது போன்ற பேச்சு செயல் இரண்டையும் விட்டிருந்தான்,

இதே போல இன்னும் ஐந்து ஆண்டுகளைக் கழித்துவிட்டால் அம்மாவீட்டுக்குப் போய்விடலாம் ....

எண்ணங்கள். செயல்கள் எல்லாமே பழைய நிலைக்கு மாறின,

யந்திரம் போல வேலைக்குப் போவதும் வருவதும். உண்டு முடங்குவதுமாக வாழ்க்கை நடந்தது,

மைத்துனனோடு உரையாடுவதும் வெகுவாகக்குறைந்து போனது,

மலையருவி ப்ராஜெக்ட்டுக்காக யோகேந்திரன் அந்தத் துறை அரசு அலுவலகத்திலும். அது தொடர்பான அதிகார மையத்தாரிடமும் சுற்றி அலைந்தான்,

பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து. அதுவும் பார்க்க வேண்டிய விதமாகப் பார்த்து ஃபைலை நகர்த்தப் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தான்,

வீட்டில் தாயோடுஜோடி சேர்ந்துகொண்டு வாட்டி வருத்த நாத்தனார்வீட்டில் இருக்கவில்லை, ஆனால் மகளின் பிரிவு தனபாக்கியத்தை மிகவும் பாதித்தது,

கூடவே இருந்து. ஒத்த மனதோடு கதை பேசிக் கொண்டிருந்த மகளுக்காக ஏங்கி அவளோடு பேச முயன்றால். அதுவும் முடியவில்லை,

“புகுந்தவீட்டில் எத்தனையோ பார்க்க வேண்டும், நம்வீட்டில் போலச் சும்மா உங்களோடு பேசிக்கொண்டே இருக்க முடியுமா? இப்படி அடிக்கடி கூப்பிட்டுத் தொல்லை பண்ணாதீர்கள்!” என்று முகத்தில் அடித்தாற்போல ஊர்வசி சுள்ளென்று கூறிவிட. பெற்றவளின் முகம் வாடிப் போயிற்று,

இப்படிச் சொல்லிவிட்டாளே என்று அவ்வப்போது புலம்புவதும். மகளைப் பிரிந்த ஏக்கத்தில் அவ்வப்போது வருந்துவதுமாக. தனபாக்கியம் தன் அறைக்குள்ளேயே சுருண்டு கிடக்கலானாள்,

பாவம் என்று எண்ணினாலும். துணிந்து மாமியாரிடம் போய்ப் பேசுவதற்கு மாதங்கிக்குத் தயக்கமாக இருந்தது,

“என்ன? என் வருத்தம் பார்த்துச் சிரிக்க வந்தாயா ?” என்று

மாதங்கியிடமே பாய்ந்துவிட்டால்?

செய்ய மாட்டாள் என்பதற்கு உறுதி கிடையாது, அத்தோடு. மாமனாரிடமே ஒரு தரம் அவள் சீறியதை மாதங்கி கேட்கவும் நேர்ந்தது, ஒரு தரம் சமையல்காரம்மாவிடம், அப்புறம் அருகில் நெருங்கிய எல்லாரிடமுமே,

தன் ஆற்றாமையை மற்றவர்களிடம் காட்டுகிறாள் என்பது புரிய. முடிந்த அளவு மாதங்கி ஒதுங்கியே போகலானாள்,

ஆனால் உள்ளூர அவளுக்கு ஓர் உறுத்தல்! ஊர்வசி ஏன் தாயுடன் பேச விரும்பவில்லை?

யாரைப் பார்த்தாலும் ஏதோ வகையில் நக்கல் பேசுவது ஊர்வசியின் வழக்கம், அவளைப் பற்றியே நிறையப் பேசியிருக்கிறாள், பதில் பேச முடியாத நிலையில் மாதங்கி ஒதுங்கிப் போய்விடுவாள், ஆனால். இதைப் போலவே புகுந்தவீட்டிலும் யாரையாவது பற்றி மட்டமாகக் கிண்டலடித்து நாத்தனார் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று மாதங்கி பல முறை நினைத்திருக்கிறாள்,

மகளைக் கண்டிக்க வேண்டிய தாயாரும் கூடச் சேர்ந்து பேசுவதுதான் இங்கு நடப்பது, ஆனால் இப்போது தாயிடமே பேசுவதைத் தவிர்க்கிறாளே!

தன்னைப் போலவோ என்று ஒரு தரம் நினைத்துவிட்டு அப்படி இராது என்றும் மாதங்கி முடிவு செய்தாள்,

மாதங்கி பிறந்தவீட்டினரோடு அதிகம் பேசாமல் இருந்ததன் காரணமே வேறு, கலகலப்பான பேச்சுப் போக்கில் இயல்பாக எதையாவது சொல்லப்போக. மகளுக்குப் பிடித்தமானது என்று அதை இதைச் செய்து எடுத்துக்கொண்டு அம்மா இங்கே வந்து அவமானப்பட்டு விடக் கூடாதே. மகளின் நிலைமை அறிந்து வருந்தி விடக் கூடாதே என்று எண்ணியே பிறந்தவீட்டாருடன் மாதங்கி அதிகம் பேசவில்லை,

முதல்முறையாக வந்தபோதே. மாமனார். அவள் தாயின் முகத்தை வாட வைத்து அனுப்பியது அவளுக்கு எப்படி மறக்கும்?

அத்தோடு. இங்கிருந்து ஒரேயடியாகப் பிரிந்து செல்லும்போது அவர்கள் மடியில்தானே விழப் போகிறோம்? அப்போது மனதை அப்படியே கொட்டி விடலாம்,. அதுவரை அவர்களுக்கு இந்த

வருத்தம் வேண்டாமே என்றும் கருதினாள்,

ஆனால் ஊர்வசி ஏன்... என்று சற்று நேரம் யோசித்துப் பார்த்துவிட்டு. அப்படி அங்கே ஏதாவது பிரச்சினை என்றாலும். வாய் மூடிச் சகிக்கிற ஆள் அவள் அல்ல,. எந்த நிலையிலும் தன்னைக் காத்துக்கொள்ள அவளுக்குத் தெரியும், அனாவசியமாக அவளைப் பற்றி யாரும்...முக்கியமாக மாதங்கி கவலைப்படத் தேவையே கிடையாது,

இன்றைக்கும் தன் வாழ்வைச் செலுத்துவதே அவளுக்குப் பெரும் பாடாக இருக்கையில். ஓரளவேனும் அவளை விட அதிகக் கெட்டிக்காரியின் நல்லது கெட்டது பற்றி யோசிக்க அருகதை ஏது?

மேலும் இந்த மாதிரி சந்தேகம் என்று சொன்னாலே இங்கே எல்லோருமாக அவளைக் கிழி கிழி என்று கிழித்து விடப் போவது நிச்சயம், அனாவசியமாக அது வேறு எதற்கு?

மாதங்கி பழையபடி வேலைக்கும் மாலை வேளைகளில் பூங்காவுக்கும் சென்று வரலானாள்,

ஆனால் இரண்டிலுமே பழைய ஈடுபாடு ஏற்படவில்லை என்பது மட்டும் நிஜம்!

யோசித்துப் பார்த்தால் காரணம் ஒன்றும் பெரிதில்லை, அங்கங்கே அவளது பார்வையில் அபீதா தட்டுப்பட்டுக் கொண்டே இருந்தாள்,

இவள் அலுவலகம் முடிந்து வரும் சமயங்களில் யுகேந்திரனின் நகர்ப்புற நிறுவனம்  இருக்கும் திசை நோக்கி அவள் செல்வதை மாதங்கி பலமுறை காண நேர்ந்தது,

மாமனார் விழுப்புரம் தாண்டியுள்ள வேலை நடக்கும் “சைட்”டில் இருக்க இந்த அலுவலகம் யுகேந்திரன் பொறுப்பில் இருப்பது மாதங்கிக்குத் தெரியும்,

நகரத்தின் அந்தப் பகுதியில் எத்தனை எத்தனையோ கட்டிடங்கள் இருந்தனதான், அவற்றில். யுகேந்திரனின் அலுவலகத்துக்குத்தான் அவள் சென்றாள் என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது,

ஆனாலும் மாதங்கியின் மனம் மிகவும் சஞ்சலப்பட்டது உண்மை,

முன்னைப் போல. “ச்சு, தெரிந்ததுதானே” என்று அலட்சியப்படுத்த அவளால் இப்போது முடியவில்லை, ஊர்வசியின் திருமணத்திற்குப் பிறகு. மனதில் என்னவோ ஒரு சலனம்,

இந்த சஞ்சலம் அதிகமாகும் விதமாக உடன் பணி புரிகிறவர்கள். நட்பு வட்டம் எல்லாமே. எப்போது குழந்தை என்று கேட்கலாயினர், நாத்தனார் முந்திக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்! இல்லாவிட்டால் இளப்பம் ஆகிவிடுமாம்!

திருமணம் என்றால் அடுத்த எதிர்பார்ப்பு இதுவே என்று அவளும் அறிவாள், ஆனால் அவளது நிலை வேறு அல்லவா? அது தெரியாமல் மற்றவர்கள் கேலி பேசியது அவளை இரு மடங்கு வாட்டியது,

முகத்தில் எந்த விதமான சலனமும் இல்லாமல் நடமாடிய கணவனைப் பார்க்கையில் அந்த வாட்டம் அவன் மேல் ஆத்திரமாக மாறியது,

அவனுக்கு என்ன குறை? வேண்டாத மனைவி தானாகவே அவனது அறையை விட்டு வெளியேறிவிட்டாள், காதலியோ அவளாக வந்து காலில் விழுகிறாள், அவனுக்கு வேறென்ன வேண்டும்?

இதெல்லாம் போதாது என்று “என் மொபைல் கீழே விழுந்து உடைந்துவிட்டது, யுகேனிடம் உன் மொபைலைக் கொடு, எங்கள் அடுத்த சந்திப்பு பற்றி. அவரிடம்  சொல்ல வேண்டும்,” என்று அபீதா. மாதங்கியையே ஏவவும் உரியவள் மனம் கொதித்தது!

# அத்தியாயம் - 8

கொதிப்பு என்றால் கொஞ்ச நஞ்சம் அல்ல, நெஞ்சுக்குள் தீ எரிவது போன்ற உணர்வு மாதங்கிக்கு!

என்ன தைரியம் இருந்தாள் அபீதா தன்னையே ஏவுவாள்? யுகேந்திரனின் காதலி என்றால். அது அவர்களுக்கு இடையில் மட்டும்தான், மாதங்கியிடம் அவளுக்கு எந்த அதிகாரமும் கிடையாது!

எனவே. "இந்த வேலையெல்லாம் என்னிடம் சொல்லாதே!" என்றாள் கடித்த பற்களுக்கிடையே!

இதையே அபீதாவும் எதிர்பார்த்திருப்பாள் போல,

"என்ன செய்வது? நீதானே கழுத்தில் கட்டிய கல் மாதிரி அசையாமல் அங்கேயே இருந்து எங்கள் கழுத்தை அறுக்கிறாயே! தா...லி கட்டிய பெண்டாட்டி ! உன் கணவனுக்காக உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் கூறுவது. சொல்லு?" என்றாள் அவள் எகத்தாளக் குரலில்,

இதற்கு என்ன பதில் சொல்வது? இல்லை... என்று தொடங்கி நீளமாய் விவாதம் செய்வதா? அல்லது காரசாரமாய்ச் சண்டை போடுவதா?

எல்லாமே கேவலமாக மாதங்கிக்குத் தோன்றியது,

மறு பக்கம் அபீதா இருக்கிறாள் என்பதால் மொபைலைக் கையில் வைத்திருக்கவே அருவருப்பாக இருந்தது,

நல்லவேளையாக ஒரு நண்பனைப் பார்க்கவென்று யுகேந்திரன் காலையிலேயே கிளம்பிச் சென்றிருந்தான்,

யுகேந்திரன்வீட்டில் இல்லை என்று ஒரு குருரத் திருப்தியோடு சொல்ல முடிந்தபோதும். வேறு எதற்கும் கையால் ஆகாமல் அவளது மனம் குமுறலாயிற்று,

பிசாசு பிசாசு. மனிதத் தன்மையே இல்லாத பேய் என்று தனக்குள் அபீதாவை வைது கொஞ்சம் மனதை ஆறுதல்படுத்திக் கொண்டாலும். அதையே கோழைத்தனமாகவும் உணர்ந்து மாதங்கி குன்றிக் குமைந்தாள்,

இதன் காரணமாக. அன்று காலையில் அலுவலுக்குக்

கிளம்பும்போதே மாதங்கிக்கு மனம் கெட்டுவிட்டது,

யுகேந்திரனும் அபீதாவும் அடிக்கடி சந்திக்கிறார்களா இல்லையா என்று இருந்த அவளது சந்தேகமும். சந்திக்கிறார்கள் என்றே இப்போது உறுதிப்பட்டது, மற்றபடி இவ்வளவு திமிராகப் பேசும் துணிவு அபீதாவுக்கு எப்படி வரும்?

இது பற்றிக் கணவனிடம் கேட்டும் பயனில்லை, கேட்கும் உரிமை உனக்குக் கிடையாது என்று சர்வ சாதாரணமாகவே பதில் சொல்வான்,

அன்றி. ஆமாம் என்றாலும் நோவு,. இல்லை என்றாலும் நம்ப முடியாது, இதை ஏன் கேட்பது?

அதை விட. அபீதாவின் நோக்கம் பற்றி ஆராய்வது மேல், இப்போது அவளது திட்டம் என்ன?

காதலன் மனதில் மாதங்கிக்கு எதிராக மீண்டும் தப்புத் தப்பாய்க் கதை கட்டி வெறுப்பேற்றுகிறாளா?

ஒரு தடவை அடி வாங்கி வைத்தவள்தானே? அதை இப்போதும் முயற்சிப்பாளா?

செய்வாள். கட்டாயம் செய்வாள், மாதங்கியைத் துன்புறுத்திப் பார்க்கும் ஆசை அவளுக்கு நிறையவே உண்டு, மற்றபடி கண்மூடித்தனமாக அடிக்கும் அளவுக்கு பொய்க்கதைகள் கூறி. யுகேந்திரனை அவள் ஏன் தூண்டி விடவேண்டும்?

சட்டென மாதங்கிக்கு ஒன்று தோன்றியது,

இந்த அடிக்கு அஞ்சியேனும் யுகேந்திரனைப் பிரிந்து மாதங்கி சென்றுவிடுவாள் என்று எண்ணினாளோ?

இருக்கும், வேறு எதற்காக ஓர் அப்பாவிப் பெண் மேல் இல்லாத பொல்லாத பழி போட்டு அடிக்கச் செய்ய வேண்டும்?

அடிப்பாவி! சற்றும் அன்பற்றசூழ்நிலையிலும் மாதங்கி புகுந்தவீட்டிலேயே இருப்பதன் காரணமே வேறு ஆயிற்றே! அது தெரியாமல். அவளை விரட்டுவதற்காக இப்படியெல்லாம் முயற்சிக்கிறாளே!

அவளும் பாவம்தானோ? யுகேந்திரன் மேல் அவள் வைத்திருக்கும் ஆசை நியாய அநியாயத்தை மீறியதோ என்று

நினைக்கும்போதே அவள் மனம் திடுக்குற்றது,

அபீதாவுக்கு அப்போது கிடைத்த வெற்றி மறுபடியும் அதே போலச் செய்ய வைக்கும்தானே?

அப்படி நடந்தால் .... என்று கலக்கத்துடன் யோசிக்கும்போதே மாதங்கியின் உடல் நிமிர்ந்தது,

என்ன பயம்?

அப்படி அடித்தால்... அன்று போல யுகேந்திரன் பலத்தைக் காட்ட முயற்சித்தால். அவள் ஒன்றும் பணிந்து அடிபட்டுக்கொண்டு நிற்கமாட்டாள், பதிலுக்கு அடிக்க முடியுமோ என்னவோ. தடுக்க அவளால் முடியுமே!

பேச்சுக்குப் பேச்சு! எல்லாம் வார்த்தைகள்தானே? திருப்பியும் கொடுக்கலாம்!

அன்று சற்றும் எதிர்பராமல் நேர்ந்ததில் ஏற்பட்ட அதிர்ச்சியில் செயலற்றுப் போனாள், இப்போதுதான் எதுவும் நடக்கலாம் என்று தெரிந்துவிட்டதே, இந்தப் பிள்ளைப் பூச்சி இனிப் பொறுக்க மாட்டாள் என்று தெரியும்போது அதிர்ச்சி இடம் மாறிப் போய்விடாதா?

இன்னொரு தரம் அவள் மேல் கைவைத்து விடுவானா? பார்க்கலாம்!

திருப்பிக் கொடுக்கும் மனநிலையில் மாதங்கி ஆங்காரத்துடன் இருக்கையில் விரைவிலேயே அதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது,

அந்த வாய்ப்பு. யுகேந்திரனைவீட்டை விட்டே விரட்டியது!

அன்று மாலையில் பூங்கா வாயிலில் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்றவளுக்கு எதிலும் ஈடுபட மனது மறுத்தது,

சிறுவர் சிறுமியரின் விளையாட்டு பார்வையைத் தாண்டி மனதில் படவே இல்லை, அருகில் இருந்தவர்களின் பேச்சோ அதற்கும் மேலே!

“விவாகரத்து கேட்டால் கொடுத்துவிட வேண்டியதுதானே? இவளோடு வாழப் பிடிக்காமல்தானே கேட்கிறான், மாட்டேன் மாட்டேன் என்று இழுத்துப் பிடிப்பதால் அன்பு வந்துவிடுமா?

வெறுப்புதானே கூடும்  .... “ என்று யாரோ ஆங்கிலத்தில் கூறுவது கேட்க. தாங்க மாட்டாமல் எழுந்து. வேகமாக நடந்து அங்கிருந்து விலகிப் போய்விட்டாள்,

படித்தவர்களின் புத்தியும் இதுதான்?

சற்று நேரம் நடந்து பார்த்துவிட்டு சோர்வுடன் திரும்பியவளுக்குத் திடுமென உடல் விறைத்தது,

மணவிலக்கு பற்றிப் பேசிய அந்தப் பெண்ணை அவள் பார்த்திருக்கிறாளோ?

யார் அவள்? உறவு...நட்பு  .... வேறு யா...ராக இருக்கக் கூடும்?

பூங்காவிலும் பார்த்துப் பழக்கமில்லை எனில் வேறே எங்கே?

ஏதோ தெளிவற்ற தோற்றம்! அன்று துணிக்கடையில் அபீதா சைகையால் பேசியபோது அவள் அருகே நின்றாளோ?

அபீதாவைக் கண்டதும் அவள் யாருக்கு சைகை செய்கிறாள் என்று பார்ப்பதில் கவனம் பாய்ந்ததே தவிர. அவளோடு யார் யார் இருக்கிறார்கள் பார்க்கவே தோன்றவில்லையே! சும்மா மொத்த உருவம்தான்...,

மீண்டும் பார்த்தால் தெரியுமோ என்று ஓட்டமும் நடையுமாக விரைந்து சென்று விளையாட்டுப் பகுதிக்குப் போய்ப் பார்த்தால். அந்தப் பெண் அங்கே இல்லை,

பார்வையால் தேடியபோது. அவள் பூங்கா வாயிலை விட்டு வெளியே போவது தெரிந்தது,  தூரத்தைக் கணக்கிடும்போது. இனி ஓடிப்போய் அந்தப் பெண்ணைப் பிடிப்பது இயலாது என்று புரிந்தது,

அப்படியே பிடித்தாலும்தான் அவளிடம் என்ன கேட்பது? அவளும்தான் எதை ஒத்துக் கொள்வாள்? அவள்தான் வந்த வேலை முடிந்தது என்று கிளம்பிப் போய்க்கொண்டே இருக்கிறாளே!

எண்ணங்கள் முட்டி மோதிக்கொண்டு ஓடும்போதே மாதங்கிக்குத் தன்மீதே  சே என்று ஆகிவிட்டது,

முகம் அறியாத யாரோ ஒருத்தி. அவள் போக்கில் ஏதோ சொன்னால். அவளது சொந்த வாழ்வின் வில்லியோடு சேர்ந்து சதி செய்வதாகக் கற்பனை செய்வதா? அந்த இருவரும்

ஒருவருக்கொருவர் அன்னியர்களாகவே இருக்கலாம், என்ன வேகமாக அவர்களைப் பொல்லாதசூதுக்காரிகளாகக் கோத்துவிட்டாள்!

கூடாது, இதுபோல மனதில் சமநிலை இழந்து அடுத்தவர் மேல் பழியேற்றக் கூடாது,

ஆனால் இதெல்லாமே யுகேந்திரனால் வந்தது, ஒன்று அவன் பிடிவாதமாகத் துணிவுடன் திருமணத்தை நிறுத்தியிருக்க வேண்டும், அல்லது. மணமான பிறகாவது. அந்த இன்னொருத்தியின் உறவை வெட்டியிருக்க வேண்டும்,

இரண்டையும் செய்யாமல் அந்த இன்னொருத்தியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு மனைவியை அடித்தானே! உறவே இல்லை. நீ யாரோ என்றவனுக்கு அடிக்க மட்டும் உரிமை எங்கிருந்து வந்தது?

கட்டிய கணவனுக்கே இந்த நாளில் இல்லாத உரிமை!

எல்லாமே அதனால்தானே வந்தது! மாதங்கியின் மனமும் தறி கெட்டு என்னென்னவோ எண்ணுகிறது!

எல்லாமே அவனது தப்புதான்!

இப்படிக் கணவனின் குற்றங்களைப் பட்டியல் இட்டு ஆத்திரத்தை வளர்த்தபடியே மாதங்கிவீட்டுக்கு வந்து சேர்ந்தாள்,

ஹாலில் பல் வேறு பெட்டிகளின் நடுவில் கண்ணீர் வழிய விசும்பி அழுதபடி அந்தவீட்டுப் பெண் ஊர்வசி உட்கார்ந்திருந்தாள், குடும்பத்தில் எல்லோருமே அவளைச் சுற்றிலுமாக வருத்தத்துடன் அமர்ந்திருந்தார்கள்,

என்னவாக இருக்கும்? மாதங்கி அஞ்சியபடியே வாய்க் கொழுப்பினால் மாட்டிக் கொண்டாளா?

எப்படியோ? விழுப்புரத்திலிருந்து மாமனார் வரை வந்திருப்பதைப் பார்த்தால். குடும்பத்தில் எல்லோருக்குமே எல்லாம் தெரிந்திருக்கிறது,

மாதங்கியை மட்டும் விட்டுவிட்டார்கள்! அவள்தான் குடும்பத்தவளே இல்லையே, எப்படியோ? மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய புது மணப்பெண் கண்ணீர் விடுகிறாள் என்றால். மாதங்கிக்கு வருத்தமாகத்தான் இருந்தது,

உள்ளே போய்த் தூண்டித் துருவவும் மனமில்லாமல் அவள் தயங்கி நிற்கையில் ஊர்வசி கண்ணீருடன் பேசினாள்,

“இந்தவீட்டில் வாழ வந்த பெண்ணுக்கு நம்வீட்டில் நடந்த அநியாயம் சும்மாப் போகாதும்மா, அதுதான் என்னைத் திருப்பி அடித்திருக்கிறது!” என்று விசும்பினாள்,

மாதங்கிக்கு நடந்தது அநியாயம் என்று ஒப்புவது மட்டுமின்றி வருந்தவும் செய்கிறாளே! எந்த வருத்தத்திலும். இன்னொரு பெண் அந்த வேதனை அனுபவிக்க வேண்டும் என்று அவள் நினைத்ததே இல்லை, இப்போதும். பாவமாகத்தான் இருந்தது,
“அண்ணிக்கு ஏதாவது செய்ய வேண்டும் ................................ “

செய்வதற்கு என்ன இருக்கிறது? அந்த அடியிலேயே எல்லாம் முடிந்துவிட்டதே, மிச்சம் மீதி இருந்ததை. இன்று அபீதா துடைத்து எறிந்துவிட்டாள்,

அபீதாவை எண்ணியதும் பாவமும் பரிதாபமும் விலக. வாழ வந்தவீட்டில் அன்னியளாய் வெளியே நிற்கும் அவலம் பெரிதாகத் தோன்றியது,

இப்போது தங்கையைப் பார்த்து உருக்கமாகத் தலையை வருடிக் கொண்டிருக்கிறானே. அவனால் மனதிலும் உடலிலுமாக மாதங்கி எத்தனை காயங்கள் பட்டிருக்கிறாள்!

இருவரும் சம வயதுப் பெண்கள்தானே? ஆனால் அவளது வலி. அவனுக்கு எவ்வளவு அலட்சியமாக இருந்தது!

இன்னமும் வெளியே நிற்க மாதங்கிக்கு மனமில்லை, அலட்டவும் பிடிக்காமல் மெல்லவீட்டினுள் சென்றாள்,

அரவம் உணர்ந்து திரும்பிய அனைவரும் மாதங்கியைப் பார்த்துத் திகைத்தனர்,

அனுபவித்துக் கொண்டிருக்கிறவள் அல்லவா? மற்றவர்களின் தயக்கம் ஊர்வசிக்கு இருக்கவில்லை,

எழுந்து ஓடி வந்து மாதங்கியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்,

“அண்ணி. உங்களுக்குச் செய்த அநியாயத்துக்கு என் வாழ்க்கையே அழிந்துவிட்டது அண்ணி!” என்று அழுதாள்,

வேறு யாராவது ஊர்வசிக்கு ஆறுதலாக ஏதாவது சொல்லவோ செய்யவோ கூடுமோ என்று ஓரிரு கணங்கள் மாதங்கி தாமதித்துப் பார்த்தாள், ஆனால் ஓரளவு எல்லாம்  முடிந்துவிட்டது போல வருத்தமான முகத்துடன் எல்லோரும் வெறுமனே பார்த்துக்கொண்டு நின்றனர்,

நாத்தனார் பற்றியிருந்த கைகளில் ஒன்றை மெதுவாகவே விடுவித்துக்கொண்டு. விடுதலை பெற்ற கையால் ஊர்வசியின் கை மீது லேசாகத் தட்டிக் கொடுத்து. "பாருங்கள் ஊர்வசி, அனுபவிக்கிறபோது கஷ்டங்கள் பெரிதாகத்தான் தெரியும், கொஞ்சம் ஆறப் போட்டு யோசித்தால் பிரச்சினை சின்னதாகி விடுவது இயல்பு," என்றாள் மென்மையாக,

"அப்படி எல்லாம் போகாது அண்ணி, இந்தவீட்டில் உங்களுக்காகப் பேச ஆளில்லை என்று எத்தனை முறை உங்களுக்குக் கொடுமை செய்திருக்கிறோம்! நல்லபடி உண்ணக் கூட விட்டதில்லையே! அதற்காகவெல்லாம் எங்களை மன்னியுங்கள் அண்ணி, மன்னிப்பது மட்டுமல்ல, நாங்கள் பிராயசித்தமும் செய்தாக வேண்டும்,  சொல்லுங்கள் அண்ணி. நாங்கள் என்ன செய்யட்டும்?" என்று ஆர்வமாகக் கேட்டாள் ஊர்வசி,

ராமனை அடித்தால் ராமனிடம்தான் மன்னிப்புக் கேட்டாக வேண்டும் எனும் விதமாகப் பகவான் ராமகிருஷ்ணர் கூறியிருப்பது இவளுக்குத் தெரிந்திருக்கும் போல! ஆனால் மாதங்கியின் வலி என்ன என்று இவளுக்கு என்ன தெரியும்?

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் ஊர்வசி, நீங்கள் தப்பை உணர்ந்துகொண்டதே போதும், அதுவுமே வேதனைதானே!" என்றாள் மற்றவள்,

"ப்ளீஸ் அண்ணி. சொல்லுங்கள்!" என்று மறுபடியும் வற்புறுத்திக் கேட்டாள் நாத்தனார், "எதுவானாலும் கட்டாயம் செய்கிறோம்,"

எதுவானாலுமா? அவளுக்கு என்ன தேவை என்று இவளுக்கு என்ன தெரியும்?

அத்தோடு. அவளுக்கு ஒரு நல்லதைச் செய்துவிட்டால் இவளுக்கும் எல்லாம் சரியாகிப் போய்விடுவதற்கு இதென்ன பண்டமாற்று வியாபாரமா? யாரிடம் இந்தப் பேரம்? கடவுளிடமா?

“மனம் உணர்ந்து வருத்தப்பட்டிருக்கிறீர்கள், அதுவே போதுமானது, “ என்று மாதங்கி ஒதுங்க முயன்றாள்,

ஆனால் விடாமல் திருப்பித் திருப்பிக் கேட்டாள் ஊர்வசி, மற்றவளின் கையையும் அவள் விடுவதாக இல்லை,

மேலும் அவள் பேசிய விதம் .... ஊர்வசியின் முகத்தைப் பார்த்தபோது. அண்ணன் மனைவி என்ன கேட்கக் கூடும் என்று ஏற்கனவே அறிந்திருப்பது போல ஒரு தோற்றம், கண்களில் சிறு பளபளப்பு!

இவள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாள்!

ஓர் ஊகத்தில் அவள் முகம் கன்றத் தொடங்கும்போதே. ஊர்வசி தன் மனதை வெளியிட்டாள், “அண்ணனுக்கு என்னிடம் மிகுந்த அன்பு அண்ணி, அவரிடம் நான் சொன்னால் தட்ட மாட்..., என்று தொடங்கியவள் மாதங்கியின் முகத்தைப் பார்த்துப் பேச்சை முடிக்காமலே நிறுத்திவிட்டாள்,

“சிபாரிசா? இதற்கெல்லாம் கூட சிபாரிசு செய்வார்களா. என்ன?” என்று ஏளனமும் வியப்பும் கூடவே அருவருப்பும் கலந்த குரலில் மாதங்கி திருப்பிக் கேட்க. அனைவரின் முகங்களும் தரையை நோக்கிக் கவிழ்ந்தன,

இவர்கள் எல்லோரும் அவளை என்ன நினைத்துவிட்டார்கள்? எவளோ ஒருத்தியை மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் கணவனின் அணைப்புக்காக அவள் ஏங்கித் துடிதுடித்துக் கொண்டிருப்பதாகவா? என்ன கேவலம்!

ஒருவாறு சமாளித்துக்கொண்டு “சாரி அண்ணி,” என்றாள் ஊர்வசி சின்னக் குரலில், “அண்ணி. நாங்கள் செய்த பாவத்துக்கு ஏதாவது செய்தாக வேண்டும் அண்ணி! என்... னமாவது எங்களைச் செய்யச் சொல்லுங்கள் அண்ணி! பணம் என்றைக்குமே உங்களுக்குப் பெரிதல்ல என்று எனக்குத் தெரியும், வேறு நான் .... நாங்கள் என்ன செய்யட்டும்? ப்ளீஸ் அண்ணி! ஏதாவது யோசித்துச் சொல்லுங்களேன்!”

“அவள் மட்டுமில்லை, நாங்கள் எல்லோருமேதான்,” என்ற குரலில் மாதங்கியின் நெஞ்சு கொதித்தது,

எல்லாத் துன்பங்களுக்கும் ஆதி காரணம் ஆனவனே இதைச்

சொல்கிறானா?

முதல் முறை அவனைச் சந்தித்ததில் இருந்து அவளை நோகடிப்பவன்! அதுவும் அவனுடைய சகோதரி. தாயார் செய்வது போலக் குண்டூசிக் குத்தல்கள் அல்ல. கத்தியால் இதயத்தில் குத்தி அங்கேயே வைத்துத் திருகுகிறவன்!

அவளது ஆசைக் கனவுகள் அத்தனையையும் அழித்து. அதற்கு மேலும் சித்திரவதை செய்து … இன்னும் விடவில்லையே!

இவன். அவளுக்கு என்ன வேண்டுமானாலும் செய்கிறானாமா?

மற்றவர்களாலோ. யுகேந்திரனாலோ அவளுக்கு என்ன செய்துவிட முடியும்? என்ன செய்து அவளது துன்பங்களை அவர்கள் நிவர்த்தி செய்ய முடியும்?

“ஏதாவது சொல்லுங்கள் அண்ணி,” என்று தன் பங்குக்கு அவளை ஊக்கினான் யோகேந்திரன், “என்னவானாலும்!”

என்னத்தைச் சொல்வது? எதையுமே கேட்டுப் பெறுவதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது? யோசித்தபடியே மாதங்கி பேசினாள்,

“எனக்கு என்ன வேண்டும்? எனக்கே தெரியவில்லையே! ஒரு சாதாரணப் பெண் உரிமையோடு அனுபவிக்கக் கூடிய எதுவும் எனக்குக் கிடைத்ததில்லை, ஆனால் அவைகளைக் கேட்டுப் பெறுவதைப் போலப் பெரிய அவமானம் எதுவுமே கிடையாது என்று எனக்குத் தோன்றுகிறது, அந்த அளவு நான் தரம் இறங்கி விடவும் இல்லை! மற்றபடி ….நானும் சம்பாதிக்கிறேன், எனக்குத் தேவைப்பட்டதை நானே வாங்கிக் கொள்ள முடியும், வேறே என்ன “ என்று கசந்த குரலில் சொல்லிக்கொண்டே வந்தவளுக்குத் திடுமென ஒன்று தோன்றியது,

ஆனால் இது நடக்குமா?

எல்லோருமே அவளையே ஊன்றிக் கவனித்தபடி அவளது வார்த்தைகளுக்காகக் காத்திருப்பது தெரிந்தது,

யாரையும் பார்க்கப் பிடிக்காமல்சூனியத்தை வெறித்தபடி. “பிராயசித்தம் செய்ய விரும்புகிறவருக்கு வாய்ப்புக் கொடுக்க மறுப்பதும் பாவமே என்பதாகக் கேட்டிருக்கிறேன், …

வேண்டுமானால் ....” என்றவள் முடிக்குமுன் “என்ன? என்ன?” என்று பரபரத்தது அந்தக் குடும்பம், குடும்பத் தலைவர் மாசிலாமணி உட்பட,

சுற்றிலும் பார்த்துவிட்டு மறுபடியும் இலக்கற்று வெளியை நோக்கினாள், “இப்போது கூட இது முடியுமா முடியாதா என்று எனக்குத் தெரியாது, ஆனால் எனக்குத் தாலியைக் கட்டிய இவர் முகத்தை வாழ்நாள் முழுவதும் பாராமல் இருக்க முடியுமானால் .... நான் விரும்பும் எதுவானாலும் சொல்லச் சொன்னீர்களே,. எனக்குப் பிடித்தது...நான் விரும்பும் ஒன்றே ஒன்று இதுதான், முடிந்தால் செய்யுங்கள், இல்லாவிட்டாலும் பரவாயில்லை, விட்டுவிடுங்கள்! இப்படியே நான் இருந்து கொள்ளுவேன், ஒன்றும் பிரமாதமில்லை! “ என்று முடித்துவிட்டு. விடுவிடென்று அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டாள்,

இப்போதைய அவளது அறையில் போய் தொப்பெனப் படுக்கையில் உட்கார்ந்தவளுக்கு மூச்சு வாங்கியது,

குண்டுவீசுகிறவர்களுக்கு இப்படித்தான் இருக்குமா? அவள் போட்டதும் குண்டுதானே? எங்கேயோ எப்படியோ வெடிக்கட்டும்!

சில நாட்கள்வீட்டில் எந்த விதமான மாறுதலும் தெரியவில்லை, யாரும் அவளை நெருங்கிப் பேசவும் இல்லை, விலகி விலகிப் போனார்கள்! யோகேந்திரன் உட்பட!

அந்த ஒரு கோரிக்கையில் அவள் தீண்டத் தகாதவள் ஆகிவிட்டாள் போலும்!

முடியாது என்பதை நேராகச் சொல்லாமல் இப்படிச் செய்து காட்டுகிறார்கள்! என்ன கோழைத்தனம்! எதுவானாலும் வாய் திறந்து சொல்லக் கூடவா முடியாது? ஆனால். கேட்குமுன் அவளும் யோசித்திருக்க வேண்டுமோ? போகட்டும், இதென்ன பழைய காலமா? தப்பு செய்தவர்களை நாடு கடத்துவதற்கு? இவர்கள் இந்தக் கால மனிதர்கள், தங்களையே பெரிதாக நினைத்துப் பழகிய குடும்பம் வேறு,

இவர்களிடம் எதையும் எதிர்பார்ப்பதுதான் தவறு! போகிறார்கள்!

இவர்களில் ஒருவனே என்றாலும். அன்று வரை நல்லவனாக

நடந்துகொண்ட மைத்துனனின் முகம் சற்று வாடித் தெரியவும் அவளுக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது,

என்னவாக இருக்கும்?

ஒதுங்கி ஒதுங்கிப் போனவனை. யாரும் இல்லாத நேரத்தில் தேடிப் போய் ஏனென்று கேட்டாள்,

“ஒன்றுமே தெரியாத மாதிரிக் கேட்கிறீர்களே. அண்ணி!” என்றான் அவன் சற்றே சலித்த குரலில்,

“மாதிரி என்ன? தெரியாது என்பதால்தான் உங்களைத் தேடி வந்து கேட்கிறேன், அத்தோடு  உங்கள் பிரச்சினை பற்றி நான் யாரிடம் கேட்பேன்? உங்கள் அம்மா. தங்கை. தந்தை யாருமே என்னிடம் நின்று பேசுவதில்லை என்று உங்களுக்குத் தெரியும், ஒரு வேளை. என்னோடு ஈருடல் ஓருயிராக வாழும் உங்கள் அன்பு அண்ணன் நடந்த அனைத்தையும் என்னிடம் ஒப்பித்திருப்பார் என்று கனவு கண்டீர்களோ? “ என்று ஏளனமும் கசப்புமாக வினவினாள் அவள்,

மைத்துனன் திகைத்தான்!

# அத்தியாயம் -9

மாதங்கியின் வருத்தங்களை நன்கு அறிந்தவன் யோகேந்திரன், எப்போதுமே அவள் பக்கமாக இருப்பவனும் அவனே,

ஆயினும். அண்ணியின் இந்த நக்கல் அவனுக்குப் பிடிக்கவில்லை,

மறுப்பாகத் தலையசைத்துவிட்டு. "தப்புத்தான் அண்ணி! உங்களிடம் நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது, ஆனால் இவ்வளவு கசப்பு வேண்டாம், நீங்கள் நினைக்கிற அளவு அண்ணன் மோசமில்லை,  உ உங்கள் கோ... கோரிக்கையை நிறைவேற்றத்தான் இந்தக் குடும்பமே இப்போது பாடுபட்டுக் கொண்டிருக்கிறது, சீக்கிரமே அது உங்களுக்குத் தெரியவரும்!" என்றுவிட்டு. அவனது...அவனுடைய அண்ணனுக்கும் அவனுக்குமான அறையை நோக்கிநடக்கலானான்,

நடக்காது என்று கிட்டத்தட்ட மறந்து விட்டிருந்த மாதங்கி சற்றுத் திகைத்து. "என் கோரிக்கையா? என்ன கோரிக்கை? ஒன்று வேண்டும் என்று கேட்பதற்கு. இந்த வீட்டில் எனக்கு உரிமை கூட இருக்கிறதா?" என்றாள் வெறுப்புடன்,

"என்னைக் குதறாதீர்கள் அண்ணி, நானே நொந்து போயிருக்கிறேன், ..." என்றான் மைத்துனன்,

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன் தம்பி, இந்தவீட்டில். நானும் மனுசிதான் என்று ஏற்று நடக்கும் ஒரே மனிதர் நீங்கள்தான், நீங்கள் வருந்துவது தாங்காமல்தான் கேட்கிறேன், ஆனால். அதுவே பிடிக்காத மாதிரிப் பேசுகிறீர்களே! என்னால் உங்களுக்கு ஏதேனும் பிரச்சினையா? புரியவில்லையே! சொல்லுங்கள் தம்பி நான் ஏதும் செய்யக் கூடுமானால் "

நின்று அவள் முகத்தைப் பார்த்தான் யோகேந்திரன், இவள் நடிக்கிறவள் இல்லை, இப்போது நடிக்கவும் இல்லை,

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு அவன் சொன்னான்,

"கொஞ்ச நாட்களுக்கு முன்பாக. மேற்கு மலைச் சாரலில் ஒரு ப்ராஜெக்டின் முழுப் பொறுப்பையும் எனக்குத் தரப் போவதாக இருந்ததே. நினைவிருக்கிறதா?" என்று வினவினான்,

“ரொம்ப நன்றாக! தனியாகச் செய்ய முடியுமா என்று கலக்கமாக இருப்பதாகக் கூடச் சொன்னீர்களே! உங்களால் முடியும் என்று… “

“எனக்குத் தென்பூட்டியதே நீங்கள்தான்…”

“ஐயோ. அது கைவிட்டுப் போய்விட்டதா?” என்று கலங்கினாள் மாதங்கி,

உதட்டைக் கடித்துக்கொண்டு அவன் பேசாமல் நிற்க. அவள் யோசித்தாள்,

“அது எப்படி முடியும். தம்பி? டெண்டர் உங்கள் நிறுவனத்துக்குத்தானே கிடைத்தது? கிடைத்ததாகச் சொல்லவும் செய்தீர்களே! அப்புறம் எப்படிப் போயிற்று?” என்று கவலையுடன் கேட்டாள்,

ஒரு பெருமூச்சு விட்டு. “இப்போது அண்ணன் அதைச் செய்யப் போகிறானாம், எல்லாவற்றையும் அவன் பேருக்கு மாற்றி ஆயிற்று,” என்றான் யோகேந்திரன்,

சீற்றத்துடன். “என்ன அராஜகம் இது? தம்பி என்பதால் உங்கள் உரிமையை அவர் தட்டிப் பறிப்பதா? அநியாயம்! அடுத்தவர் மனதை நோகடிப்பதே அவருக்கு வழக்கமாகிவிட்டது! எதிர்த்து நில்லுங்கள் தம்பி,” என்று ஆலோசனை சொன்னாள் அவள்,

“இ… இது அப்படி இல்லை அண்ணி, அண்ணன் என்னிடம் மிகவும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுதான் இதன் பொறுப்பை அவரே ஏற்றுக் கொண்டார்,” என்றான் தம்பி,

“பிரமாதம்!” என்றாள் அவள் ஏளனமாக, “உங்களிடம் அவர் மன்னிப்பு வேறு கேட்டாராக்கும்! ரொம்ப அழகுதான், ஆட்டை வெட்டுமுன் கசாப்புக் கடைக்காரன் அதனிடம் மன்னிப்புக் கேட்கிற மாதிரியல்ல இருக்கிறது! “

இன்னும் கடுமையாக ஏதேனும் மாதங்கி சொல்லியிருப்பாள், ஆனால் யோகேந்திரன் அவசரமாகக் குறுக்கிட்டு அண்ணனுக்காகப் பரிந்தான், “இல்லை அண்ணி, இது. நீங்கள் நினைக்கிற மாதிரி நடக்கவில்லை, அண்ணனே வேறு வழியில்லாமல்தான் இப்படிச் செய்யும்படி ஆயிற்று!” என்றான்,

அவளால் நம்ப முடியவில்லை, “அவருக்கு வேறு வழியே இல்லையாமா? வேறு வழியே இல்லாமல் என் கழுத்தில் தாலியைக் கட்டின மாதிரியா?” என்று எள்ளிய மாதங்கி சட்டெனத் திகைத்து “தம்பீ!” என்று அதிர்ந்தாள்,

அவன் இறுகி நிற்க. “ஐயோ தம்பீ. இது எஎஎனக்காகவா? முகத்தைப் பாராமல் ....இருக்கும்படி கேட்டேனே. அதற்காகவா? கடவுளே. இருந்திருந்து அது உங்கள் தலையிலா விடியவேண்டும்? வேண்டாம் தம்பி, என் கோரிக்கையை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன், உங்கள் அண்ணனிடம் சொல்லி விடுங்கள், இத்தனை மாதங்கள் இருந்தது போல மிச்சமுள்ள காலத்தையும்..., எல்லாம் என் தங்கைகளின் திருமணம் வரைதானே? இப்படியே இருந்து விடுகிறேன், இந்தப் பிராயசித்தம் எனக்குத் தேவையே இல்லை, “ என்றாள் அவள் கழிவிரக்கத்துடன்,

தலையசைத்து. “ஆனால் எங்களுக்குத் தேவை இருக்கிறது அண்ணி, நீங்கள் எவ்வளவு வலி அனுபவித்திருப்பீர்கள்? அந்த வலி நாங்களும் உணர வேண்டும்தானே? உங்கள் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்துக் கொஞ்சமேனும் வலி ஏற்றால். என் சகோதரி வாழ்வு சீராகலாம் அல்லவா? அது மட்டும் நடக்குமானால். இதெல்லாம் ஒன்றுமே இல்லை அண்ணி, “ என்றான் ஊர்வசியுடைய சகோதரன்,

ஆனால் மாதங்கி அதை ஒப்ப மறுத்தாள், “ஆனால் அப்படி ஒன்றும் உத்திரவாதம் கிடையாதே! நிச்சயமற்ற ஒன்றிற்காக. இந்த வேதனை நீங்கள் ஏன் பட வேண்டும் தம்பி?” என்று கேட்டாள், “நீங்கள் ஒரு தப்பும் செய்ததில்லையே!”

“அது...அண்ணி. சில தப்புகளை நான் பார்த்தும் பாராதது போல ஒதுங்கிப் போயிருக்கிறேனே! அது மட்டுமில்லை, இது எனக்கு மட்டும் துன்பமில்லை. அண்ணி, என்னிடம் மன்னிப்புக் கேட்டபோது அண்ணன் முகத்தை நீங்கள் பார்த்திருக்க வேண்டும், அப்பா! அவரால் என்னைப் பார்த்துப் பேசவே முடியவில்லை. தெரியுமா? அம்மா. தங்கை எல்லோருக்குமே வேதனைதான், போகட்டும் அண்ணி, ஏதாவது விடிவு வருகிறதா என்று பார்ப்போம், அம்மா கூட ஏதாவது கோயிலில். தரும காரியம் செய்தால் போதாதா என்றார்கள், ஆனால். அன்று ராமகிருஷ்ணரின் போதனைகள் பற்றி ஒருவர் பேசியதைக் கேட்டேன், ராமனை அடித்துவிட்டுக்

கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கேட்டுப் பயனில்லை என்று ராமகிருஷ்ணர் சொன்னாராம்,

“அதைக் கேட்டதும் என் மனதில் ஒரு தெளிவு! உங்களுக்குத் தப்புச் செய்தால் அதைச் சரி செய்வதும் உங்களிடம்தான் நடக்க வேண்டும் என்று உணர்ந்தேன், போகட்டும் அண்ணி, என் வாய்ப்பு தாமதப்படுமே தவிர. இல்லை எனறு ஆகிவிடாது, ஆனால் உங்களுக்கு நேர்ந்த அநியாயம்? நாங்கள் எல்லாரும் தின்றுதானே அதைத் தீர்க்க வேண்டும்? போகட்டும், எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும்! எப்படியோ நல்லது நடந்தால் சரி! கடவுள் அருளால் ஊசியின் வேதனை தீருமானால் அது போதும்,

“ஒருவேளை விதி அப்படி இல்லை என்றாலும். தப்பைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்போது அதைப் பயன்படுத்துவதும் நல்லதுதானே?”

நல்லதா? மாதங்கியால் ஒத்துக்கொள்ள முடியவில்லை, அந்தவீட்டில் இருக்கும் ஒரே நல்லவனும் வருத்தப்படுவது எப்படி நல்லது ஆகும்?

ஆனால் யோகேந்திரன் ஒரேயடியாகத் தடுக்கவே. அதை மீறிச் செயல்படவும் அவளால் முடியவில்லை,

அதுவும் கடைசியாக. “அதன் பலனாக நூற்றில் ஒரு சதவீதமாக ஊர்மியின் வாழ்வு சீருடையக் கூடும் என்றால் அதைக் கெடுக்க வேண்டாம். அண்ணி!” என்று அவன் கூறி விடவும். அதை மீற அவளுக்குத் தயக்கமாகிவிட்டது,

அத்தோடு தம்பியிடம் யுகேந்திரனுக்கு அதிகப் பாசம் உண்டு, சொல்லப் போனால் இந்தப் பெரிய வேலையைத் தம்பியிடம் கொடுக்கவேண்டும் என்று தந்தையிடம் வாதாடிக் கொடுக்கச் செய்ததே அவன்தான், எனவே. இதில்லாவிட்டால் இன்னொன்றை யோகேந்திரனுக்கு அவனே ஏற்பாடு செய்வான்,

இடையே அவளும் கொஞ்சம் நிம்மதியாக இருக்கலாமே! தினம் தினம் பார்த்துப் பார்த்து அவன் செய்தவற்றை நினைத்து நினைத்து வேதனைப்பட வேண்டாமே!

ஒரு வேளை யோகன் சொன்னது போல நடக்கவும் கூடும்தானே?

ஊன்றிப் பார்த்தபோது. மற்றவர்களும்...மாமனார். மாமியார். ஊர்வசி எல்லோருமே குன்றிக் குறுகி ஆவியாய் நடமாடுவது நன்றாகத் தெரிந்தது,

தலை நிமிர்ந்து பாராமலே அவளுடைய கணவன் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து கிளம்பி ப்ராஜெக்ட்  நடக்கும் இடத்துக்குக் கிளம்பிப் போனான், மூத்த பிள்ளையின் பிரிவு பெற்றோரோடு மற்ற பிள்ளைகளையும் பாதித்தது என்பதையும் மாதங்கியால் உணர முடிந்தது,

ஆனால். அது பற்றி முதலில் இருந்த திருப்தி விரைவிலேயே நீர்த்துப் போயிற்று,               நாத்தனார் சிரிக்கும்போது அவளது கன்னத்தில் அழகாகக் குழி விழும், இப்போது சிரிப்பின் அடையாளமே இல்லாது போயிற்று, முந்தைய நாள் பறித்துப் போட்ட பூ போன்ற தோற்றம்,

ஒரு வகையில். எல்லோருமே அப்படித்தான் தோற்றினார்கள், கொஞ்ச நாட்களிலேயே இந்த ஆவிகள் நடமாட்டம். அவளையும் பாதிக்கலாயிற்று,

ஆக. பழி வாங்குவதும் அப்படி ஒன்றும் பரமசுகம் தருவதில்லை என்று அவளுக்குத் தோன்றியது,

எல்லாவற்றுக்கும் மேலாக அவளுடைய கணவன்! அவனைப் பார்க்கும்போதே மாதங்கி குமுறியது உண்டு, இப்படிச் செய்துவிட்டானே என்று மறுகியிருக்கிறாள், இவனை எப்படிக் குதறுவது யோசித்திருக்கிறாள், முடிந்தபோது மட்டம் தட்டிக் குத்திப் பேசியும் இருக்கிறாள்,

ஆனால் அவன் ஊரில் இல்லாதது.வீடு காலியாக இருப்பது போன்ற உணர்வை எல்லோருக்குமே தந்தது, முக்கியமாக அவளுக்கும்!

அடிக்கடி அவளது வேலையில் அவனது நினைவு குறுக்கிட்டது, மணமான புதிதில் அவனையும்வீட்டையும் மறப்பதற்காகவே அலுவலகத்துக்கு ஓடுவாள், இப்போது இதையும் விட்டு வேறு எங்கே ஓடுவது?

ஒவ்வொரு பொழுது உண்ணும்போதும் “என் பிள்ளைக்குவீட்டுச் சாப்பாடுதான்  பிரியம், ப்ராஜெக்ட் இடத்தில்

நல்ல சாப்பாடு கூடக் கிடைக்காது, பட்டினி கிடந்து என் பிள்ளை என்னமாய் மெலிந்துவிட்டானோ!" என்று புலம்பாமல் தனபாக்கிம் உண்பதே கிடையாது,

அப்போதெல்லாம் மாதங்கி குற்ற உணர்ச்சியால் குறுகிப் போவாள்,

ஆனால் இந்தக் குறுகல் அவளுக்குக் குழப்பமாகவும் இருந்தது,

என்ன இது? தப்பு செய்தவன் யுகேந்திரன்! அவன் கொஞ்சம் சுவை குறைந்த உணவை உண்பதில் என்ன பெரிய இழப்பு? அவள் இங்கே எத்தனை தரம் அப்படி உண்டிருப்பாள்? ஆனாலும். குற்றம் புரிந்த உணர்ச்சி அவளுக்கு எதற்காக வர வேண்டும்?

கூடவே இந்த வெறுமை?

பார்க்கும் போதெல்லாம் அவனால் நேர்ந்த துன்பங்களை எண்ணி எண்ணி அவள் மனம் குமுறும், இப்போது பார்க்க முடியாமல் போனது கூட வருத்தம் தருமா? வருத்தம் என்று சொல்ல முடியாது, அவன் இங்கே இல்லையே இல்லையே என்று அவள் ஒன்றும் ஏங்கி விடவில்லை, ஆனால் எதுவுமே சரியாக இல்லாதது போல ஓர் எரிச்சல்! மனச் சுணக்கம்!

பூங்காவும் வெறிச்சிட்டுக் காணப்பட்டது, மாறுதலுக்காக இடையிடையே பெற்றோர்வீட்டுக்கும் போய் வரலானாள்,

இப்போதுதான் அவளை யாரும். கண்டிப்பதோ. குறை கூறுவதோ இல்லையே! அவளுக்குக் கோபம் வந்துவிடுமோ. புராண காலத்து முனிவர் மாதிரி சபித்துவிடுவாளோ என்று அஞ்சுகிற மதிரி அவளுக்கு வேண்டியதைப் பார்த்துப் பார்த்துச் செய்கிற மாதிரியான நிலையாக அல்லவா இருந்தது!

ஒருநாள் சமையல்காரம்மாவிடம். "என்ன பதார்த்தம் வேண்டும் என்று மருமகளிடம் கேட்டுச் சமையல் பண்ணுங்கள் ," என்று மாமியார் சொல்வதை அவளே கேட்க நேர்ந்தது,

காலையில் நடைப் பயிற்சியாக மாதங்கி தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்த வேளை அது!

இப்படிக் கூட அதிசயம் நடக்குமா?

அவளுக்குத் திருமணமான புதிதில். அவளுடைய தோழி ஒருத்தி

அவளுக்குப் பிடித்தமான பழம் என்று கூடை நிறைய சப்போட்டாப் பழங்களை வாங்கி வந்து கொடுத்துவிட்டுப் போனாள்,

"பிடிக்குமா?" என்று தனபாக்கியம் கேட்டதற்குத் தெரியாத்தனமாக "ஆமாம்," என்று மாதங்கி சொல்லி விட்டாள்,

தபால்காரன். இஸ்திரி போடுகிறவன். பூக்காரி . வேலைக்காரர்கள் அத்தனை பேருக்குமாக அள்ளி அள்ளிக் கொடுத்து. மருமகள் சாப்பிட ஒரு பழம் கூட இல்லாமல் காலி செய்த அதே மாமியார்!

இவர்கள் எல்லோரும் என்ன நினைக்கிறார்கள்? புராண காலத்து முனிவர் மாதிரி மாதங்கி சபித்ததால்தான்வீட்டுப் பெண் ஊர்வசியின் வாழ்வு இப்படித் துன்ப மயமாகிவிட்டது என்று எண்ணுகிறார்களா?

அப்போது கஷ்டமாகத்தான் இருந்தது, பழங்கள் காலியாக ஆக. உள்ளே ரொம்பத் தவிப்பாகத்தான் இருந்தது, எனக்கு வேண்டும் என்று சொல்லத் தைரியமற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாள்,

கடைசியாக ஒரு வக்கிரப் புன்னகையோடு காலிக் கூடையை மாமியார் கவிழ்த்துக் காட்டிவிட்டுப் போனபோது. மனிதர்கள் இப்படிக் கூட இருப்பார்களா என்று அவள் கண் கலங்க நினைத்திருக்கிறாள்,

அவள் பிறந்தவீட்டில் தின்பண்டமோ பழமோ. கடைசிப் பொருளை யாருமே எடுக்க மாட்டார்கள், ரஞ்சனி வந்து அதை நாலாக வெட்டித் தந்த பின்தான் சாப்பிடுவார்கள், அதுவும். யாருக்காவது பரிசாக வந்தது என்றால் அவர்கள்தான் அதைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்!

அப்படி வளர்ந்துவிட்டு. இதெல்லாம் அவளுக்குப் பெரிய வலிதான், ஆனால் இதற்காகவெல்லாம் இன்னொரு பெண்ணின் வாழ்வுவீணாக வேண்டும் என்று அவள் நினைப்பாளா?

அவளும் கூடச் சேர்ந்து கொடுமை செய்தவளாகவே இருந்தாலும்?

ஆனால் இதை யாரிடம் போய் எடுத்துரைப்பது? முன்பு எப்படி எதையும் கண்டு கொள்ளாதவள் போல மனதை மறைத்து ஒதுங்கிப்

போனாளோ. அதே போலவே இப்போதும் நடந்து கொண்டாள்,

ஆனால் நடப்பது நடக்கட்டும் என்று இப்படியே விட்டுவிடுவார்களா?

அம்மாவும் மகளுமாகக் கோயில் குளம் என்று கடவுள் அருளை நாடிப் போன போது. மாதங்கி யோகேந்திரனிடம் ஊர்வசி பற்றி விசாரித்தாள்,

அவளது வாழ்வில் விளையாடியது குடி! ஒரு வகையில் விதி என்றும் சொல்லலாம், இப்போதைய இளை"ர்களைப் போல. அவ்வப்போது ஜாலியாக சும்மா கொஞ்சம் அருந்துவது என்று தொடங்கியதுதான்,

அதை எங்கே நிறுத்துவது என்று தெரியாமலே போய்விட்டது,

பெற்றோர் நிலைமையை முழுதாக அறிந்தபோது. எல்லாமே கைமீறிப் போயிருந்தது, திருமணமானால் சரியாகிப் போய்விடும் என்று நினைத்திருக்கிறார்கள்,

ஆனால் மருமகளாக வந்தவளின் வாழ்வு கெட்டதுதான் மிச்சம்!

“திருமணத்துக்கு முன் அவரைப் பற்றி விசாரித்திருப்பீர்கள் தானே?”

“உங்கள் திருமணத்துக்கு முன்பாக அண்ணனைப் பற்றி மாமாவும் விசாரித்தார்தானே? கிடைக்கும் தகவல்கள் எல்லாம் நூறு சதவீதம் சரியாக இருப்பதில்லை. அண்ணி, தொழிலை நன்கு கவனிக்கிறார். பெண்களோடு பழக்கம் இல்லை என்று தெரிந்துகொண்டோம், இப்போதும் மாப்பிள்ளை வாய் குழறித் தெருவில் விழுந்து கிடக்கிற ரகமில்லை, ஆனால். தேனிலவு அறைக்கே மதுவை வரவழைத்துக் குடித்திருக்கிறார்,

“ஊர்வசிக்குப் பெரிய அதிர்ச்சி, வளர்ந்த முறையில் அவள் நாவடக்கத்தோடு எதையும் கையாண்டது கிடையாது, எனவே நேரடியாக. “என்ன இது? மரியாதையாக அதைத் தூக்கித் தூரப் போடுங்கள்” என்று கத்தியிருக்கிறாள், அவ்வளவுதான். மதுவின் ஆதிக்கத்தில் இருந்த மனிதருக்கு ஆத்திரம் வந்து. என்னையா அதட்டுகிறாய். உனக்கு இதுதான் என் மரியாதை என்று அடித்துவிட்டார்,

“அப்புறம்  .... முதல் கோணல் முற்றும் கோணலாகிவிட்டது, தினமும் குடித்துவிட்டு வந்து அடிப்பான் என்பார்களே, ஊசிக்கும் அதுவே நடந்ததாம், இதை மறைத்து எங்களை ஏமாற்றி விட்டீர்கள் என்று மாமியாரிடமும் சண்டை போட்டிருக்கிறாள், அவர்களும் திருப்பிக் கொண்டார்களாம், அம்மாவிடம் தகறாரா என்று அவ்வப்போது அதற்கும் விழும் போல!

“மனம் வெறுத்துப் போய்க் கிளம்பி வந்துவிட்டாள்,” சிறு அமைதியின் பின்னர். “மேலே நீங்கள் ஒன்றும் செய்யவில்லையா? அதாவது மாப்பிள்ளைவீட்டிற்குப் போய்ப் பேசினீர்கள்தானே?” என்று மாதங்கி வினவினாள்,

“ம், பேசினோம்,” என்றான் அவன் சுரத்தின்றி, “உங்கள் பெண்ணுக்கு மரியாதை கற்றுக் கொடுங்கள். போங்கள்.  திருப்பி அனுப்பினார்கள், அவர்கள் என்னமோ ஓர் உத்தம புத்திரனைப் பெற்று வைத்திருப்பது போல நடந்து கொண்டார்கள்! மகன் குடிப்பது ஒரு தப்பே இல்லாதது போலப் பேசினார்கள், “இந்தக்காலத்தில் இதெல்லாம் ஒரு தப்பா? அப்படி என்ன. எங்கள் பையன் வேறே பொம்பளை கூடவா அலைகிறான்” என்று கேட்டார்களா? அப்பா முகத்தில் ஈயாடவில்லை, அண்ணனைக் குத்திக் காட்டுவதாக எண்ணி விட்டார்கள், இன்னும் இருந்து அசிங்கப்பட வேண்டாம் என்று எங்களைக் கூட்டி வந்துவிட்டார், என்னவோ எல்லாம் பிரச்சினைக்கு மேல் பிரச்சினையாக இருக்கிறது,. நேரம் காலம் சரியில்லை,. கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம் என்றுவிட்டார்,” என்று முடித்தான் யோகேந்திரன்,

ஆக இதுவும் சேர்ந்ததால்தான் தனக்கு இவ்வளவு உபசாரமா என்று மாதங்கி எண்ணினாள்,

ஆனால் பொறுத்திருப்பது பழகிப்போய் அப்படியே இந்தப் பிரிவு நீடித்து விடக் கூடாதே என்றும் கவலை தோன்றியது,

ஆனால் அவளாகப் போய் இதில் தலையிட்டுப் பேசவும் அவ்வளவாகத் தைரியம் இல்லாததால். மற்றவர்களைப் போல அவளும் சும்மாவே இருந்துவிட்டாள், கூடவே. எதையும் முனைந்து செய்யும் உற்சாகமும் வரவில்லை,  எல்லாமே டல்லடித்தது!

போர் தாங்காததோடு. இப்போது தடையும் இல்லாததால்

அம்மாவீட்டுக்கு அவ்வப்போது போய்வந்து இருக்க முடிந்தது, இதனால். அவள் சற்றும் எதிர்பார்க்காத இரண்டு நன்மைகள் விளைந்தன,

அந்த மாதம் மாதங்கியுடைய இரண்டாவது தங்கையின் பிறந்தநாள் வநதது, தங்கை பிறந்த நாளுக்கு உடை வாங்கச் சென்றபோது. தங்கைகள் கூப்பிட்டார்கள் என்று மாதங்கியும் உடன் சென்றாள்,

அவளுக்காக எதிலும் ஆர்வம் இருக்கவில்லை என்றாலும் அவசரமாக வீட்டுக்குப் போய்த்தான் என்ன செய்யப் போகிறோம் என்று தோன்றவே சரிதான் என்று தலையாட்டிவிட்டாள்,

உள்ளூர மனதில் ஒரே உருட்டல், இதோ அதோ என்று யுகேந்திரன் மேற்கு மலைச் சாரல் வேலைக்காகக் கிளம்பிச் சென்று ஒரு மாதம் ஆகிவிட்டது, சாப்பாடு சரியில்லாமல் மெலிந்துவிட்டானா? அவனது ஆரோக்கியம் எப்படி இருக்கிறது? வேலை முடிய எவ்வளவு காலம் ஆகும்?

ஏதாவது செல்ஃபீ எடுத்து . வாட்ஸ்ஆப்பில் தம்பி தங்கைக்கு அனுப்பி இருப்பானா? தானாகக் கேட்பது கஷ்டம், அவர்களாகக் காட்டலாமில்லையா என்று குறையாக எண்ணும்போதே. இந்த எண்ணம் தப்பு என்றும் தோன்றிவிட்டது, வாழ்நாள் முழுதும் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுவிட்டு. அவனது ஃபோட்டோ காட்டவில்லை என்று எப்படி நினைக்கலாம்? காட்டு என்றுதான் எப்படிக் கேட்பது?

“அக்கா!” என்று அவள் காதுக்குள் கத்தினாள் சுந்தரி. பிறந்த நாள்ப் பெண்,

“எஎன்னடி? எதற்குக் காதுக்குள் கத்துகிறாய்?” என்று காதைத் தேய்த்து விட்டபடியே மாதங்கி எரிச்சல் பட்டாள்,

“பின்னே என்ன? அந்தக் கலர் எனக்குப் பொருந்துமா என்று மூன்று தடவை கேட்டாயிற்று, நீயானால் காது கண் எல்லாம் ரிப்பேர் மாதிரி. எங்கோ விழித்துக்கொண்டு நிற்கிறாயே! இதற்குத்தான் கூட வந்தாயாக்கும்!” என்று சினந்தாள் தங்கை,

“ஓ! சாரிடீ! சாரிம்மா, நா...ன்... நான் ...நான் வந்து... அலுவலக வேலையில் ஒரு தப்பு விட்டுவிட்டேனா. அதை மாட்டிக்

கொள்ளாமல் எளப்படிச் சரிப்படுத்துவது என்று அதே யோ…சனையாக இருந்தேனா…” என்று அவள் சமாளிக்க முயற்சிக்கத் தங்கைகள் இருவரும் கேலியாகச் சிரித்தனர்,

“ஐயோ போதும்க்கா, அசடு லிட்டர் கணக்கில் வடிகிறது, இனியாவது அத்தானை அங்கே நிம்மதியாக வேலை செய்ய விட்டுவிட்டு என் உடை விஷயத்துக்கு வா! உன்னை நான் கூப்பிட்டதே. நிறப் பொருத்தம் நன்றாகப் பார்ப்பாயே என்றுதான், சொல்லு. இந்த இரட்டை வண்ணம் எனக்குப் பளிச்சென்று இருக்குமா? அல்லது டல்லடித்துக் காட்டி விடுமா?” என்று கேட்டாள் சின்னத் தங்கை,

பிடிவாதமாக யுகேந்திரன் நினைவை ஒதுக்கிவிட்டு. தங்கை கேட்டதில் மனதைச் செலுத்தி. அவளுக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாள் மாதங்கி,

சின்னவர்கள் இருவரையும் பில்லுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பார்சலை வாங்கி அனுப்பிவிட்டு. ரஞ்சனி மூத்த மகளிடம் பேசினாள்,

“இதோ பார் மாதும்மா. உனக்கு மணமாகி இன்னும் ஒரு வருஷம் கூட ஆகவில்லை,. பிரிவு கஷ்டமாகத்தான் இருக்கும், ஆனால் இப்படி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டே இருந்தால் மற்றவர்களுக்கு எப்படி இருக்கும். சொல்லு, உன்னை உற்சாகப்படுத்தத்தான். சுந்தரியும் மாலாவும் இன்று உன்னை ஷாப்பிங் கூப்பிட்டதே, இங்கேயும் நீ இப்படி இருந்தால் எப்படி? சுந்து பிறந்த நாளுக்கு வரும்போதாவது. கொஞ்சம் சிரித்தாற்போல இரு! என்ன புரிகிறதா?” என்று சிறு அதட்டலாகப் பேசினாள் அன்னை!

மாதங்கிக்குப் பேரதிர்ச்சி!

கணவனுக்கான ஏக்கமா இப்படி இருக்கிறது? அவளை மனைவியாகவே ஏற்றுக் கொள்ளாதவன் அவன்! ஆனால் ……..இந்த மஞ்சள் கயிறு மாஜீக் என்பது நிஜம்தானா?

அப்படியானால் யுகேந்திரனுக்கும் இது போலக் கொஞ்சமேனும் தோன்றியிருக்கும் அல்லவா?

ஆமாம், தோன்றித்தான் இருக்கிறது, மற்றபடி அவள் கேட்டாள்

என்பதற்காக.  அவளது மகிழ்ச்சிக்காக... அவள் கேட்டபடியேவீட்டை விட்டு. அவனுக்குப் பிரியமாக குடும்பத்தை விட்டு வெளியே போயிருக்கிறானே! தம்பியிடம் மன்னிப்புக் கேட்டாலும். மாதங்கியின் விருப்பத்துக்கு மாறு செய்யவில்லையே!

நிச்சயமாக மாற்றமேதான்!

துள்ளிக் குதிக்கலாம் போல உணர்ந்தாள் அவள்,

# அத்தியாயம் -9

தாயாய்ப் புத்தி சொன்னபோதும். மகள் இன்னமும் வாடி விடுவாளோ என்று ரஞ்சனிக்குக் கவலைதான்,

மாறாக மகளின் முகம் தெளியவும் நிம்மதியோடு மேலே பேசினாள், “புரிகிறதாடா? எப்போதுமே மனதில் இருப்பதை எல்லோருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டே இருக்கக் கூடாது. கண்ணு, சந்தோஷம் என்றால் பரவாயில்லை! ஆனால்...” என்று ரஞ்சனி மேலும் புத்திமதி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே. மாலா வந்து தாயைக் கூப்பிட்டாள்,

“அம்மா. கடையில் உள்ள பிஓஎஸ் மிஷின் வேலை செய்யவில்லை, கார்டு தேய்க்க முடியாது, பணமாக உங்களிடம் இருப்பதை எடுங்கள், கொடுத்துவிட்டு வருவோம்! ... “ என்று தாயின் கையைப் பற்றித் தன்னோடு இழுத்துக்கொண்டே போனாள்,

கூடச் செல்ல மாதங்கி காலடி எடுத்து வைத்தபோது. “அக்கா. நீ இங்கேயே சுற்றிப் பார்த்துக் கொண்டிரு, சுந்துவுக்கு வேறு எதுவும் நன்றாக இருக்குமா என்றும் பார், நாங்கள் இதோ வந்துவிடுகிறோம்,” என்று தங்கை சொல்லிவிட அதன்படி அவளும் சுற்றிப் பார்க்கலானாள்,

அப்போதுதான் அவள் ஊர்வசியுடைய மாமியாரைச் சந்திக்க நேர்ந்தது, இவள் வரப் போகிறாள் என்றுதான் புகுந்தவீட்டில் மாதங்கிக்கு முதல் முதலாக ஒரு சிறு உரிமை கிடைத்ததே! அதன் பயனாகவே பிறந்தவீட்டிற்குப் போய்வரவும் முடிந்தது,

ஆனால் இன்றைய நிலையில் இந்த அம்மாள் தன்னோடு முகம் கொடுத்துப் பேசுவாளா என்று மாதங்கி யோசிக்கும்போதே. அப்படிப்பட்ட தயக்கம் எதுவும் இல்லாமல். “என்னம்மா மாதங்கி எப்படி இருக்கிறே?” என்று அவள் அருகில் வந்து சாதாரணமாகப் பேசத் தொடங்கினாள் அந்தப் பெண்மணி பாகீரதி,

பரவாயில்லையே என்று “நன்றாக இருக்கிறோம் ஆன்ட்டி,நீங்கள் சுகமா?” என்று மாதங்கியும் பேசத் தொடங்கிய பிறகுதான். “எதிரிக்கு எதிரி நண்பன்” என்கிற விதமாக அந்தப் பெண்மணி பேசத் தொடங்கியிருப்பது. சின்னவளுக்குப் புரிந்தது,

ஏனெனில் அடுத்த வாக்கியமாகவே. “அவள்…அவள்தான் உன் நாத்தனார். வாள்வாள் என்று எதற்கெடுத்தாலும் கத்துவாளே. அந்த மகராசி எப்படி இருக்கிறாள்?” என்று மருமகளைப் பற்றி விசாரித்தாள்,

யோசித்துவிட்டு. சற்று அசட்டையான குரலில். “ஊர்வசியைக் கேட்கிறீர்களா? அவளை விடுங்கள் ஆன்ட்டி,வீட்டில் கடைசி, ஒரே பெண் என்பது வேறு! ஆனால். அவள் மகாலட்சுமி ஆன்ட்டி! அவள் பிறந்த பிறகுதான் தொழில்சூடு பிடித்துப் பணமாகக் கொட்டியதாம், அதனால் வந்தச் செல்லம் வேறு, நினைத்ததை அப்படியே கொட்டி விடுவாள்! ஆனால் ராசிக்காரி! அவள் இருக்கும் இடத்தில் பணம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டும், இப்போது கூடப் பாருங்கள். அவள் இங்கே வந்ததும் என் மாமனாருக்கு மேற்கு மலைப் பக்கமாக ஒரு பெரிய காண்டிராக்ட் கிடைத்திருக்கிறது, பெரிய தொகை என்பதால். என் கணவரே நேரில் போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்,” என்று ஒரு போடு போட்டு வைத்தாள்,

பலிக்குமோ என்னவோ. ஆனால் தொழில் செய்கிறவர்கள், பணம் என்றால் சற்று இணக்கமாக யோசிப்பார்களோ என்ற எண்ணம் அவளுக்கு, முன்பு காஞ்சிபுரத்துக்குத் துணி வாங்க வந்தபோதே. மாதங்கிக்கு இப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது,

அவள் எண்ணியதே சரியாக அந்தம்மாவும் சற்று யோசித்துவிட்டுப் பேசினாள், “அட போம்மா, ராசி இருந்து என்ன பண்ண? பெரியவர்கள். சின்னவர்கள் என்று மட்டு மரியாதையே இல்லை, கட்டின புருஷனையே மதிக்கத் தெரியவில்லையே! ஒரு சின்னத் தப்பையும் பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கிறாள், அப்புறம் காட்டுக் கத்தல்! வாயால் சொன்னால் கேட்பதே இல்லை!” என்று புகார் சொன்னாள் பாகீரதி,

எது பெரிது? எது சிறிது? மகனின் குடியும். மருமகளுக்கு அடியும் இந்த அம்மணிக்குச் சிறிதாகத் தோன்றுகிறதாக்கும், வாயால் சொன்னால் கேட்பதில்லை என்றால் எதற்கும் அடியா? ஒரு தரம் அடித்ததே எப்படி இருந்தது!

ஆனால். இப்போது இந்த விஷயங்களில் புகுந்து வாதாடுவது தவறு என்று மாதங்கி எண்ணினாள், இந்த அம்மாவுக்குக் கொடுக்க வேண்டிய சேதியே வேறு,

எனவே பாகீரதி அம்மாளை ஒட்டிப் பேசுகிற மாதிரியே தொடங்கினாள், "விடுங்கள் ஆன்ட்டி, நான்தான் சொன்னேனே. அவளுக்கு ரொம்பச் செல்லம் என்று, கட்டுப்பாடு மெல்லத்தான் வரும், ஆனால் நான் உங்களிடம் கேட்க நினைத்ததே வேறு, உங்கள் பையன் உடம்புக்கு ஒன்றும் இல்லாமல் நன்றாக இருக்கிறாரா? பிரச்சினை ஒன்றும் தொடங்கவில்லையே!" என்று கன அக்கறையாக மாதங்கி விசாரித்தாள்,

பாகீரதி அம்மாள் திகைத்து. "அவனுக்கு என்ன? நன்றாகத்தானே இருக்கிறான்? ஏன். அவனுக்கு உடம்பும் சரி கிடையாது என்று அந்தப் பெண் ஊர்வசி ஏதாவது பொய் சொன்னாளா?" என்று ஆத்திரமாகக் கேட்டாள்,

"ஐயோ அப்படி இல்லை பெரி... நீங்கள் எனக்குப் பெரியம்மாதானே. அப்படியே கூப்பிடட்டுமா பெரியம்மா?" என்று மாதங்கி உறவு முறை கொண்டாடவும். கொஞ்சம் இறங்கி வந்து. "கூப்பிடு, ஆனால் என் மகனுக்கு என்ன என்று உன் நாத்தனார் சொன்னாள்?" என்று மறுபடியும் கேட்டாள் அந்தப் பெண்மணி,

"குறையாக அவள் ஏதும் சொல்லவில்லை பெரியம்மா, ஆனால். கண்ட மருத்துவச் செய்தி எல்லாம் படிக்கிறாளா? அளவு தெரியாமல் குடிக்கிறாரே. கல்லீரல் பாதித்து விடுமோ? உடம்பு பலவீனப்பட்டு விடுமோ? அப்புறம் குடல் வெந்து .....................டீவியிலும் மருத்துவ நேரங்களில் என்னென்னவோ சொல்கிறார்களா? அதுதான் ரொம்பப் பயமாக இருக்கிறது என்று ரொம்பக் கலங்குகிறாள், என் பயத்தை அமைதியாக எடுத்துச் சொல்லத் தெரியாமல் கண்டபடிப் பேசி. என்னென்னவோ ஆகிவிட்டது அண்ணி. என்று அழுகிறாள், நீங்களே சொல்லுங்கள் பெரியம்மா. கணவன் என்று ஆகிவிட்டால். அவன் சுகத்தைப் பற்றி மனைவிக்குக் கவலை இருக்கும்தானே? தாய்க்குப் பின் தாரம்தானே? நீங்களும்தான் என்ன பெரியம்மா. அண்ணன் அதிகம் குடிப்பது பற்றி மனதில் கவலைப்படாமலா இருப்பீர்கள் ? குடி மயக்கத்தில் காரை. பைக்கை ஓட்டி ....எத்தனை செய்திகள் படிக்கிறோம். கேட்கிறோம்? அண்ணன்வீடு வந்து சேரும்வரை உங்களுக்கும் பயம்தானே? " என்று நிறுத்திப் பெரியவளின் முகத்தைப் பார்த்தாள்,

எந்தத் தாய்க்கும் சும்மாவே இருக்கக் கூடிய அச்சம்தான்,

அதுவும் குடிகாரப் பிள்ளையைப் பற்றி இந்தப் பயம் படாத தாய் இருக்க முடியுமா?

என்னதான் குடிப்பது குற்றமில்லை என்று கெத்தாக வெளியே பேசினாலும்?

அது போன்று கலங்கிய தருணங்களை எண்ணிப் பார்த்த பாகீரதி மெல்லக் கேட்டாள், “குடி பற்றிப் பேசினால் பையன் ரொம்பக் கோபப் படுவானேம்மா? ஆனால் இப்போது கூடக் குடிக்கிறவர்களேவீட்டுக்குக் கூட்டி வந்து விட வேண்டிய அளவுக்குப் போய்விட்டான்! அவன் அப்பாவுக்கும் எனக்குமே கொஞ்சம் கவலைதான், ஆனால் என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை,” என்று வாயை விட்டாள்,

மாதங்கி எதிர்பார்த்ததும் இதைத்தானே?

“என்ன பெரியம்மா இந்தக் காலத்தில் போய். இதைப் பெரிதாக நினைத்துக் கவலைப்படுகிறீர்கள்? அங்கங்கே எத்தனை மறுவாழ்வு மையங்கள் இருக்கின்றன? அண்ணனுக்குமே உங்களை வருந்த வைக்க ஆசையா? உங்கள் கவலையைப் பற்றி மெல்ல எடுத்துச் சொன்னாலே. தானாகக் “கவுன்சிலிங்”குக்கு வந்து விடப் போகிறார், அதற்குமேல் என்ன. எப்படி என்று அந்த மையங்களிலேயே பார்த்துக் கொள்வார்களே! என்ன ஒன்று. அவர்கள் சொல்வதை நீங்களும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும், எங்கள் சொந்தக்காரப் பையன் ஒருவன். நேரத்துக்குக் குடிக்காவிட்டால் கைகாலே நடுங்கத் தொடங்கிவிடும், அந்த அளவு குடியின் பிடியில் இருந்தான், இப்போது எப்படி ஜம்மென்று குடும்பம் நடத்துகிறான் தெரியுமா? அரபு நாடுகளில் பெரிய வேலையே கிடைத்து லட்சக் கணக்கில் வருமானத்தோடு அங்கே வசிக்கிறான்! மணிமணியாய் இரண்டு பிள்ளைகள்! “ என்று செய்யக் கூடிய விவரம் தெரிவித்துத் தூண்டிலையும் போட்டாள்,

“ம்ம்ம் ...... நீ சொன்னதை சிவா அப்பாவிடம் சொல்லி. நீ அதே மாதிரி ஏதாவது பார்க்க வேண்டும், ஹூம். ஊர்வசியும் அழகான பெண்தான், பேரன் பேத்தி பிறந்தால் அழகாகத்தான் இருப்பார்கள்... “ என்று அந்த அம்மாள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே. ரஞ்சனி மற்ற இரு மகள்களோடு வந்து சேர்ந்தாள்,

ஊர்வசியின் திருமணத்தின்போது பார்த்துப் பேசி

அறிந்தவர்களே என்பதால் புன்னகையோடேயே இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு பாகீரதி அம்மாள் கிளம்பிப் போய்விட. கடைச் சுவரில் தொங்கிய கடிகாரத்தைப் பார்த்துவிட்டு. “என்னம்மா இவ்வளவு நேரம்?” என்று  மாதங்கி தாயிடம் கேட்டாள்,

சின்னப் பெண்கள் இருவரும் கிளுகிளுக்க. “எல்லாம் இந்த இரண்டும் அடித்த கூத்துடி, உங்கள் மூன்று பேருக்கும் ஒரே மாதிரியாக ...அச்சோ. சொல்லக் கூடாது என்றார்கள், எல்லாம் நீ இதுகளிடமே கேட்டுக்கொள், “ என்று ரஞ்சனி சமாளிக்க. மற்ற இருவரும் அவள் மேல் பாய்வது போல நடிக்க ….. சிரித்த முகத்தோடு மூவரும் அந்தக் கடையில் இருந்து கிளம்பினர்,

ஊர்வசியுடைய மாமியாரிடம் மாதங்கி துணிந்து சிலது சொல்லியிருந்தாள், எல்லாம் “வாய்மையிடத்துப் புரை தீர்ந்த நன்மை பயக்குமெனில்” என்று வள்ளுவரின் அனுமதியோடு கூடிய பொய்கள்,

ஏதாவது காரணத்தால் அதன் சாயம் வெளுத்து உள்ளதும் கெட்டுவிடக் கூடாது அல்லவா?

அதனால். அந்தவீட்டில் அவள் இலகுவாகப் பேசக் கூடியவனான மைத்துனன் யோகேந்திரனிடம் இது பற்றிக் கூறி வைத்தாள்,

அவனே தங்கையிடம் பேசி. அவளைத் திருத்த முடிந்தால்? திருத்தியே ஆக வேண்டும்! எப்படியும். ஊர்வசியும் வாய்ப் பேச்சைக் குறைத்தால்தானே. சிவா ஒருவேளை திருந்தி வந்தாலும் அது நிலைக்க முடியும்?

அந்த சிவா திருந்தக் கூடும் என்ற நம்பிக்கையும் இப்போது ஓரளவு மாதங்கிக்கு வந்திருந்தது,

முன் தினம்தான். அவளுடைய உறவினன் சிகிச்சை எடுத்துக்கொண்ட மறுவாழ்வு மையம் பற்றிய விவரங்களைப் பாகீரதி அம்மாள் மாதங்கியிடம் கேட்டிருந்தாள்,

ஆனால் அப்படி ஒரு திருந்திய குடிகாரனுக்கும் அவன் திருத்தப்பட்ட மையத்துக்கும் மாதங்கி எங்கே போவாள்?

அவளுக்கு இரண்டு முறை தள்ளிய சகோதரன் ஒருவனுடைய மைத்துனன் அபுதாபியில் நல்ல வேலையில் இருந்தான், மனதுக்குள்

அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுதான். மறுவாழ்வு மையத்தில் அவன் சிகிச்சை எடுத்துத் திருந்தி வாழ்வதாக. பாகீரதி அம்மாவிடம் அவள் கதை சொன்னதே! அவ்வளவு தூரத்தில் இருப்பதால் உடனடியாகச் சரி பார்க்கவும் முடியாதல்லவா?

உண்மை அப்படி இருக்க. இல்லாத அந்த மறுவாழ்வு மையம் பற்றிய விவரத்தை அவள் எப்படிச் சொல்வாள்?

அது மாதிரி ஒன்றும் தெரியாது என்று உண்மையைச் சொல்லவும் அவளுக்கு மனமில்லை, ஏனெனில். அவர்கள்வீட்டில் இது பற்றி நல்ல விதமான பேச்சு நடந்திருப்பதால்தானே. அந்த அம்மா இது பற்றி விசாரிப்பதே?

இந்த நிலையில் அந்த அடிப்படையே பொய் என்றால் உள்ளதும் கெட்டுப் போகும்!

அந்த மறுவாழ்வு மையம் பற்றிய தகவலை உறவினரிடம் விசாரித்து. ஓரிரு நாட்களில் விவரம் சொல்வதாக அவளிடம் சமாளித்துவிட்டு. யோகேந்திரனிடம் நடந்தது பற்றிக் கூறினாள்,

தங்கை வாழ்வு அவனுக்கல்லவா. அதிக முக்கியம்!

அவன் தன் நட்பு வட்டத்தில் விசாரித்துத் தேவைப்பட்ட விவரம் கேட்டு வந்தான், ரொம்பக் கண்டிப்பான மையம் இது, ஆனால் அதில் சேர்க்கப்பட்டவர்கள் குணமாகாமல் திரும்பியதும் இல்லை என்றான் அவன்,

மையம் பற்றிய விவரத்தை மாதங்கி. பாகீரதிக்குத் தெரிவித்தாள்,

இன்னமும். இந்த விவரம்வீட்டு மாப்பிள்ளை சிவாவுகாகத்தானா? அவன் சிகிச்சை எடுக்க ஒத்துக் கொண்டானா ? எதுவும் மாதங்கிக்குத் தெரியாது, அது பற்றிப் பாகீரதி எதுவும் கூறவுமில்லை,

அந்த மறுவாழ்வு மையத்திலோ. அங்கே சிகிச்சைக்காக வந்து சேருகிறவர்களைப் பற்றிய எந்த விவரமும் யாருக்கும் தருவதில்லை,

நல்லதே நடக்கும் என்று மைத்துனனும் அண்ணிக்காரியும் நம்பி வேண்டிக் கொண்டார்கள்,

இந்த நிலையில் எதை நம்பி ஊர்வசியிடம் நம்பிக்கை ஊட்டும்

விதமாகப் பேசி. அவளைத் திருத்த முயற்சிப்பது?

ஆனால். தன் அழகிலும் பணத்திலும் ஊர்வசி கொண்டிருந்த கர்வம். அதனால் ஏற்பட்டிருந்த தலைக்கனம் எல்லாமே தானாகச் சரிந்து கொண்டிருந்தன,

அவளது அழகும். அவளுடைய தந்தையின் பணமும் எந்த வகையில் அவளது வாழ்க்கைக்கு உதவின?

கணவனின் ஆதரவின்றி நின்ற அண்ணியை அலட்சியப்படுத்தியதற்கு. இப்போது அதே நிலைக்கு வந்து. அவளிடமே பிராயசித்தம் வேண்டி நிற்கிற நிலை ஆகிவிட்டதே!

இப்படித் தனக்குள்ளேயே யோசித்து மறுகிக் கொண்டிருந்தாள் அவள்,

வாய்க்குள் ஒட்டடை பிடித்துவிட்டது என்பார்கள், அது போல கிட்டத்தட்டப் பேசுவதே இல்லை என்று தனியே கிடந்து தனக்குத் தானே மனதுக்குள் வாதப் பிரதிவாதங்கள் செய்து. பெருமளவு சின்ன அண்ணனும் அண்ணியும் விரும்பியது போல ஊர்வசி தானாகவே மாறிக் கொண்டிருந்தாள்,

அவளிடம் சென்று பேச்சுக் கொடுத்த யோகனுக்குத் திருப்திதான்,

இது நிலைக்க வேண்டுமே என்று உள்ளூ”ர வேண்டிக்கொண்டு. மாதங்கியிடம் வந்து விவரம் தெரிவித்தான்,

மகிழ்ச்சியோடு மாதங்கிக்கு மிகுந்த நம்பிக்கையும் உண்டாயிற்று!

இந்த அளவு சீராக உதவிய கடவுள். இதற்கு மேல் கைவிட மாட்டார்!

நாத்தனாரின் வாழ்வு நன்றாகிவிடும் என்கிற நம்பிக்கை அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது! இன்னொரு பக்கம். தன் மனதைப் பற்றியும் புரிந்து கொண்டதால் அதில் ஒரு சந்தோஷம்!

இனிமேல். யுகேந்திரனிடம் மனதை எப்படி. எப்போது தெரிவிப்பது என்று மட்டும்தானே யோசிக்க வேண்டும்? அது சின்ன விஷயம்!

எல்லாமாக ஊக்க பானம் அருந்தியது போல. மாதங்கிக்கு

மனதில் உற்சாகம் பிறந்தது, சுற்றியுள்ள உலகமும் அழகு பெற்றது,

களையிழந்து போயிற்று என்று பூங்காவுக்குச் செல்வதையே நிறுத்தியிருந்தாள், இப்போதைய மனநிலையில் காய்ந்த புல் கூட அழகாக இருக்கும் போலத் தோன்ற. மறுபடியும் பூங்கா முன்னே வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்றாள்,

பனிக்காலம் முடிந்து. பூவும் தளிருமாக மெய்யாகவே பூங்கா தனி அழகு பெற்றுப் பொலிந்தது,

அவளது மகிழ்ச்சியைப் பூங்காவும் கொண்டாடுகிறதோ?

தன்னையறியாமல் கிளுக்கிச் சிரித்தவாறு நடந்தபோது.சூழ்நிலைக்குப் பொருந்தாத கர்ண கடூரமான குரல் ஒன்று மாதங்கியின் காதுகளில் விழுந்து அவளை வருத்தியது!

திகைத்துப் பார்த்தால் அவளேதான். அபீதா!

“எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தோம்! உன் கொள்ளிக் கண்ணை அது உறுத்திவிட்டதா? ஊரை விட்டே விரட்டி விட்டாயே! பாவீ பாவீ!” என்று அவள் முன்னே வந்து நின்று கை நீட்டிப் பேசியவள் அபீதாவேதான்!

# அத்தியாயம் - 10

ஓர் இனிய கனவிலிருந்து வலிக்க அடித்து எழுப்பியது போன்ற உணர்வு மாதங்கிக்கு! இவளை எப்படி மறந்தாள்?

கணவன் மனைவிக்குள் எழுந்த ஏதோ பிரச்சினையில் யுகேந்திரன் அவளைப் பிரிந்து செல்லவில்லையே! அவர்களிடையே உள்ள பிரச்சினையின் மூல காரணம். அடிப்படையே இந்த அபீதா அல்லவா?

இவள் சொல்லைக் கேட்டு அவளை எப்படி அடித்தான்! நியாய அநியாயம். உரிமை மீறல் எதையும் யோசிக்காமல் அவளை அடிக்க வைக்கும் அளவு. யுகேந்திரனிடம் ஆதிக்கம் உள்ளவள்!

சாதாரண மனிதத் தன்மையைக் கூட மறக்கடிக்கக் கூடியவள்!

இவளை மறந்து என்னென்னவோ கற்பனைகள் செய்துவிட்டாளே!

என்ன இருந்தாலும் ஒரு நல்ல நிலையில் இருப்பவன், ஒரு பெண்ணை அடித்துவிட்டோமே என்ற கழிவிரக்கத்தினால் அவளுக்குச் சில வசதிகள் செய்து கொடுத்திருக்கலாம்,

இப்போதோ. தங்கைக்கான பிராயசித்தமாகவேவீட்டை விட்டுப் போயிருக்கிறான்,

எல்லாம் தனக்காகச் செய்ததாக எப்படி நினைத்தாள்? ஆசை கொண்ட மனதின் கற்பனை!

மிக முக்கியமான தடையை மறந்து. சீட்டுக் கட்டு மாளிகைபோல எவ்வளவு பெரிய மனக் கோட்டை கட்டிவிட்டாள்!

இந்த அழகில். தன் மனதைக் கணவனிடம் எந்த மாதிரியாகத் தெரிவிப்பது என்று கூட யோசித்தாளே!

நல்ல வேளை! அதைச் செய்திருக்கவில்லை! அந்த ஓர் அவமானத்திலிருந்து தப்பினாள்!

ஒளியை விடப் பன்மடங்கு விரைந்து பயணம் செய்யக் கூடியது மனம், மாதங்கியின் மனம் வேக வேகமாகச் சில வினாடிகளிலேயே இத்தனையையும் நினைத்து முடிக்க. அந்தச் சில வினாடிளைக் கூடப்

பொறுக்க முடியாமல். அபீதா பொரிந்து கொட்டிவிட்டாள்,

“என்ன? கேட்பது காதில் விழவில்லை? மரம் மாதிரிச் சும்மா நிற்கிறாயே!ஜோடிப் பறவைகள் மாதிரி நாங்கள் குதூகலமாகச் சுற்றித் திரிந்தோம், அது பொறுக்காமல்தானே இந்த வேலை செய்திருக்கிறாய்? யுகேன் அப்பாவை எப்படித்தான் மூளை மழுங்கச் செய்தாயோ. தெரியவில்லையே! முதலிலேயும் அவர் மூலமாய் என் யுகேனைக கட்டாயப்படுத்தி உன் கழுத்தில் தாலியைக் கட்டும்படிச் செய்தாய், என்ன பெரிய தாலி என்று நாங்கள் சந்தோஷமாக சந்தித்தால். மறுபடியும் என்னைப் பிரிந்து. அவனை இந்த ஊரை விட்டே அனுப்பும்படிச் செய்துவிட்டாயே! இந்த வித்தை எங்கேடி படித்தாய்?”

நினைத்ததை எல்லாம் சொல்லி முடித்துவிடும் வேகத்தில் அபீதா படபடவென்று பொரிந்து கொட்டினாள், ஆனால் அவளது பேச்சில் இருந்த தவறுகள் மாதங்கியின் கவனத்தைக் கலைத்தன,

மாமனார் சொல்லி யுகேந்திரன் மேற்கு மலைச்சாரல் வேலைக்குச் சென்றதாகக் கூறுகிறாளே! மனைவி சொல்லிப் போவதாகக் காதலியிடம் கூற விரும்பாமல் யுகேந்திரன் இவளிடம் இப்படிச் சொல்லியிருப்பானோ?

எப்படியோ? நிஜமோ கற்பனையோ? இந்த ஒரு நாள் அவளை மகிழ்ச்சியோடு இருக்க விடக் கூடாதா? இப்படி வந்து அறுக்க வேண்டுமா? ஆனால் சரியாக இந்த நேரத்தில் இவள் இங்கே எங்கே வந்தாள்?

சுற்றிலும் நோக்கும்போதே யாரோ ஒதுங்குவது தெரியச் சட்டெனக் கூர்ந்து நோக்கினாள், அவளேதான்,

அன்று விவாகரத்து பற்றிச் சத்தமாக இதே பார்க்கில் கூறியவள்! அதற்குமுன் துணிக்கடையில் அபீதாவோடு நின்றவள், இன்றும் ...............................................................................

கரெக்ட், இவள் இந்த ஏரியாப் பெண், இங்கே வருகிற வழக்கமும் கூட! அபீதாவுடைய தோழியாக இருக்க வேண்டும், இவள் தகவல் கொடுத்துதான் அபீதா வந்திருக்க வேண்டும்!

இருந்திருந்து. இறுக்கம் தளர மாதங்கி இந்தப் பூங்காவைத் தேர்ந்தெடுத்தாளே!

வேறு எங்கேனும் சென்றிருந்தால். இன்னும் சில நாட்களைத் தன் கனவுகளிலேயே மாதங்கி மகிழ்ச்சியோடு கழித்திருப்பாள்!

என்னதான் அது முட்டாளின் சொர்க்கம் என்றாலும் ....?

மாதங்கியின் கவனம் தன்னிடமிருந்து விலகிவிட்டதை உணர்ந்த அபீதாவுக்கு ஆத்திரம் வந்தது, தன்னை அலட்சியம் செய்வதாக உணர்ந்து முகம் சிவந்தாள்,

முரட்டுத்தனமாக மாதங்கியின் தோளைப் பற்றித் திருப்பி. "என்னை விட்டு யுகேனை விலக்கி அனுப்பிவிட்டோம் என்று திமிரா. உனக்கு? நீ விலக்கினால் நாங்கள் பிரிந்து விடுவோமா? மேற்கு மலைச்சாரல் என்ன அண்டார்டிகாவிலா இருக்கிறது? அங்கேயே போய். யுகேனோடு குடும்பமே நடத்துவேன் பார்! இன்றே போகிறேன்! அந்தத் தகப்பன் கிழவனும் நீயும் அப்போது என்ன செய்கிறீர்கள் என்று பார்க்கலாம்!" என்று சவால் விடுத்தாள்,

என்ன தைரியமாகச் சொல்லுகிறாள்! அவன் அன்பில் அவளுக்கு எவ்வளவு உறுதி இருந்தால். இப்படிச் சொல்ல முடியும்? அத்தோடு. மணமான புதிதில் யுகேந்திரன் கூட. இப்படிச் சேர்ந்து வாழலாம் என்பது போல ஏதோ சொன்னானே!

இங்கே ஊர் உறவு நடுவில் அது கடினம்,

ஆனால் ஏதோ மலைச்சாரல் பகுதியில் இவர்கள் என்ன கூத்தடித்தாலும் யாருக்குத் தெரியப் போகிறது? மாதங்கியே ஒரு நிபந்தனையிட்டு. யுகேந்திரனை இவளிடம் கொண்டு சேர்த்துவிட்டாளா?

மாதங்கியின் மகிழ்ச்சி அடியோடு படுத்துவிட்டது, செத்துவிட்டது என்றே கூறலாம், தன்னை மீறி. "அது தப்பு!" என்றாள் வலுவிழந்த குரலில்,

உரக்கச் சிரித்தாள் அபீதா, "தப்பு சரி பற்றித் தாராளமாக நீயே கவலைப்பட்டுக் கொள், கொஞ்சம் கூட எடுத்துக் கொள்ளாமல் அந்த உரிமையை நான் முழுதாக உனக்கே விட்டுத் தருகிறேன்! இந்த ஐடியா முதலிலேயே வராமல் உன்னிடம் கோபம் கூடப் பட்டேனே! நீ எப்படியோ போ! இனியும் உன்னிடம் பேசிக் கொண்டிருக்க எனக்குப் பொழுதில்லை, உடனடியாக ரொம்ப முக்கியமான வேலை இருக்கிறது!" என்று ஏளனமாக உரைத்துவிட்டுக்கிளம்பினாள்

அபீதா! “டிக்கெட் எடுக்க வேணும்பா. கோவைக்கு ”

கோவையில் இருந்துதான் யுகேந்திரன் நடத்தும் மேற்கு மலைச்சாரல் ப்ராஜெக்டுக்குச் செல்ல வேண்டும்!

மாதங்கி அடியோடு உடைந்து போனாள்,

முகத்தில் எதையும் காட்டாமல் வளைய வருவது மாதக்கணக்கில் பயின்று வைத்தது,

ஆனால் அது புரியாமல். “பெரியவன் அங்கே நன்றாக இருக்கிறானாம், சாப்பாடு கூட இப்போது நன்றாகக் கிடைக்கிறதாம், அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று அவன் அப்பாவிடம் சொன்னானாம்,” என்றாள் மாமியார்,

“நநல்லது,” என்று உதட்டால் மட்டுமாக இளித்து வைத்துவிட்டு. இரவில் சீக்கிரமே அறைக்குள் சென்று முடங்கினாள் மாதங்கி,

ஆனால் தூக்கம் வர மறுத்தது,

சில நாட்களாக இருந்த குதூகலம் அடியோடு மறைந்து. நேர் எதிரான உணர்ச்சியில் அவள் தவித்தாள்,

அவன் நன்றாக இருக்கிறானாமா? இல்லாமல் எப்படி? அபீதாதான் அங்கே வந்து விடுவாளே!

அவளே அந்த இருவரையும் சேர்த்து வைத்த மாதிரி ஒரு பரிதவிப்பு!

அவள் சும்மா இருந்திருந்தால். யுகேந்திரனுக்கும் அபீதாவுக்கும் இப்படி ஒரு தனிமை வாய்த்திராதே! அவர்கள் இருவரையும் தனியே ஓர் அறைக்குள் விட்டுத் தானே பூட்டியது போல என்ன மாதிரி அசட்டுத்தனம்!

படுத்துக் கிடக்கவும் முடியாது போய்விட எழுந்து போய்.வீட்டின் பின்புறத் தோட்டத்தில் இருந்த சிமெண்ட் பெஞ்ச்சில் அமர்ந்தாள்,

இனி என்ன செய்ய முடியும்?

அவள் மனம் மாறிவிட்டதுதான், ஆனால் அவன் அப்படி இல்லையே!

தங்கைக்கான தியாகமாக அவன் சென்றது. இப்போது

அவனது தேனிலவாக முடிந்து விடுமா?

தன்னை மீறி விசும்பினாள் மாதங்கி,

“இப்போது என்ன?”

யோகேந்திரன்தான்! எப்போது வந்தானோ? ஓர் ஆள் வந்தது கூடத் தெரியாமல் தன்னில் மூழ்கி இருந்திருக்கிறாள், உணர்வுகள். மூளை எல்லாம் மரத்துப் போகுமா?

அவளிடம் இருந்து பதில் வராது போகவும். பெஞ்ச்சின் ஓரமாக அமர்ந்து. “புதிதாக இப்போது என்ன பிரச்சினை?” என்று சற்று அழுத்தத்துடன் கேட்டான் அவன்,

பதில் சொல்லியே ஆக வேண்டும் என்கிறான்!

“என்னைப் பார்க்கிற தொல்லை இல்லாதிருப்பதே சுகம் போல! அங்கே நன்றாக இருப்பதாகச் சொன்னாராம்,” என்றாள் பொதுவாக,

“அது அம்மாவுக்காகச் சொன்னது, மற்றபடி உங்களைப் பிரிந்திருப்பது அண்ணனுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்!”

“சும்மா ஏன் பொய் சொல்லுகிறீர்கள் தம்பி?” என்று சலிப்புடன் கேட்டாள் அவள், “பொய்யா? கிடையவே கிடையாது!”

நம்பாத மௌனத்தில் அவள் பேசாதிருந்தாள்,

இவனுக்கு உண்மை தெரியாது, அபீதா எங்கே கிளம்பிப் போய்க்கொண்டு இருக்கிறாள் என்று தெரிந்தால் இப்படிப் பேச மாட்டான்,

ஆனால் அதை எப்படிச் சொல்வது? உன் முட்டாள்த்தனம் என்று யோகனும் சேர்ந்து திட்ட மாட்டானா? அவனையும் கஷ்டப்படுத்திச் செய்தது,

அத்தோடு இவனும்தான் இதில் என்ன செய்ய இயலும்?

சிறு அவகாசம் கொடுத்துவிட்டு அவனாகவே பேசலானான், “என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். அண்ணி, சேப்பங்கிழங்கு ரோஸ்ட். வாழைப்பூ வடை. அவியல் இதெல்லாம் உங்களுக்குப் பிடிக்கும்தானே? உங்கள்வீட்டுக்குப் போய் வரத் தொடங்கியதில் இருந்து இதில் ஏதாவது ஒன்று சமைக்காத நாள் உண்டா? ஊருக்குச் செல்லும்போது கூடச் சமையல்காரம்மாவிடம்

சொல்லிவிட்டுத்தான் போயிருக்கிறார், உங்கள் தங்கைகளிடம் கேட்டு. உங்களுக்குப் பிடித்த கலரில் சேலை வாங்கி பிளவுஸ் தைக்கக் கொடுத்தாரே! " என்றான்,

அதெல்லாம் ஊர்வசி திருமணம் நல்லபடி நடப்பதற்காக, அது தெரியாமல் அடுக்குகிறானே! சொல்வதற்கு அவளுக்குமட்டும் இல்லையா?

"ஆனால். அப்போதே அபீதா எவ்வளவு உரிமையோடு அவரிடம் என் மொபைலைக் கொடுக்கச் சொன்னாள் தெரியுமா?" என்றாள் மாதங்கி,

"எப்போது... " என்று விவரம் கேட்டுவிட்டு. "அண்ணி நீங்கள் புத்திசாலி என்று எண்ணினேனே!" என்றான் மைத்துனன்,

சிறு கோபத்துடன் அவள் கேள்வியாக நோக்கவும். "பின் என்ன அண்ணி? அவளுக்கு மொபைல் இல்லையாம், சரி, அப்படியே வைத்துக் கொள்வோம், ஆனால். எங்கேயோ இருந்து நம்வீட்டுக்கு ஃபோன் பண்ணுகிறவள். நேரே அண்ணனுக்குப் பண்ண மாட்டாளா? அதுவும் அண்ணன் இல்லாத நேரம் பார்த்து இங்கே பண்ணுவாளா? இவ்வளவு யோசிக்கவில்லையே நீங்கள்!" என்று கேட்டான் அவன்

சரிதானே? இதை அவள் எண்ணிப் பார்க்கவிலலையே! ஆனாலும்...

"ஆனால் அவள் சொல் கேட்டு என்னை அடித்தாரே! அதுவும் என்ன மா , திரி? " என்று கேட்டாள் மாதங்கி,

பதில் சொல்ல மாட்டாமல் ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு. "அது பெரிய தப்புதான் அண்ணி, என் ஊகம் என்னவென்றால். அண்ணன் உங்களை உயர்வாக நினைக்கத் தொடங்கி இருந்த சமயத்தில் அப்படி இல்லை என்பது போலச் சிலது நடந்ததால் வந்த ஆத்திரம் அப்படி வெளிப்பட்டது என்பதுதான், அதனால் அண்ணன் அடித்ததை நியாயப்படுத்துகிறேன் என்று எண்ணாதீர்கள், மிகப் பெரிய தப்பு! குற்றமே. சட்டப்படியும் கூட! ஆனால் அதன் பிறகு உங்கள் விருப்பத்துக்கு எதிலாவது இந்த வீட்டில் மறுப்பு நேர்ந்திருக்கிறதா?

"அன்று கூட. அண்ணன் முகத்தைப் பார்க்காமல் இருப்பதுதான்

ஆசை என்றீர்களே. அப்போது அண்ணன் முகத்தைப் பார்த்திருந்தால் இப்படி ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டீர்கள்! ....”

விட்டது தொல்லை, நிம்மதி என்று யுகேந்திரன் நினைக்கவில்லையா? பின்னே?

“எப்படி இருந்தது?” என்று தானாக அவளது வாய் கேட்டது,

“அதிர்ச்சி! வலி! அவர் முகத்தைப் பார்த்து எனக்கே கண் கலங்கிவிட்டது, பிறகும். மேற்கு மலைச்சாரல் வேலையைத் தன் பெயருக்கு மாற்றும்போதும். “அவளது விருப்பம் இதுவென்றால் நான் செய்துதான் தீர வேண்டும் யோகு, மன்னித்துவிடு” என்றாரே. அப்போதும் அவர் முகத்தைப் பார்த்து எனக்கு அழுகைதான் வந்தது! விட்டது தொல்லை என்று எண்ணுகிறவர். இப்படித்தான் வருத்தப்படுவாரா?” என்று எடுத்துக்காட்டுகளோடு வாதாடினான் தம்பி,

கேட்க நன்றாகத்தான் இருந்தது, ஆனால் இதற்கு மேலும் நடந்திருக்கிறதே!

ஊர்வசி திருமணத்துக்கு முன் துணிக்கடையில் அபீதாவின் சைகைப் பேச்சு. பூங்காவில் அவள் தோழியின் விவாகரத்து பற்றிய உரை..., ஊர்வசியின் திருமணத்திற்குப் பிறகு. இரவில் அபீதாவோடு பேசியதைக்கூட அவளே அழைத்திருப்பாள் என்று வைத்துக் கொள்ளலாம், எல்லாமே யுகேந்திரனின் பங்கெடுப்பு இல்லாதது என்றுகூட வைத்துக் கொள்ளலாம்,

மறுநாள் அறையை மாற்றியபோது அண்ணன் அதிர்ந்தான் எனறானே! அதை ஒத்துக்கொண்டு அந்த ஃபோன் பேச்சைக் கூட விட்டுவிடலாம் என்றாலும். இன்று அபீதா பேசியது? எந்தத் தைரியத்தில் அவள். யுகேந்திரன் இருக்கும் சைட்டுக்குக் கிளம்பிப் போகிறாள்?

யுகேந்திரனின் ஒப்புதல். விருப்பம் எல்லாமே இருந்தால்தானே அது முடியும்?

எல்லாவற்றையும் பேசியாயிற்று, இதையும் சொல்வதில் என்ன இருக்கிறது? அதிலும் கூடத் தப்பாக எண்ணாமல் இருப்பதற்கு ஏதாவது இருக்கலாம் அல்லவா?

தயக்கத்துடனேயே அன்று நடந்தவற்றை மாதங்கி. மைத்துனனிடம் விவரித்தாள்,

அவனுக்குமே அதிர்ச்சிதான், ஆனால் வேறு விதமாக,

“அப்பா ஒரு தீர்க்கதரிசி அண்ணி! அங்கங்கே அண்ணனும் அபீதாவும் சேர்ந்து சுற்றுவதைப் பார்த்தாராம், இவள் சரியில்லையே. பையனுக்கு வலை போடுகிற மாதிரி இருக்கிறதே என்றுதான் அண்ணனிடம் கேட்காமலே உங்கள் திருமணத்தைப் பேசி முடித்தாராம், தாலியைக் கட்டும்வரை விடவில்லை, ....”

“தெரியும்! தூக்கிலே தொங்கிவிடுவோம் என்றாராமே!” என்றாள் மாதங்கி வெறுத்த குரலில்,

ஒரு கணம் தயங்கிவிட்டு. மைத்துனன் சமாளித்தான், “எப்படியும் திருமணத்தை நடத்தி. அவள் இந்தவீட்டு மருமகள் ஆவதைத் தடுத்தார் அல்லவா? அண்ணன் ஆசைப்படுகிறார் என்றால் விட்டுவிடுவடுதானே என்றுதான் நான் கூட நினைத்தேன், ஆனால் அவள் எவ்வளவு கேவலமான பெண் என்று நிருபித்து விட்டாள். பாருங்கள்! அதைத்தான் அப்பா தீர்க்கதரிசி என்றேன், “ என்றான் பெருமையாக,

இருக்கலாம், ஆனால் அதனால் இப்போது யாருக்கு என்ன லாபம்? அபீதாதான் சும்மாவே சேர்ந்து வாழப் போய்விட்டாளே! முறையற்ற வாழ்வு!

யுகேந்திரனின் சம்மதம் இல்லாமல் இது சாத்தியம் ஆகாது, அவள் மோசம் என்றால் அவனும்தானே? அங்கே இருவருமாக...,

மேலே நினைக்கக் கூட முடியாமல் அவள் மனதோடு முகமும் கசங்கியது,

“அபீதா அங்கே போய்க்கொண்டு இருக்கிறாள். தம்பி,” என்றாள் வேதனையோடு,

“போனால் மட்டும்? என்ன...அண்ணி நீங்கள்? இது என்ன. ஒருவர் மட்டுமாகத் தீர்மானிக்கிற விஷயமா?”

“அப்படி இல்லை என்பதுதானே என் வேதனையே!”

“உங்களுக்கு அண்ணனைச் சரியாகத் தெரியாது அண்ணி, அபீதா சொல்லுகிற மாதிரி வாழுகிற ஆள் அண்ணன் இல்லை,

சொல்லப் போனால். அப்பாவின் மறுப்புக்குக் காரணமே. அது போல வாழ அண்ணனை அபீதா இழுக்கிறாள் என்பதுதான்! தரம் கெட்ட பெண் என்றார், … “

“ஆனால் உன் அண்ணனே அந்த வாழ்வுக்குத் தயார் என்று என்னிடமே சொன்னாரே!”

“நம்ப முடியவில்லையே! எப்போது. என்ன சொன்னார்? வார்த்தை மாறாமல் சொல்லுங்கள்!” என்று கேட்டான் யோகேந்திரன்,

அவள் சொன்னதும். “நீங்களே பாருங்கள், அவள் தயார் என்றாரே தவிர. தானும் அப்படித்தான் என்றாரா? இல்லையே! போட்டுக் குழப்பாதீர்கள் அண்ணி!” என்றான்,

மாதங்கியால் அமைதியடைய முடியவில்லை, “ஆனால் அவளிடம் காதல் என்று சொன்னார்தானே?” என்று தன் காதலைப் பற்றிக் கணவன் சொன்னது பற்றித் தொண்டையடைக்கக் கூறினாள்,

“அண்ணி. இனக்கவர்ச்சி வேறு, காதல் வேறு, அப்பா இதைக் கண்டுகொண்டுதான் அண்ணனை மீட்டிருக்கிறார், …”

“அதெப்படிச் சொல்ல முடியும்? வேற்று இனம் என்பதால்கூட மாமாவுக்குப் பிடிக்காமல் போய் இப்படிச் செய்திருக்கலாம்! அபீதாவைக் காதலிப்பதாக எவ்வளவு அழுத்தமாகச் சொன்னார் தெரியுமா?” என்றுரைத்து அன்றைய நினைவில் மறுபடியும் கண் கலங்கினாள்,

“முதலில் கண்ணைத் துடையுங்கள் அண்ணி, ஊளுஊளு என்று அழுதால் மூளை மழுங்கும், அண்ணனின் அந்தக் கவர்ச்சிக் காதல் வலுவற்றது என்பது உங்களுக்குப் புரியவே புரியாது,”

கண்களைத் துடைத்துவிட்டு “இப்போதும் புரியவில்லை,” என்றாள் அவள் சற்று எரிச்சலாக,

“கண்ணைத் தடைத்தால் போதுமா? மூளையைத் தட்டிச் சற்று யோசியுங்கள் , அப்பாவும் அம்மாவும் தூக்கிலே தொங்கிவிடுவேன் என்று மிரட்டியதாலேயே உங்களை மணந்ததாக அண்ணன் சொன்னார் என்றீர்களே! அபீதாவிடம் அவர் உண்மையான காதல் கொண்டிருந்தால் அவர் என்ன செய்திருப்பார்?” என்று வினவினான் இளையவன்,

“எஎன்ன செய்திருப்பார்?” என்று குழப்பத்துடன் கேட்டாள் மாதங்கி,

“ஆமாம். அதையும் என்னையே கேளுங்கள்! அப்பா மிரட்டிய அதே வினாடியில். அபீதாவை மணக்க முடியாவிட்டால். இன்னொரு கயிற்றில் தானும் தொங்கப் போவதாகச் சொல்லியிருக்க மாட்டாரா? அவரது காதலுக்கு அந்தத் திடம் இருக்கவில்லையே! கடடாயம் நடக்குமா இல்லையா என்று நிச்சயமாகத் தெரியாத குறுக்கு வழியைத்தானே தேடிப் போனார்?”

“ஓ ஓஹோ!” என்றவளின் முகம் பூவாய் மலர்ந்தது, “தம்பி. நீங்கள் சொல்வதுதான் சரி! அதே மாதிரிதான் எல்லாம் நடந்திருக்க வேண்டும்! என்னென்னவோ நினைத்து எவ்வளவு கவலைப்பட்டுவிட்டேன்! அதை விடவும் மனம் மாறி இருந்தவரிடம். வாழ்நாள் முழுதும் பாராதே என்று சொல்லி மனதில் அடித்துவிட்டேனே! எவ்வளவு வலித்திருக்கும்!” என்ற உருகினாள்,

“இப்போது என்ன செய்வது தம்பி? இதையெல்லாம் எங்கேயோ இருந்துகொண்டு பேச முடியாது, அதனால் அவர் வந்ததும் .............”

“வந்ததுமா? உங்கள் நிபந்தனையை மீறி எப்படி வருவார்?”

“ஐயோ! பின்னே என்ன செய்வது? “ “அதையும் என்னிடமே

கேட்பீர்களா?” என்று கேட்டவனின் குரலில் நகை இருந்தது, “அண்ணி. அண்ணனை இங்கிருந்து விரட்டியது நீங்கள், வரவழைப்பதையும் நீங்கள்தானே செய்ய வேண்டும்?”

“நான்...நான்...” என்று தடுமாறினாள் அவள்,

“மேற்கு மலைச் சாரல் ரொம்ப அழகாக இருக்கும்!” என்று மீண்டும் குரலால் நகைத்தான் சின்னவன்,

பொருள் புரிந்தவளுக்கு முகம் சிவந்தது, கூடவே உள்ளமும் துள்ளியது,

“அப்படியானால் நானே போகட்டுமா. தம்பி?” என்று ஆர்வத்துடன் வினவினாள், இதற்கு யோகேந்திரனின் சிரிப்புதான் பதிலாக இருந்தது,

ஆனால் கூடவே வேலை நடக்கும் இடத்துக்கு எப்படிப் போவது

என்று வழியும் தெரிவித்தான், முயற்சி முழுவதுமாக அவளதாகவே இருக்கும்படியான வழி!

சென்றறியாத இடம், முன் பின் பழக்கமற்ற வழி, எதையும் பொருட்படுத்தாமல் யுகேந்திரன் தங்கியிருக்கும் இடத்தை மாதங்கி அடையும்போது இரவு தொடங்கிவிட்டது,

எப்படியோ? கணவனிடம் வந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியுடன் கதவைத் தட்ட அவள் கையை உயர்த்தினாள். "போங்கள் யுகேன்!" என்று அபீதா கொஞ்சும் குரல் வெளியே தெளிவாகக் கேட்டது!

# அத்தியாயம் -11

உயர்த்தி கை அப்படியே நிற்க எவ்வளவு நேரம் மாதங்கி சிலையாக நின்றாளோ அவளுக்கே தெரியாது,

மனம் மட்டும் ஜெட் வேகத்தில் ஏதேதோ எண்ணித் தவித்தது,

அன்றே கணவனிடம் சென்றுவிட வேண்டும் என்ற ஆவலில் எப்படி ஓடி வந்தாள்!

யோகேந்திரன் சொன்னான்தான், ஆனால் அனுப்பிசகாமல் அதேபடி விமானத்தில் கோவை சென்று அங்கிருந்து நம்பகமான நிறுவனத்தில் டாக்சி பிடித்து உணவுக்குக்குக் கூட நிறுத்தாமல் வந்தாளே!

மாமனாரிடம் கேட்டால் தடுப்பாரோ. தள்ளிப் போடுவாரோ என்று அவரிடம் விவரம் தெரிவிக்கும் பொறுப்பை மைத்துனனிடம் கொடுத்துவிட்டு.வீட்டின் எல்லா விதிகளையும் மீறி இங்கே வந்தால். அவளுக்கு முன்பாகவே இங்கே அந்த அபீதா வந்து உட்கார்ந்திருக்கிறாளே!

யுகேந்திரனோடு குடும்பம் நடத்தப் போகிறேன் என்று அவளிடமே சவால் விட்ட அதே அபீதா!

உள்ளே ஏதோ சத்தம் கேட்டது, “என்னை விடுங்கள்… “ என்பது போல! அபீதாதான்!

மனம் சுருண்டுவிட. மாதங்கியின் உடல் தானாகத் திரும்பி நடந்தது,

அபீதாவின் வருகை அவளுக்குத் தெரிந்ததுதான், அவளிடம் அறிவித்துத் விட்டுத்தானே கிளம்பினாள்!

ஆனால் மாதங்கி எதிர்பாராதது. இந்த இரவு நேரத்தில் அவள் இங்கே இருப்பது,

பகலிலேயே அவள் வந்திருப்பாள்,. அவளது எண்ணம் தவறு,. தான் அப்படிப்பட்ட ஆள் அல்ல என்று யுகேந்திரன் அவளைத் திருப்பி அனுப்பியிருப்பான் என்று நினைத்தாள்,

யோகேந்திரன் சொல்லச் சொல்ல எல்லாவற்றையும் எப்படி நம்பினாள்! கடைசியில் இப்படி ஓர் இடியும் அவளுக்குத்

தேவைப்பட்டிருக்கிறது,

யுகேந்திரனின் குடிலுக்கு வழி சொன்ன அந்தக் குடியிருப்பின் காவலாள் கூட வழியோடு இன்னும் ஏதோ சொன்ன மாதிரிதான் இருந்தது,  அவள்தான் இருந்த பரபரப்பில் அதை நின்று கவனியாமல் விரைந்து நடந்துவிட்டாள்,

அபீதா இருப்பதைத்தான் சொல்லியிருப்பான், இப்போது அவனிடமே திரும்பிப் போக ஏதாவது வண்டி வசதி கேட்க வேண்டும்,

இப்படி ஆகக் கூடும் என்கிற சந்தேகமே இல்லாமல். அவசரமாக டாக்சியைக் கூட அனுப்பி விட்டாளே!

இயந்திரம் போல நடந்து கொண்டிருந்த மாதங்கி பெருமுயற்சி செய்து சுற்றுப்புறத்தை நினைவுக்குக் கொணர்ந்தாள், திரும்பும் வழி தவறிவிடக் கூடாதில்லையா?

மணிக்கணக்கில் நடந்து ஓய்ந்த மாதிரி இருந்தும் சுமார் நூறு அடிக்கும் குறைவாகவே நடந்திருந்தாள், காவலாள் அடையாளம் சொன்ன மரம் இதுதான், அதிலிருந்து ஐம்பது அறுபது அடியில் “முதலாளியின் குடில்” என்றானே!

சோர்வுடன் மரத்தைப் பற்றியவாறு ஏக்கத்துடன் திரும்பிப் பார்த்தவளுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது,

குடிலின் கதவு திறந்து. யுகேந்திரன் அபீதாவை வெளியே இழுத்து வந்து கொண்டிருந்தான்!

அப்போதும். “என்னை விடுங்கள் யுகேன், உங்களை விட்டு நான் போக மாட்டேன், போகவே மாட்டேன், இந்த இரவில் நான் எங்கே போவேன்?” என்று வர மறுத்து அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டிருந்தாள் அவள்!

இரவின் இருளில். அடர்ந்த அந்த மரத்தடியில் மாதங்கி நிற்பது கண்ணில் படவில்லையோ? அல்லது. அவர்களுக்கிடையே  நடந்த போராட்டத்தின் வேகத்தில் வேறெதையும் கவனிக்கத்தான் இல்லையோ?

விரிந்த விழிகளுடன் அவள் நிற்பதை மற்ற இருவருமே அறியவில்லை,

யுகேந்திரனின் குடிலுக்குச் சில படிகள் ஏறிச் செல்லவேண்டும்,

அந்தப்படிகள் தாண்டிக் கீழே அபீதாவை இழுத்து வந்து. ஒரு தள்ளுத் தள்ளி விலக்கி விட்டுவிட்டு. அவன் உறுமினான்,

“மரியாதையாக இத்துடன் போய்விடு, இன்னொரு தடவை இங்கே வந்தாய் என்றால். காவலாளைக் கூப்பிட்டு. உன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொல்லுவேன்!” என்றவன் மடமடவென்று படியேறிப் போய்க் கதவையும் தட்டென்று சாத்தித் தாளிட்டான்!

அப்படியென்றால்? இதற்கு என்ன அர்த்தம்?

தம்பி சொன்னதுதான் சரியா? தன் சந்தேகம்தான் தவறா? தவறா என்ன? தவறேதான்! இப்போது ....

மாதங்கி திகைத்து நிற்கும்போதே. வேறு வழியின்றிக் கோபத்துடன் வந்து கொண்டிருந்த அபீதாவும் மாதங்கியைப் பார்த்துவிட்டாள்,

அருகில் வந்து “ஓ. நீயேதானா? எல்லாம் உன்னால்தானா? சே! என்னை எவ்வளவு அன்பாக அணைக்கப் போனார்! திடீரென்று மாறிவிட்டாரே என்று யோசித்தேன், இப்போதுதான் புரிகிறது, ஜன்னல் வழியே உன்னைப் பார்த்ததும் உடனே மாற்றிப் பேசியிருக்கிறார்! அவர் அப்பாவிடம் நீ வத்தி வைத்து விடுவாயோ என்று யுகேனுக்குப் பயம்! அதனால் என்ன? நான் வாரக் கடைசியில் மறுபடி இங்கே வந்து கொள்கிறேன், இடையிலே மூன்று நாட்கள்! எங்கள் பிரிவு அவ்வளவுதானே?” என்று நிறுத்தாமல் பேசிக்கொண்டே போனாள் அபீதா,

மீண்டும் மாதங்கி திகைத்தாள், அவள் கண்ணால் பார்த்ததையே அபீதா நாடகம் என்கிறாளே! யுகேந்திரன் அப்படி மாற்றிப் பேசக் கூடியவனா? கிடையாது,

மாதங்கி சற்றே குழப்பமுறும்போதே. அபீதா ஒரு சிறு பிழை செய்தாள்,

ரொம்ப நட்பாக மாதங்கியின் கையைப்பற்றி. “வாயேன் மாதங்கி. நாம் சேர்ந்து பேசிக்கொண்டே போவோம்! திடீரென்று உன்னைப் பார்த்ததிலேயே யுகேனுக்கு மூடு கெட்டுவிட்டது, இதற்கு மேல் அவரைப் பார்க்கப் போனால் உன்னை ரொம்பவே திட்டி விரட்டுவார் என்னையே எப்படி விரட்டினார் பார்! அங்கே போய்த்

திட்டு வாங்குவதை விட நாம் இருவரும் ஜாலியாகச் சேர்ந்து பேசிக்கொண்டே போகலாம் ," என்று தேன் குரலில் குழைந்தாள்,

இவள். பார்க்கும் போதெல்லாம் குத்திக் குதறுகிறவள்! தீயாய்க் காந்தியவள்! இப்போது ஜாலியாகப் பேசுவதாமா? அவளை ஒரு பொருட்டாகவே நினைத்ததில்லையே, இப்போது கையை வேறு பிடித்துக்கொண்டு ..........................................................................

இவள். மாதங்கி யுகேந்திரனைச் சந்திக்காமல் தடுக்க முயற்சி செய்கிறாள்! சட்டென அருவருப்பாய் உணர்ந்து. கையை விடுவித்துக் கொண்டாள்,

ஏதோ அரவம் கேட்டுத் திரும்பினால். வாயிலில் நின்ற காவலாள்,

இருவரையும் குழப்பத்துடன் மாறி மாறி நோக்கி. "ஒரு அம்மா போவறாங்க, ஏதாவது வண்டி ஏற்பாடு பண்ணிக் கொடுன்னு சார் சொன்னாங்க, யாராச்சும் வந்தீங்கன்னாக்க. கம்பேனி ஜீப்பிலே கோயமுத்தூருலே விடச் சொல்லுறேன்," என்றான்,

இன்னும் என்ன குழப்பம்? யுகேந்திரன் அறிந்தது ஒருத்தியைத்தானே?

மனம் தெளிவுற. "இதோ இந்த அம்மாதான் வாட்ச்மேன், கூட்டிப் போங்கள்," என்றாள் திடமான குரலில்,

வெறுப்புடன் நோக்கிவிட்டுச் சட்டெனத் திரும்பி நடந்தாள் அபீதா, அவள் கண் பார்வையை விட்டு அகன்றதும். மாதங்கி குடிலை நோக்கி நடந்தாள்,

எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டுவீடு சேரும் உணர்வு ஏற்பட்டது,

நிதானமாகப் படியேறிச் சென்று கதவைத் தட்டினாள்,

கதவு திறக்கப்பட்ட விதத்தில் ஆத்திரம் தெரிந்தது,

"உன்னிடம் என்ன சொன்னேன்? காவலாளை விட்டு அடித்து விரட் ...............................நீயா?!" என்று பிரமித்தான் யுகேந்திரன்,

சின்ன மூச்சு விட்டு அவள் முறுவலிக்க. "எப்படி வந்தாய்? சொல்லியிருந்தால் கோவைக்கே வந்து கூட்டி வந்திருப்பேனே!"

என்றான் அவன்,

“அது ....அபீதா ஓர் அதிர்ச்சி வைத்தியம் செய்தாள், இங்கே வந்து குடும்பம் நடத்தப் போவதாகச் சொன்னாள் ”

“ச்சு! அப்பா சொன்னது போலத் தரம் கெட்ட பெண்...” “அது

தொடக்கமே தவிர. நான் அவளுக்காக மட்டுமாய் வரவில்லை , “

“பொறு, முதலில் உள்ளே வந்து உட்கார், இவ்வளவு தூரம் வந்தது களைப்பாக இருக்கும்,” என்று அவளுக்கு வழி விட்டு முன்னே சென்றான்,

ஒரு புறமாகச் சின்னதாய் இரண்டு சோஃபாக்கள் எதிர் எதிராகக் கிடந்தன, இன்னொரு பக்கம் ஒரு சாதாரண நாடாக் கட்டில், ஒரு கதவின் அந்தப் பக்கம் குட்டியாய் சமையல் அறை, கண்ணில் பட்ட இன்னொரு கதவு குளியல் அறையாக இருக்கக் கூடும், குடில் என்பது சரிதான்,

அவளிடம் இருந்து கிட்பாகை வாங்கி வைத்துவிட்டு சோஃபாவைக் காட்டி உட்காரச் சொல்லிவிட்டு. சமையல் அறைக்குள் சென்று தண்ணீர் பாட்டிலுடன் திரும்பி வந்தான்,

தண்ணீரை அவளிடம் கொடுத்துக் குடிக்கச் சொல்லிவிட்டு. அவள் குடித்த பின்னும் அவளையே பார்த்தான்,

“எஎன்ன?”

அருகில் வந்து. “உன் கையைக் கொடு,” என்றான்,

அவளது நீட்டிய கையைப் பிடித்துக்கொண்டு பேசாமல் நின்றான்,

மறுபடியும் புரியாமல் “என்ன?” என்றவளிடம் “வெறுப்பாக இருக்கிறதா?” என்று வினவினான்,

வியந்து நோக்கி “இல்லையே!” என்று அவள் கூறவும். பிடித்த கையை விடாமலே எதிர் சோஃபாவை அருகில் இழுத்துப் போட்டு அமர்ந்தான்,

“உன்னிடம் நிறையப் பேச வேண்டும் மாதங்கி, அங்கேவீட்டில் முடியவே இல்லை, செய்த பிழைக்கு உன்னிடம் மன்னிப்புக் கேட்கக்

கூட முடியவில்லை, அன்று அடித்ததை மன்னிக்கவே மாட்டாயோ என்று .... அதை நியாயப்படுத்த முடியாது, ஆனால் அன்றிருந்த மனநிலையில் யோசியாமல் செய்த தப்பு அது,

“அப்போது உன்னைப் பற்றிய எண்ணம் என்னை ரொம்பவும் உறுத்தத் தொடங்கி இருந்தது, பார்வையால் கூட அழைக்காமல் ...... அத்தனை காலம் என் அறையில் இருந்தபின் உனக்கு இன்னொரு வாழ்வு எப்படி அமையும்? அதையும் எண்ணிப் பாராமல் பெற்றோர் தங்கைகளுக்காகத் தவம் இருக்கிறாயே என்று மனதில் அடிக்கடி தோன்றும்,

“அம்மா. ஊர்வசி...அப்பா கூட மோசமாகவே நடந்தார், முக்கியமாக உன் அம்மாவிடம் பேசியது, அவர்கள் வந்து போய் இருந்தால் நம் வாழ்க்கை பற்றிப் பரவிவிடும் என்று எண்ணினாராம், உன்னோடு நல்லபடியாக வாழுமாறு எனக்குப்புத்தி சொன்னபோது கூறினார்,

“ஆனால். எதற்காகவும் விட்டுத் தொலைத்துவிட்டு நீவீட்டில் இருந்து போய் விடவில்லை! இப்படியெல்லாம் உயர்வாக நினைக்கும்போது...என்ன?” என்று அவள் ஏதோ பேச வாயெடுக்கவும் தன் பேச்சை நிறுத்தி வினவினான்,

“உயர்வாக நினைத்தேன் என்கிறீர்கள், ஆனால் மனம் பொறுக்காமல் உங்களிடம் எதையாவது சொல்ல வந்தால் அவ்வளவு கடுமையாக...மனிதத்தன்மையே இல்லாத மாதிரி பதில் சொன்னீர்களே!” என்று குறைப்பட்டாள் மாதங்கி,

“நீ கூறியது போல “மனிதத்தன்மையே இல்லாத மாதிரி” தான், மனிதத்தன்மை இல்லாததால் அல்ல, பொறுக்க மாட்டாமல்தானே என்னிடம் வந்து நின்றாய்? இன்னமும் பொறுக்க மாட்டாதபடி பேசினால். உன்வீட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட மாட்டாயா என்று எண்ணிப் பேசியது, அங்கே உனக்கு அன்பான சுற்றம் இருப்பது எனக்கும் தெரியும், முதலில் நாலு நாள் வருத்தப்பட்டாலும் பிறகு சேர்ந்து தேறி விடுவீர்கள் என்று எண்ணினேன், ஆனால் அப்போதும் உன் தவம் கலையவில்லை,

“அப்படி உன்னை உள்ளூர உயர்வாக மதித்துக் கொண்டிருந்தபோது. நீ ஊர் சுற்றுகிறாய்...ஊர் மேய்கிறாய் என்று குற்றச்சாட்டு வரவும் ஆத்திரம் வந்தது, உன் சலிப்பு இப்படிப்

போகிறதோ. தப்பும்மா என்று புத்தி சொல்லலாமா என்று நினைத்தேன், ஆனால் நீ யாரோ என்று பேசிவிட்டு எப்படி புத்தி சொல்வது?

“பார்க்கில் ஆண்களோடு பேசிச் சிரிக்கிறாய் என்று தற்செயலாக அந்தப் பக்கம் வந்தபோது நானே பார்த்தேன், ஆனால். பிறகு யோசித்தபோது அது தற்செயலாக நடக்கவில்லை,. அபீதா வேண்டும் என்றே அந்தப் பக்கம் ஏதோ வேலை என்று என்னைக் கூட்டி வந்து காட்டியிருக்கிறாள் என்று புரிந்தது, ஆனால் அந்த யோசனை வந்தது ரொம்ப நாளைக்குப் பிறகே! ஊசி திருமணத்திற்கும் பிறகே,

“ஆனால் அன்று ஏற்பட்ட ஆத்திரம், வெறி! உங்கள் வீட்டில் இருந்து கொண்டு இப்படி நடந்தால் நீங்கள் வழிக்கு வந்துவிடுவீர்கள்,. அவளோடு வாழுவீர்கள் என்று நினைக்கிறாள், ஆனால் தன் நோக்கம் ஜெயிப்பதற்காக உங்கள் குடும்ப மானத்தை ஏலம் விடுகிறாளே என்றாளா?

“கூடவே எங்கோ அலைந்துவிட்டுத் தாமதமாகவீட்டுக்கு வருவதாக ஊர்வசி. அம்மாவும் உன்னைப் பற்றி ஒரே குறை! ஏற்றாற்போல உன் அலுவலக நண்பரோடு... ஓர் ஆணோடு நீவீட்டுக்கு வந்தாய், அப்போது அம்மா. தங்கை சொன்னதும் சேர எல்லாமாக ஒரேயடியாக அறிவிழந்து போனேன் மாதங்கி, தயவு பண்ணி அதை உன்னால் மன்னிக்க முடியுமா?” என்று முதல் முறையாக அவளிடம் மன்னிப்புக் கேட்டான் அவளுடைய கணவன்!

கிடைக்கும் முதல் வாய்ப்பில் அவளிடம் மன்னிப்புக் கேட்பதாக அவன் வாய்ப்புத் தேடி இருந்தது. அப்போது அவளுக்குப் புரிந்தது,

எனவே. “நீங்கள் அடித்தது தப்புதான், ஆனால் உங்கள் காரணங்களைக் கேட்டபிறகு. ரொம்பப் பெரிய தப்பாகத் தெரியவில்லை,” என்றாள் மாதங்கி மெதுவாக,

யோகேந்திரன் வந்து பேசியபோது. கணவனும் வெளியே வந்து நின்றது நினைவு வர. “ஆனால் சுனாமி மாதிரிப் பொங்கிய அந்த ஆத்திரம் உடனே எப்படி மறைந்தது? தம்பியிடம் நான் கேட்டதற்கு. நீங்கள் அப்போதே ஒத்துக் கொண்டீர்களே!” என்று வினவினாள் அவள்,

“என் அவமானக் குன்றலின் தொடக்கம் அதுதான், யோகன் உன்னை உள்ளே அழைத்து வர உன்னிடம் வந்தானே. அப்போதுவீட்டு டெலிஃபோன் ஒலித்தது, உன்னைக் கூட்டி வந்துவீட்டில் விட்ட அந்த அலுவலக நண்பர்தான், நீ மொபைலை எடுக்கவில்லை என்றதும் பயந்துவீட்டு எண்ணுக்குப் பண்ணினாராம்,வீட்டுக்குள் நீ செல்லும்வரை நின்று பார்க்கவில்லை என்று. சாப்பாடு முடிந்து இரவில் சல்லாபமாக இருவரும் பேசுகையில் தெரிந்ததும் அவர் மனைவி. அந்த நேரத்திலும் நீ பத்திரமாக இருக்கிறாயா என்று உறுதிப்படுத்திக் கொண்டே ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாளாம், அவரும். இந்த நேரத்தில் என்ன ஃபோன் என்று நாம் திட்டுவோமோ என்பதெல்லாம் யோசியாமல். மனைவி சொல்படி ஃபோன் செய்திருக்கிறார், மனைவிக்காக அவர் எப்படி நடந்துகொள்கிறார்! நானானால் மாட்டை அடிப்பது போல என்ன பண்ணிவிட்டேன் என்று குற்ற உணர்ச்சி பெரிதாக மனதில் எழுந்தது அப்போதுதான்,

“கொண்டுவந்து விட்டவர் பற்றி நீ சொன்னதும் சத்தியமே! என்னதான் உன்னிடம் குறை காண முயற்சித்தபோதும். நீ பொய் சொல்லிக் கேட்டது இல்லை, அப்படியானால் நான் எவ்வளவு பாவம் பண்ணிவிட்டேன்!

“ஆனால் இவ்வளவு பெரிய தப்பைச் செய்துவிட்டு. என்னவென்று சமாதானம் செய்வது? அதுவும் நம் வாழ்க்கை முறை இருந்த விதத்தில் உன்னை நெருங்கவே

முடியவில்லை! ஆனால் ஒன்று! அதன் பிறகு. அபீதாவை நானாகப் போய் சந்தித்ததில்லை, அவள் விடாமல் முயன்றபோதும். நிலைமை மாறுவதற்கில்லை, மனதை மாற்றிக்கொள் என்றுதான் சொன்னேன், ஆனால் ஏனோ என் மேல் உன் வெறுப்பு மட்டும் கூடிக்கொண்டே போயிற்று, அதுவும் ஊசி திருமணத்துக்குப் பிறகு பார்க்கவே வெறுப்பாக இருப்பது போல மறுபடியும் தம்பி அறைக்குப் போனாய்…, “

மாதங்கி காரணத்தைச் சொன்னதும். உடனேயே அதற்கான விளக்கம் கொடுத்தான் அவன், “அன்று இரவில் அவள்தான் கூப்பிட்டாள், கேட்டாளே என்று அவளைச் சந்தித்தபோதும். பிரிவை ஏற்கப் பழகு என்றுதான் கூறினேன், ஆனால். மூன்று ஆண்டுகள் நம்பிக்கையோடு காத்திருந்தவள், அவளிடம் ரொம்பக் கடுமையாகப்

பேசவும் சங்கடமாக இருந்தது, இரண்டு பெண்களுக்கு அநியாயம் செய்துவிட்டேன் என்று அது வேறு வேதனை, ஆனால் நான் சற்று அமைதியாகப் பேசியதை அவள் தவறாக ...அவளிடம் இன்னமும் அன்பு இருப்பதாக எண்ணிக் கொள்ளக் கூடும் என்று எனக்குத் தெரியாது, இன்று இரவு நேரத்தில் இங்கேயே வந்து நின்ற பிறகுதான் அவளிடம் பேச வேண்டிய விதமே வேறு என்று புரிந்தது,

“வீட்டில். புகுந்தவீட்டில் இருந்து ஊர்வசி திரும்பி வந்த அன்று சொன்னாய் பார்! பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை என்று, அன்று என் மனமே உடைந்துவிட்டது,” என்று அப்போதும் மிகுந்த வருத்தத்துடன் கூறினான் அவன்,

“நீங்கள் அபீதாவை விட்டு விலகியது எனக்குத் தெரியாது, ஆனால் அவள் உங்களை விடுவதாக இல்லை, நானாக விலகி விட வேண்டும் என்று ஏதாவது டார்ச்சர் கொடுத்துக்கொண்டேதான் இருந்தாள், ஆனால் எல்லாம் அவள் வேலைதான்என்று தம்பி சொன்னார், அவர் எடுத்துச் சொன்னபோது எனக்கும் சரியாகவே தோன்றிவிட்டது, “ என்றாள் மாதங்கி,

அவளது விரல்களை மெல்ல வருடியபடி. “ஊர்வசி விஷயமாக உன் முயற்சியைச் சொன்னான், எனக்குத் தெரியாத விஷயம் என்று நினைத்து உன் நல்ல குணம் பற்றி எடுத்துச் சொல்வதாக அவன் எண்ணம், பாவம், அவனைத்தான் அதிகம் வருத்தும்படி ஆகிவிட்டது, இந்த வேலையைத் தானே எடுத்துச் செய்ய ரொம்பவும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான், அதைக் கெடுத்துவிட்டேன்!” என்று வருந்தினான் யுகேந்திரன்,

“ஏன்? இனி அதை மாற்ற முடியாதா?” என்று விசாரித்தாள் மாதங்கி,

“எப்படி மாற்றச் சொல்கிறாய்?”

“இவ்வளவு நாட்களில் தொடக்க வேலைகள்தானே முடிந்திருக்கும்? மீதியை அவரிடம் கொடுத்துவிட்டு நீங்கள் அங்கே வந்துவிட்டலாமே!” என்று வழி கண்டுபிடித்தாள் மனைவி,

“வந்துவிடலாம், முக்கியமான மீதிப் பாகத்தை அவனே பொறுப்பேற்று நடத்தலாம், எல்லாமே சரிதான், ஆனால் இன்னொரு பிரச்சினை இருக்கிறதே!” என்று மாதங்கியின் விரல்களோடு

விளையாடலானான் யுகேந்திரன்,

விரல்கள் வழியே அறியாத புது உணர்வு உடல் முழுவதும் பரவத் தடுமாற்றத்துடன். “எஎன்ன பிரச்சினை?” என்று வினவினாள் மனைவி,

முறுவலித்து “நான் அங்கே வந்தால் முன்போல இருக்க முடியாதே,” என்று அவளது உள்ளங்கையில் கோலமிட்டான் கணவன்,

உள்ளங்கைக் குறுகுறுப்பை சமாளிக்க முயன்றபடி. “முன் போலத்தான் இருக்க வேண்டும் என்று நான் சொன்னதில்லையே!” என்றாள் அவள்,

“ஆனால் எல்லாம் அவிடத்து ஐடியாதானே?”

“ஐடியா என்றால் அது மாறாதா? மாற்றக் கூடாதா?”

“அப்படியானால் இப்போது மாறிவிட்டது என்கிறாயா?” என்றவனின் கைகள் இப்போது மனைவியின் தோளை வருடின,

கன்னங்கள் செம்மையுற. “ம்ம்ம்      இதற்கு நேரடியாகப் பதில் சொல்வது கடினம், ஆனால் மௌனம் சம்மதம் என்பார்கள்!” என்று இரு கைகளாலும் வாயைப் பொத்திக்கொண்டு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்து நகைத்தாள் அவள்,

வியப்பும் புன்னகையுமாகப் பார்த்தவனுக்கு உடனே முகம் தெளிந்தது, “அதாவது. சம்மதத்தைச் சொல்லும் விதமாக நீங்கள் மௌனமாக இருப்பதாகச் செய்கையில் காட்டுகிறீர்களாக்கும்?” என்று கேட்டான் அவன்,

“ஆம்” என்பது போல அவள் வேகமாகத் தலையை ஆட்டவும். புன்னகையை அடக்கிக்கொண்டு. “ஆனால் இது எனக்குச் சரிவராதே! “ என்று கைகளை விரித்தான் யுகேந்திரன்,

ஏன் என்பது போல அவள் திகைத்து நோக்க. “இப்படி வாயைப் பொத்திக் கொண்டால் எப்படி இது முடியும்?” என்று கணவன் தன் உதடுகளைத் தொட்டுக் காட்டினான்,

டக்கென வாயைப் பொத்தியிருந்த கைகளை மாதங்கி விலக்கிக்கொண்ட வேகத்தில் இருவருக்குமே ஒரேயடியாகச் சிரிப்பு வந்துவிட்டது!